## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 1

**1] முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு, தாயுமானவர்**

2] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்

3] திருமந்திரம், திருமூலர்

4] திருவாசகம், மாணிக்கவாசகர்

**2] கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த; விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] தாயுமானவர் திருப்பாடல் திரட்டு, தாயுமானவர்**

2] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்

3] திருமந்திரம், திருமூலர்

4] திருவாசகம், மாணிக்கவாசகர்

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] சுடர் - ஒளி

2] ஆனந்தம் - மகிழ்ச்சி

3] பராபரம் - மேலான பொருள், இறைவன்

**4] நவ்வி - சிறுத்தை**

**குறிப்பு** :- நவ்வி - மான்

**4] தாயுமானவர் பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன், அம்மணி அம்மாள்

2] சாத்தப்பன், விசாலாட்சி

3] முருகப்பன், சாந்தம்மாள்

**4] கேடிலியப்பர், கெசவல்லி அம்மையார்**

**5] தாயுமானவர் மனைவி பெயர்?**

1] விசாலாட்சி

2] ராஜம்மாள்

**3] மட்டுவார்குழலி**

4] திலகவதி

**6] தாயுமானவர் ஊர்?**

1] தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையாபுரம்

2] திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி

3] விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர்

**4] நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்)**

**7] தாயுமானவர் அவர்கள் செய்த பணி?**

**1] திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூலஅலுவலர்**

2] திருமலை நாயக்கரின் அவைப்புலவர்

3] சடையப்ப வள்ளலின் உதவியாளர்

4] இவற்றில் ஏதுமில்லை

**8] தாயுமானவர் அவர்களின் காலம்?**

1] கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு

2] கி. பி. பதினாறாம் நூற்றாண்டு

3] கி. பி. பதினேழாம் நூற்றாண்டு

**4] கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு**

**9] திருச்சிராப்பள்ளி மலைமீது எழுந்தருளியுள்ள இறைவனான தாயுமானவரின் திருவருளால் பிறந்தமையால், இவருக்குத் தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது. தாயுமானவர் நினைவு இல்லம் -------------------- மாவட்டத்து இலட்சுமிபுரத்தில் உள்ளது.**

1] திருச்சி

2] சிவகங்கை

3] விருதுநகர்

**4] இராமநாதபுரம்**

**10] விடுபட்டதை நிரப்புக.**

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**

**---------------- ------------ -------------**

**1] வினைக்கரிய யாவுள காப்பு**

2] பின்நீர பேதையார் நட்பு

3] பண்புடை யாளர் தொடர்பு

4] மேற்சென்று இடித்தற் பொருட்டு

**11] விடுபட்டதை நிரப்புக.**

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**

--------------- ----------- -----------

1] வினைக்கரிய யாவுள காப்பு

**2] பின்நீர பேதையார் நட்பு**

3] பண்புடை யாளர் தொடர்பு

4] மேற்சென்று இடித்தற் பொருட்டு

**12] விடுபட்டதை நிரப்புக.**

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**

----------- ------------ -------------

1] வினைக்கரிய யாவுள காப்பு

2] பின்நீர பேதையார் நட்பு

**3] பண்புடை யாளர் தொடர்பு**

4] மேற்சென்று இடித்தற் பொருட்டு

**13] விடுபட்டதை நிரப்புக.**

**நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**

---------------- ----------------- ---------------

1] வினைக்கரிய யாவுள காப்பு

2] பின்நீர பேதையார் நட்பு

3] பண்புடை யாளர் தொடர்பு

**4] மேற்சென்று இடித்தற் பொருட்டு**

**14] விடுபட்டதை நிரப்புக.**

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**

--------------- ------------- -----------

**1] நட்பாங் கிழமை தரும்**

2] அகநக நட்பது நட்பு

3] அல்லல் உழப்பதாம் நட்பு

4] இடுக்கண் களைவதாம் நட்பு

**15] விடுபட்டதை நிரப்புக.**

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

------------ ----------- -----------

1] நட்பாங் கிழமை தரும்

**2] அகநக நட்பது நட்பு**

3] அல்லல் உழப்பதாம் நட்பு

4] இடுக்கண் களைவதாம் நட்பு

**16] விடுபட்டதை நிரப்புக.**

**அழிவி னவைநீக்கி ஆறுயத்து அழிவின்கண்**

----------- ------------ -----------

1] நட்பாங் கிழமை தரும்

2] அகநக நட்பது நட்பு

**3] அல்லல் உழப்பதாம் நட்பு**

4] இடுக்கண் களைவதாம் நட்பு

**17] விடுபட்டதை நிரப்புக.**

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

--------------- ------------ -------------

1] நட்பாங் கிழமை தரும்

2] அகநக நட்பது நட்பு

3] அல்லல் உழப்பதாம் நட்பு

**4] இடுக்கண் களைவதாம் நட்பு**

**18] விடுபட்டதை நிரப்புக.**

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**

------------ ------------- -----------

**1] ஒல்லும்வாய் ஊன்றும் நிலை**

2] புனையினும் புல்லென்னும் நட்பு

3] அல்லல் உழப்பதாம் நட்பு

4] இடுக்கண் களைவதாம் நட்பு

**19] விடுபட்டதை நிரப்புக.**

**இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**

------------ --------------- -----------

1] ஒல்லும்வாய் ஊன்றும் நிலை

**2] புனையினும் புல்லென்னும் நட்பு**

3] அல்லல் உழப்பதாம் நட்பு

4] இடுக்கண் களைவதாம் நட்பு

**20] முதற்பாவலர், பொய்யில் புலவர், பெருநாவலர், செந்நாப்போதார் - என்று அழைக்கப்படுபவர்?**

1] பாரதியார்

2] மாணிக்கவாசகர்

**3] திருவள்ளுவர்**

4] கம்பர்

winmeen

**21] திருவள்ளுவர் காலம் -------------இல் பிறந்தவர் என உறுதிசெய்து, திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்பட்டுள்ளது.**

1] கிமு 21

2] கிமு 11

3] கிமு 41

**4] கிமு 31**

**22] வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - என்று கூறியவர் யார்?**

**1] பாரதியார்**

2] மாணிக்கவாசகர்

3] பாரதிதாசன்

4] வாணிதாசன்

**23] வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

2] மாணிக்கவாசகர்

**3] பாரதிதாசன்**

4] வாணிதாசன்

**24] திருக்குறள் ---------- நூல்களுள் ஒன்று.**

**1] பதினெண் கீழ்க்கணக்கு**

2] பதினெண் மேல்கணக்கு

3] ஐம்பெரும் காப்பியங்கள்

4] ஐஞ்சிறும் காப்பியங்கள்

**25] உலகப் பொதுமறை - எனப் போற்றப்படும் நூலின் ஆசிரியர் பெயர்?**

1] கம்பர்

2] மாணிக்கவாசகர்

3] ஔவையார்

**4] திருவள்ளுவர்**

**26] வாயுறை வாழ்த்து, பொதுமறை, பொய்யா மொழி, தெய்வ நூல் முதலிய பெயர்களும் ------------ நூலுக்கு உண்டு.**

1] திருவாசகம்

2] திருவாரூர் நான்மணிமாலை

3] நாலடியார்

**4] திருக்குறள்**

**27] --------------- நூலின் பெருமையை உணர்ந்த வீரமாமுனிவர் இலத்தீனிலும், ஜி.யு. போப் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தனர்.**

1] திருவாசகம்

2] திருவாரூர் நான்மணிமாலை

3] நாலடியார்

**4] திருக்குறள்**

**28] ------------ நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் திருக்குறளும் இடம்பெற்றுள்ளது.**

1] எகிப்து

2] நார்வே

3] சிங்கப்பூர்

**4] உருசிய**

**29] ------------ நாட்டிலுள்ள அருங்காட்சியகத்தில் திருக்குறள், விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது.**

**1] இங்கிலாந்து**

2] நார்வே

3] சிங்கப்பூர்

4] உருசிய

**30] கேண்மை - என்ற சொல்லின் எதிர்சொல்?**

1] நட்பு

2] உறவு

**3] பகை**

4] வருத்தம்

**31] புதுக்கவிதைக்குப் ----------------?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசனார்

3] திரு. வி. கலியாணசுந்தரனார்

4] மறைமலையடிகள்

**32] சமுதாயப் புரட்சிக்குப் ----------- ?**

1] பாரதியார்

**2] பாரதிதாசனார்**

3] திரு. வி. கலியாணசுந்தரனார்

4] மறைமலையடிகள்

**33] பொதுவுடைமைக்குத் ----------?**

**1] திரு. வி. கலியாணசுந்தரனார்**

2] மறைமலையடிகள்

3] பாரதிதாசனார்

4] பாரதியார்

**34] தனித்தமிழுக்கு --------------- ?**

1] பாரதியார்

2] பாரதிதாசனார்

3] திரு. வி. கலியாணசுந்தரனார்

**4] மறைமலையடிகள்**

**35] பேச்சுக்கலைக்கு ---------?**

**1] அறிஞர் அண்ணாதுரை**

2] பாரதிதாசனார்

3] திரு. வி. கலியாணசுந்தரனார்

4] மறைமலையடிகள்

**36] சிறுகதைக்கு ---------------?**

**1] புதுமைப்பித்தன்**

2] பாரதிதாசனார்

3] திரு. வி. கலியாணசுந்தரனார்

4] மறைமலையடிகள்

**37] வீரமாமுனிவர் அவர்களின் காலம் ------------?**

1] 1780-1847

2] 1670-1737

3] 1690-1757

**4] 1680-1747**

**38] வீரமாமுனிவர் அவர்களின் ஊர்?**

1] எகிப்து

2] இசுரேல்

**3] இத்தாலி**

4] பிரான்ஸ்

**39] வீரமாமுனிவர் அவர்களின் இயற்பெயர்?**

**1] கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி**

2] வின்ஸ்டன்

3] மேத்யூஸ்

4] இவற்றில் ஏதுமில்லை

**40] வீரமாமுனிவர் தமது --------------- அகவையில் சமயத் திருப்பணியாற்ற தமிழகத்துக்கு வந்தார்.**

1] இருபதாம்

**2] முப்பதாம்**

3] நாற்பதாம்

4] பதினெட்டாம்

**41] ஆங்கிலம், எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளை அறிந்திருந்தாலும் தமிழ்மொழியின்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**42] தமிழ்மொழிப் பற்றினால் ---------- என முதலில் சூட்டிக் கொண்ட தம் பெயரைத் தனித்தமிழாக்கி "வீரமாமுனிவர்" எனச் சூட்டிக் கொண்டார்.**

1] அசோகர்

**2] தைரியநாதர்**

3] விசாகர்

4] சாம்ராட்

**43] ----------------- என்பவர், தமிழில் முதன் முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்.**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**44] தேம்பாவணி என்னும் கிறித்தவக் காப்பியத்தை இயற்றியவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**45] தமிழ் எழுத்து வரிவடிவத்தைத் திருத்தி, எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**46] தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கணநூலைப் படைத்தவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**47] கலம்பகம், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றியவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**48] பரமார்த்தகுரு கதை என்னும் நகைச்சுவை நூலை எழுதியவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] வீரமாமுனிவர்**

3] காரல் மார்க்ஸ்

4] இவர்களில் யாருமில்லை

**49] "தேம்பாவணி, காவலூர்க்கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கின்றது; தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது; வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்" என ------------ என்பவர் வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டினார்.**

1] மகாகவி பாரதியார்

2] தமிழ்த்தென்றல் திரு.வி.க

**3] சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை**

4] தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த் வாணிதாசன்

**50] குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் காலம்?**

1] 1768 - 1815

2] 1778 - 1825

3] 1798 - 1845

**4] 1788 - 1835**

**51] “மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்” என்று புலவர் பெருமக்களால் புகழப்பட்டவர் குணங்குடி மஸ்தான் சாகிபு. இவரின் இயற்பெயர் --------------------- என்பதாகும்.**

1] அபுதாஹிர்

2] கலீல் ரகுமான்

3] அப்துல் ரகுமான்

**4] சுல்தான் அப்துல் காதிறு**

**52] சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளுக்குச் சென்று, தனித்திருந்துஞானம் பெற்றவர் யார்?**

1] அபுதாஹிர்

2] கலீல் ரகுமான்

3] அப்துல் ரகுமான்

**4] குணங்குடி மஸ்தான் சாகிபு (சுல்தான் அப்துல் காதிறு)**

**53] கீழ்க்கண்ட இவர்களில், தாயுமானவரின் பாடல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] குணங்குடி மஸ்தான் சாகிபு**

4] வாணிதாசன்

**54] தாயுமானவரின் பராபரக்கண்ணியைப் போலவே ஓசைநயமிக்க இசுலாமியப் பாடல்களை இயற்றி அருளியவர் இவர். பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலியன இவர் பாடிய வேறு சில கண்ணிகள்.இவர் யார்?**

1] மறைமலையடிகள்

2] பாரதிதாசன்

**3] குணங்குடி மஸ்தான் சாகிபு**

4] அப்துல் ரகுமான்

**55] --------- என்பவரின் பாடல்கள், உலகின் உண்மை நிலையை உணர்த்துவன; என்றும் அழியாப் பேரின்பப் பெருவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வன. இவர் குருநிலை, தவநிலை, துறவுநிலை, நியமநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமாதிநிலை எனப் பொருள் தரும் வகையில் பாடல்கள் பல இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றினார்.**

1] மறைமலையடிகள்

2] பாரதிதாசன்

**3] குணங்குடி மஸ்தான் சாகிபு**

4] அப்துல் ரகுமான்

**56] திருத்தணிச் சரவணப் பெருமாள், --------------- என்னும் இவர்மீது கொண்ட பற்றினால் நான்மணிமாலை ஒன்றனைப் பாடியுள்ளார். அந்நூலில், "மடல் சூழ் புவியில் உளத்திருளைக் கருணை ஒளியினாற் களைந்து, விடல் சூழ்பவரின்**

**குணங்குடியான், மிக்கோன் எனற்கு ஓர் தடையுளதோ?' எனக் கேட்கின்றார். 'தடை உண்டு என உரைப்பார் தமிழுலகில்இல்லை.**

1] மறைமலையடிகள்

2] பாரதிதாசன்

**3] குணங்குடி மஸ்தான் சாகிபு**

4] அப்துல் ரகுமான்

**57] ஆறுமுக நாவலர் அவர்களின் காலம்?**

1] 1852 - 1899

2] 1842 - 1899

3] 1832 - 1889

**4] 1822 - 1879**

**58] --------------- நல்லூரில் பிறந்தவர் ஆறுமுக நாவலர்.**

**1] யாழ்ப்பாணம்**

2] கேரளா

3] மும்பை

4] திருச்சி

**59] இக்கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவருடைய இயற்பெயர் ஆறுமுகனார் என்பதாகும். இவர், இளமையிலேயே சைவ சித்தாந்த நூல்களையும் திருமுறைகளையும் தெளிவாகக் கற்றார். தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும் ஒரு சேரக் கைவரப் பெற்றார்; அதனால், இரு மொழி கற்பிக்கும் ஆசிரியராகவும் திகழ்ந்தார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மீனாட்சி சுந்தரனார்

3] அயோத்திதாசப் பண்டிதர்

**4] ஆறுமுக நாவலர்**

**60] இக்கூற்று யாருடன் தொடர்புடையது?**

**திருவாவடுதுறை ஆதீனத்தார் இவருக்கு "நாவலர்" என்னும் பட்டத்தைச் சூட்டிச் சிறப்பித்தனர். இவர்,சிறந்த பதிப்பாசிரியராகவும் தேர்ந்த உரைநடையாசிரியராகவும் விளங்கினார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மீனாட்சி சுந்தரனார்

3] அயோத்திதாசப் பண்டிதர்

**4] ஆறுமுக நாவலர்**

**61] --------- என்பவரே, முதன் முதலில் இலக்கண வழுவற்ற தூய்மையான எளிய தமிழ் உரைநடையைக் கையாண்டார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மீனாட்சி சுந்தரனார்

3] அயோத்திதாசப் பண்டிதர்

**4] ஆறுமுக நாவலர்**

**62] ஆறுமுக நாவலரை, "வசனநடை கைவந்த வல்லாளர்" என ------------ என்பவர் பாராட்டியுள்ளார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மீனாட்சி சுந்தரனார்

3] அயோத்திதாசப் பண்டிதர்

**4] பரிதிமாற்கலைஞர்**

**63] இக்கூற்று யாருடன் தொடர்புடையது?**

**ஆறுமுக நாவலர், சென்னையில் அச்சுக்கூடம் அமைத்தார். அந்த அச்சுக்கூடத்தில் சிறந்த தமிழ்நூல்களைப் பதிப்பித்தார். பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை முதலிய இலக்கிய நூல்களையும், இலக்கண வினாவிடை இலக்கணச் சுருக்கம், நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, இலக்கணக்கொத்து, இலக்கணச் சூறாவளி முதலிய இலக்கண நூல்களையும் தம் அச்சுக்கூடத்தின் வாயிலாகப் பதிப்பித்தார்; முதல் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரைக்கான பால பாடங்களையும் எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.**

1] வேங்கட மகாலிங்கம்

2] மீனாட்சி சுந்தரனார்

3] அயோத்திதாசப் பண்டிதர்

**4] ஆறுமுக நாவலர்**

**64] ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், கிபி -------- ஆம் ஆண்டு ஏப்பிரல் 24ஆம் நாள் பிறந்தார்.**

1] 1850

2] 1840

3] 1830

**4] 1820**

**65] ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், ------------ நாட்டின் எட்வர்டு தீவில் பிறந்தார்.**

1] இத்தாலி

2] இங்கிலாந்து

**3] பிரான்சு**

4] ஆசுதிரேலியா

**66] ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், அவர்களின் பெற்றோர் பெயர்?**

**1] ஜான் போப், கெதரின் யுளாப்**

2] வின்சென்டு, கேத்தரின் தெரசா

3] செபாஸ்டியன், மரியா

4] இவர்களில் யாருமில்லை

**67] ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், அவர்களின் தமையனார் பெயர்?**

**1] ஹென்றி**

2] ஜோசப்பு

3] வின்சென்ட்

4] சேவியர்

**68] ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், தம்முடைய -------------- ஆம் அகவையில் தமிழகத்தில் சமயப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

1] பதினாறாம்

2] பதினேழாம்

3] பதினெட்டாம்

**4] பத்தொன்பதாம்**

**69] ஜி. யு. போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப், பாய்மரக் கப்பலில் சென்னை வந்து சேர --------------- திங்கள் ஆயின.**

1] ஆறு

2] ஏழு

**3] எட்டு**

4] ஒன்பது

**70] தமிழ்நாட்டில் சென்னைச் சாந்தோம் பகுதியில் சமயப்பணி ஆற்றிய போப், பின்னர்த் ----------------- மாவட்டத்துக்குச் சென்று, சாயர்புரத்தில் தங்கிச் சமயப்பணி ஆற்றத் தொடங்கினார். அவர், அங்குப் பள்ளிகளை நிறுவினார்;**

1] தூத்துக்குடி

**2] திருநெல்வேலி**

3] விருதுநகர்

4] இராமநாதபுரம்

**71] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**கல்விப் பணியையும் சமயப் பணியையும் ஒருங்கே ஆற்றினார்; சமயக் கல்லூரியில் தமிழ் இலக்கியங்கள், ஆங்கில இலக்கியங்கள் முதலியவற்றையும் கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய மொழிகளையும் கற்றுத் தர ஏற்பாடு செய்தார். கணிதம், அறிவாய்வு (தருக்கம்), மெய்யறிவு (தத்துவம்) ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார்.**

1] கால்டுவெல்

2] வீரமாமுனிவர்

**3] ஜி. யு. போப்**

4] இவர்களில் யாருமில்லை

**72] திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் ---------- முதல் 1849 ஆம் ஆண்டு வரை கல்விப்பணியும் சமயப் பணியும் ஆற்றிய ஜி. யு. போப், இங்கிலாந்துக்குச் சென்றார்.**

1] 1812

2] 1822

3] 1832

**4] 1842**

**73] ஜி. யு. போப் அவர்கள், 1850ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார். தம் மனைவியுடன் மீண்டும் தமிழகம் வந்து, ----------- சமயப்பணியாற்றத் தொடங்கினார்.**

1] திருச்சி

2] இராமநாதபுரம்

3] சென்னை

**4] தஞ்சாவூர்**

**74] தஞ்சையில் பணியாற்றிய -------- ஆண்டு காலத்தில், புறநானூறு முதலான சங்கநூல்களையும் நன்னூல் முதலான இலக்கணங்களையும் பயின்றார்.**

1] ஏழு

2] ஆறு

**3] எட்டு**

4] ஒன்பது

**75] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய நூல்களைப் பலமுறை படித்து, அவற்றின் நயங்களை உணர்ந்தார். அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டால், மேலை நாட்டவர் அறிந்து பயனுறுவர் என்னும் உயர்ந்த எண்ணத்தோடு அம்முயற்சியில் ஈடுபட்டார். இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில், தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார். அக்கட்டுரைகளில் புறநானூற்றுப் பாடல்களும், புறப்பொருள் வெண்பாமாலைத் திணைவிளக்கங்களும், தமிழ்ப்புலவர் வரலாறும் இடம்பெற்றிருந்தன.**

1] வீரமாமுனிவர்

2] கால்டுவெல்

**3] ஜி யு போப்**

4] கெல்லட்

**76] ஜி யு போப், உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் -------------- செய்யுள்களை, அறநூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் 'தமிழ்ச்செய்யுட்கலம்பகம்' என்னும் நூலாகத் தொகுத்ததோடு, அந்தப் பாக்களுக்கு விளக்கமும் தந்துள்ளார்.**

1] முந்நூறு

2] நாநூறு

3] ஐந்நூறு

**4] அறுநூறு**

**77] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**தமிழைக் கற்கும் காலத்திலேயே நூலாசிரியராகவும் விளங்கினார். பள்ளியில் படிக்கும் குழந்தைகள் இலக்கணத்தை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வினாவிடை முறையில் அமைந்த இரு இலக்கண நூல்களை அவர் எழுதினார்.**

1] வீரமாமுனிவர்

2] கால்டுவெல்

**3] ஜி யு போப்**

4] கெல்லட்

**78] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றனையும், ஆங்கிலம் - தமிழ் அகராதி ஒன்றனையும் இவர் வெளியிட்டார்; தமிழில் வரலாற்று நூல்களையும் எழுதினார்; பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து சில செய்யுள்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு, அதனைப் பாடநூலாக வைக்கஏற்பாடு செய்தார். தமிழில் உரைநடை நூல் ஒன்றனையும் எழுதினார்.**

1] வீரமாமுனிவர்

2] கால்டுவெல்

**3] ஜி யு போப்**

4] கெல்லட்

**79] ஜி யு போப், ---------- ஆம் ஆண்டில் உதகமண்டலம் சென்று, பள்ளி ஒன்றனைத் தொடங்கி, அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார்.**

1] 1828

2] 1838

3] 1848

**4] 1858**

**80] தாயகத்துக்குச் சென்ற ஜி யு போப், ---------- முதல் ----------- ஆம் ஆண்டு வரை இருபத்து மூன்றாண்டுகளாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.**

1] 1882 முதல் 1905

2] 1883 முதல் 1906

3] 1884 முதல் 1907

**4] 1885 முதல் 1908**

**81] திருக்குறளை நாற்பதாண்டுகள் படித்துச் சுவைத்த ஜி யு போப், அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து --------- ஆம் ஆண்டில் வெளியிட்டார்.**

1] 1883

2] 1884

3] 1885

**4] 1886**

**82] தமது எண்பதாம் அகவையில் ஜி யு போப், ---------- ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பினை வெளியிட்டார். தம் இறுதிக் காலத்தில் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.**

**1] 1900**

2] 1901

3] 1902

4] 1903

**83] தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய ஜி யு போப், -------- ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினொன்றாம் நாள் தம் இன்னுயிரை நீத்தார்.**

1] 1905

2] 1906

3] 1907

**4] 1908**

**84] ------------------ என்பவர், தம் கல்லறையில், 'இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' என எழுதவேண்டு மென்று தமது இறுதி முறியில் (உயில்) எழுதிவைத்தார். ஆங்கில மொழியினை அன்னை மொழியாகக் கொண்ட போப், "தமிழ் மாணவன்' என்று தம்மை அறிவித்துக் கொண்டமை, தமிழ் மாட்சியே!**

**1] ஜி யு போப்**

2] வீரமாமுனிவர்

3] கால்டுவெல்

4] கெப்ளிங்

**85] குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். குறுமை என்றால் குறுகிய என்பது பொருள். இயல் என்றால் ஓசை. உகரம் என்றால் ----------- என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம்.**

1] ஏ

2] எ

**3] உ**

4] கு

**86] குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, மெய்க்கு ------------ மாத்திரை என்னும் கால அளவில் தான் எழுத்துகளை ஒலித்தல்வேண்டும்.**

**1] அரை**

2] ஒன்று

3] ஒன்றரை

4] இரண்டு

**87] உகரம் குறிலானதனால் ஒரு மாத்திரைக் கால அளவே ஒலித்தல் வேண்டும். ஆனால், அஃது ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் சில சொற்களில் அரை மாத்திரைக் கால அளவே ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பதனைத் தான் ---------- என இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர்.**

1] முற்றியலுகரம்

2] குற்றியலிகரம்

**3] குற்றியலுகரம்**

4] இவற்றில் ஏதுமில்லை

88] 88] கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போதும், பல எழுத்துகளைச் சார்ந்து சொல்லின் இறுதியில் வரும்போதும் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம், --------------------- எனப்படும்.

1] முற்றியலுகரம்

2] குற்றியலிகரம்

3] குற்றியலுகரம்.

4] இவற்றில் ஏதுமில்லை

**89] சொல்லின் ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக் கொண்டு, குற்றியலுகரத்தை ------------ வகையாகப் பிரிப்பர்.**

1] நான்கு

2] ஐந்து

**3] ஆறு**

4] ஏழு

**90] உயிர்நெடில், உயிர்மெய் நெட்டெழுத்துகளை அடுத்து வரும் உகரமேறிய வல்லின எழுத்துகள் ------------------- குற்றியலுகரம் எனப்படும்.**

**1] நெடில் தொடர்**

2] ஆய்தத் தொடர்

3] உயிர்த் தொடர்

4] வன்றொடர்

**91] ----------------- குற்றியலுகரம் மட்டுமே இரண்டு எழுத்துகளைப் பெற்றுவரும். (எ-டு) ஆடு, மாடு, காது.**

**1] நெடில் தொடர்**

2] ஆய்தத் தொடர்

3] உயிர்த் தொடர்

4] வன்றொடர்

**92] தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறையாத உகரம் -------------?**

**1] முற்றியலுகரம்**

2] குற்றியலிகரம்

3] குற்றியலுகரம்

4] இவற்றில் ஏதுமில்லை

**93] பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்; செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] சிலப்பதிகாரம்

**2] கம்பராமாயணம்**

3] பழமொழி நானூறு

4] மணிமேகலை

**94] அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்; வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] சிலப்பதிகாரம்

**2] கம்பராமாயணம்**

3] பழமொழி நானூறு

4] மணிமேகலை

**95] குறிஞ்சிக்கலி கபிலரால் இயற்றப்பட்டது. - இது எந்த சொற்றொடர் வகை?**

**1] செயப்பாட்டு வினை**

2] செய்வினை

3] உணர்ச்சித்தொடர்

4] எதிர்மறைத் தொடர்

**96] கபிலர் குறிஞ்சிக்கலியை இயற்றினார் - இது எந்த சொற்றொடர் வகை?**

1] செயப்பாட்டு வினை

**2] செய்வினை**

3] உணர்ச்சித்தொடர்

4] எதிர்மறைத் தொடர்

**97] 'முயற்சி திருவினையாக்கும்' என்பது ஆன்றோர் மொழி - இது எந்த சொற்றொடர் வகை?**

1] வினாத்தொடர்

**2] செய்தித் தொடர்**

3] உணர்ச்சித்தொடர்

4] எதிர்மறைத் தொடர்

**98] என்னே, அருவியின் அழகு! - இது எந்த சொற்றொடர் வகை?**

1] வினாத்தொடர்

2] செய்தித் தொடர்

**3] உணர்ச்சித்தொடர்**

4] எதிர்மறைத் தொடர்

**99] கண்ணன் பாடம் படித்திலன் - இது எந்த சொற்றொடர் வகை?**

1] வினாத்தொடர்

2] செய்தித் தொடர்

3] உணர்ச்சித்தொடர்

**4] எதிர்மறைத் தொடர்**

**100] கண்ணன் பாடம் படித்தான் - இது எந்த சொற்றொடர் வகை?**

1] வினாத்தொடர்

2] செய்தித் தொடர்

3] உணர்ச்சித்தொடர்

**4] உடன்பாட்டுத் தொடர்**

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 2

**1] குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே; கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] இனியவை நாற்பது, மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] திரிகடுகம், நல்லாதனார்

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**2] மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும் திருவுந்தீர் வின்றேல் இனிது - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] இனியவை நாற்பது, மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] திரிகடுகம், நல்லாதனார்

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**3] சலவரைச் சாரா விடுதல் இனிதே; புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] இனியவை நாற்பது, மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] திரிகடுகம், நல்லாதனார்

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**4] மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்; தகுதியால் வாழ்தல் இனிது - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] இனியவை நாற்பது, மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] திரிகடுகம், நல்லாதனார்

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] குழவி - குழந்தை

2] பிணி - நோய்

3] மயரி - மயக்கம்

**4] கழரும் - மகிழும்**

**குறிப்பு :- கழரும் - பேசும்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] சலவர் - வஞ்சகர்

2] மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்

3] கேழல் - பன்றி

**4] நவ்வி - சிறுத்தை**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**7] மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் அவர்களின் காலம்?**

1] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

2] கி.பி. நான்காம் நூற்றாண்டு

3] கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

**4] கி.பி. இரண்டாம் நூற்றாண்டு**

**8] மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் அவர்கள் பிறந்த ஊர்?**

**1] மதுரை**

2] யாழ்ப்பாணம்

3] திருச்சி

4] கேரளா

**9] இனியவை நாற்பது ---------- நூல்களுள் ஒன்று.**

**1] பதினெண் கீழ்க்கணக்கு**

2] பதினெண் மேல்கணக்கு

3] ஐம்பெரும் காப்பியங்கள்

4] ஐஞ்சிறும் காப்பியங்கள்

**10] இனியவை நாற்பது நூலில் எத்தனை பாடல்கள் உள்ளன?**

1] 39 **2] 40** 3] 41 4] 42

**11] பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை - என்னைப்; போற்றும் புகழ் எனக்கு வேண்டியதில்லை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கனிச்சாறு, பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2] குழந்தை இலக்கியம், வாணிதாசன்

3] தமிழியக்கம், பாரதிதாசன்

**4] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்**

**12] மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை-அந்த; மாறன் அழகெனக்கு வேண்டியதில்லை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கனிச்சாறு, பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2] குழந்தை இலக்கியம், வாணிதாசன்

3] தமிழியக்கம், பாரதிதாசன்

**4] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்**

**13] கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா-உயிர்க்; கம்பன் கவியெனக்கு வேணுமேயடா ! - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கனிச்சாறு, பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2] குழந்தை இலக்கியம், வாணிதாசன்

3] தமிழியக்கம், பாரதிதாசன்

**4] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்**

**14] நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை; நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிட வேண்டும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கனிச்சாறு, பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2] குழந்தை இலக்கியம், வாணிதாசன்

3] தமிழியக்கம், பாரதிதாசன்

**4] தமிழ்ப்பசி, க. சச்சிதானந்தன்**

**15] க. சச்சிதானந்தன் - அவர்கள் பிறந்த ஊர் எது?**

**1] இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை**

2] கேரளாவில் உள்ள ஆலப்புழா

3] தமிழ்நாட்டில் உள்ள சிவகங்கை

4] இவற்றில் ஏதுமில்லை

**16] க. சச்சிதானந்தன் - அவர்கள் ---------------- ஆகப் பணியாற்றினார்.**

1] கோவிலில் அர்ச்சகர்

2] அரசவைக் கவிஞர்

**3] ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளர் பணி**

4] இவற்றில் ஏதுமில்லை

**17] ஆனந்தத்தேன் (கவிதைத்தொகுதி - 1954), அன்னபூரணி (புதினம்), யாழ்பாணக்காவியம் - ஆகிய நூல்களின் ஆசிரியர்?**

1] வாணிதாசன்

**2] க. சச்சிதானந்தன்**

3] புதுமைப் பித்தன்

4] ராஜம் கிருஷ்ணன்

**18] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**மகாவித்துவான் நவநீதகிருட்டின பாரதியாரின் மாணவர். இவர் தம் பாடல்களில் கம்பனின் மிடுக்கையும், பாரதியின் சினப்போக்கையும் ஒருமித்துக் காணலாம்.**

1] வாணிதாசன்

**2] க. சச்சிதானந்தன்**

3] புதுமைப் பித்தன்

4] ராஜம் கிருஷ்ணன்

**19] ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் அன்புத் தொண்டர் ஆறுபேர்கள் அறியச் செய்வார் செய்தியினை என்று குறிப்பிட்டுள்ளவர் யார்?**

1] ஜான் ஷோர்

2] வின்செண்ட்

**3] கிப்ளிங்**

4] கெல்லட்

**20] --------------- இதழின் செய்தியாளர், இந்திய சீனப் போரின் போது நேரடியாகப் போர் நடைபெறும் இடத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டினார்.**

1] சிங்கப்பூர் டைம்ஸ்

2] சீனா டைம்ஸ்

**3] லண்டன் டைம்ஸ்**

4] இந்தியன் எக்ஸ்பிரஸ்

**21] ------------------ செய்தியாளர், தில்லியிலுள்ள சிறைச்சாலையின் நிலைபற்றி அறிய, தானே சிறைப்பட்டுச் செய்திகளைத் திரட்டித்தந்து புகழ்பெற்றார்.**

**1] இந்தியன் எக்ஸ்பிரஸ்**

2] தி இந்து

3] எகனாமிக்ஸ் டைம்ஸ்

4] தினமலர்

**22] செய்தியாளர் அறிவியல் ஆய்வு முறைகளையும் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதனையும் அறிந்திருத்தல் வேண்டும். ---------- இதற்கு உதவுகிறது. சான்றாகப் பொதுமக்களின் கருத்துகளைக் கூறெடுப்பு ஆய்வு வாயிலாக நடத்தலாம்.**

1] வணிகவியல்

2] அறிவியல்

3] கணிதம்

**4] புள்ளியியல்**

**23] உதவியாசிரியர் குழு செய்த திருத்தங்களுடன் செய்தியானது, -------------- பிரிவுக்கு அனுப்பப்படுகிறது.**

1] தலைமை ஆசிரியர்

2] பக்க வடிவமைப்பாளர்

**3] மெய்ப்புத் திருத்துநர்**

4] செய்தியாசிரியர்

**24] பொருந்தாதது எது? இதழியல் கலைச்சொற்கள்.**

1] Bulletin - சிறப்புச்செய்தி இதழ்

2] Deadline - குறித்த காலம்

3] Editorial - தலையங்கம்

**4] Fake News - சிறப்புச் செய்தி**

**குறிப்பு :- Fake News - பொய்ச்செய்தி**

**25] பொருந்தாதது எது? இதழியல் கலைச்சொற்கள்.**

1] Flash News - சிறப்புச் செய்தி

2] Folio No - இதழ் எண்

**3] Green Proff - திருத்தப்பட்ட அச்சுப்படி**

4] Layout - செய்தித்தாள் வடிவமைப்பு

**குறிப்பு:- Green Proff - திருத்தப்படாத அச்சுப்படி**

**26] காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! இந்தப் பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீதான் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] மறைமலையடிகள்

4] வாணிதாசன்

**27] ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப் பேரறி வாளர் நெஞ்சில் பிறந்தபத் திரிகைப் பெண்ணே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] மறைமலையடிகள்

4] வாணிதாசன்

**28] இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் இயற்சொல் எனப்படும். இது -------- வகைப்படும்.**

1] 1 **2] 2** 3] 3 4] 4

**குறிப்பு:-** இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் இயற்சொல் எனப்படும். இது 2 வகைப்படும்.

**(எ - டு)** :- காற்று, நிலவு, ஞாயிறு, பலகை - இவை எளிதில் பொருள் விளங்கும் பெயர்ச்சொற்கள். இவற்றைப் பெயர் இயற்சொற்கள் என்பர். படித்தான், தூங்கினான், வந்தான் - இவை எளிதில் பொருள் தரும் வினைச்சொற்கள். இவற்றை வினை இயற்சொற்கள் என்பர்.

**29] கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் இருப்பது?**

1] பெயர்ச்சொல்

**2] திரிசொல்**

3] வடசொல்

4] உரிச்சொல்

**குறிப்பு** :- **திரிசொல்** :- கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் இருப்பது திரிசொல். பீலி - மயில்தோகை; உகிர் - நகம்; ஆழி - கடல், சக்கரம்.

**திரிசொல் பெயர்த் திரிசொல், வினைத் திரிசொல் என இருவகையாக வரும்.** எயிறு, வேய், மடி, நல்குரவு (எயிறு - பல்; வேய் - மூங்கில்; மடி - சோம்பல்; நல்குரவு - வறுமை) - என்பன பெயர்த் திரிசொல்.

**வினைத் திரிசொல்** - வினவினான், விளித்தான், நோக்கினார்.

**திசைச்சொல்:-** தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள பிற பகுதிகளிலிருந்து தமிழில் வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள். (கேணி - கிணறு; பெற்றம் - பசு)

**வடசொல்** :- தமிழில் வந்து வழங்கினாலும், தமிழ்ச்சொற்கள் அல்ல. (எ - டு) கமலம், விஷம், புஷ்பம்.

**30] பிரபந்தம் என்பதற்கு ---------- என்பது பொருள்.**

1] நகைச்சுவை

2] சொந்தம்

**3] நன்கு கட்டப்பட்டது**

4] இவற்றில் ஏதுமில்லை

**31] தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் ------------ வகைப்படும்.**

1] 63 **2] 96** 3] 100 4] 108

**32] அமர் - என்பதன் பொருள்?**

1] யானை

**2] போர்**

3] வெற்றி

4] மன்னன்

**33] பரணி இலக்கியங்களுள் மிகச் சிறந்தது?**

1] தக்கயாகப்பரணி

**2] கலிங்கத்துப்பரணி**

3] மோகவதைப் பரணி

4] பாசவதைப் பரணி

**34] ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி எனப் --------------- விளக்குகிறது.**

1] சிலப்பதிகாரம்

**2] பன்னிரு பாட்டியல்**

3] ஆத்திச்சூடி

4] இவற்றில் ஏதுமில்லை

**35] கலிங்கத்துப்பரணி நூலின் ஆசிரியர்?**

1] நல்லாதனார்

2] விளம்பி நாகனார்

**3] சயம் கொண்டார்**

4] ஔவையார்

**36] இலக்கியம் - பிரிக்கும் முறை.**

1] இல + கியம்

**2] இலக்கு + இயம்**

3] இலக் + கியம்

4] இலக்கிய + இம்

**37] "வேல்விழி, நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறு" என்று ஆசிரியர் கூறினார். -இந்த வாக்கியம் எதனுடன் தொடர்புடையது?**

**1] நேர்கூற்று**

2] அயற்கூற்று

3] கட்டளைத்தொடர்

4] இவற்றில் ஏதுமில்லை

**38] கீழ்க்கண்ட எடுத்துக்காட்டு எதனுடன் தொடர்புடையது?**

**ஒருவர் நேரே கூறுவது போல் அமைவது ---------- ஆகும். இவை தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் வரும்.**

**1] நேர்கூற்று**

2] அயற்கூற்று

3] கட்டளைத்தொடர்

4] இவற்றில் ஏதுமில்லை

**39] நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறுமாறு ஆசிரியர் வேல்விழிக்குக் கூறினார். -இந்த வாக்கியம் எதனுடன் தொடர்புடையது?**

1] நேர்கூற்று

**2] அயற்கூற்று**

3] கட்டளைத்தொடர்

4] இவற்றில் ஏதுமில்லை

**40] கவிஞர் சங்கத்தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார். -இந்த வாக்கியம் எதனுடன் தொடர்புடையது?**

1] நேர்கூற்று

**2] அயற்கூற்று**

3] கட்டளைத்தொடர்

4] இவற்றில் ஏதுமில்லை

**41] "தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி" என்று கவிஞர் கூறினார். - இந்த வாக்கியம் எதனுடன் தொடர்புடையது?**

**1] நேர்கூற்று**

2] அயற்கூற்று

3] கட்டளைத்தொடர்

4] இவற்றில் ஏதுமில்லை

**42] கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?**

1] பாரதிதாசன் தமிழைத் தம் உயிர் என்றார். (அயற்கூற்று)

2] "நான் நாளை வருவேன்" எனப் பூவிழி கூறினாள். (நேர்க்கூற்று)

3] சிந்தனைச் செல்வனிடம் வைகறையில் துயிலெழுமாறு ஆசிரியர் கூறினார். (அயற்கூற்று)

**4] வேலன், "பழத்தை எனக்குக் கொடு" என்று கபிலனிடம் கேட்டான். (அயற்கூற்று)**

**குறிப்பு :- வேலன், "பழத்தை எனக்குக் கொடு" என்று கபிலனிடம் கேட்டான். (நேர்க்கூற்று)**

**43] நூலைப் படி - சங்கத்தமிழ்; நூலைப்படி - முறைப்படி; நூலைப்படி -இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] மறைமலையடிகள்

**44] காலையில் படி - கடும்பகல் படி; மாலை இரவு பொருள்படும்படி -இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] மறைமலையடிகள்

**45] கற்பவை கற்கும்படி; வள்ளுவர் சொன்னபடி; கற்கத்தான் வேண்டுமப்படி; கல்லாதவர் வாழ்வதெப்படி ? -இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] மறைமலையடிகள்

**46] அறம்படி பொருளைப்படி அப்படியே இன்பம் படி இறந்த தமிழ் நான்மறை பிறந்ததென்று சொல்லும்படி -இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] மறைமலையடிகள்

**47] சாதி என்னும் தாழ்ந்தபடி, நமக்கெல்லாம் தள்ளுபடி! சேதி அப்படி! தெரிந்துபடி தீமை வந்திடுமே மறுபடி -இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] மறைமலையடிகள்

**48] சரியான வரிசையைத் தேர்ந்தெடு.**

1] உதவியாசிரியர் குழு --> அச்சுப்பக்கம் --> செய்தியாசிரியர் --> பக்கவடிவமைப்பு

2] பக்கவடிவமைப்பு --> அச்சுப்பக்கம் --> செய்தியாசிரியர் --> உதவியாசிரியர் குழு

**3] உதவியாசிரியர் குழு --> செய்தியாசிரியர் --> பக்கவடிவமைப்பு --> அச்சுப்பக்கம்.**

4] உதவியாசிரியர் குழு --> பக்கவடிவமைப்பு --> அச்சுப்பக்கம் --> செய்தியாசிரியர்

**49] சலவர் இச்சொல்லின் எதிர்ச்சொல்?**

1] நண்பர் **2] நல்லவர்** 3] வஞ்சகர் 4] உறவினர்\

**50] குவை என்பதன் பொருள்?**

1] குவளை

**2] குவியல்**

3] அவியல்

4] மலை

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 3

**1] தினையளவு போதாச் சிறுபுல்நீர நீண்ட; பனையளவு காட்டும் படித்தால் மனையளகு - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] திருவள்ளுவமாலை, கபிலர்**

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**2] வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார் ; வெள்ளைக் குறட்பா விரி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] திருவள்ளுவமாலை, கபிலர்**

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

winmeen

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வள்ளை - நெல் குத்தும் போது பெண்களால் பாடப்படும் உலக்கைப் பாட்டு

2] அளகு - கோழி

3] நவ்வி - மான்

**4] கேழல் - பறவை**

**குறிப்பு :-கேழல் - பன்றி**

**4] ----------- என்பவர், கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவரென்றும், சங்க காலத்திற்குபின் வாழ்ந்தவரென்றும் குறிப்பிடுவர்.**

1] சீத்தலைச்சாத்தனார்

2] இளங்கோவடிகள்

**3] கபிலர்**

4] திருவள்ளுவர்

**5] திருக்குறளின் சிறப்பினை உணர்த்த திருவள்ளுவமாலை என்னும் தனிநூல் ஒன்று இயற்றப்பட்டது. இந்நூலில் --------------- பாடல்கள் உள்ளன.**

1] 32

2] 43

**3] 55**

4] 63

**6] திருக்குறளின் சிறப்பினை உணர்த்த திருவள்ளுவமாலை என்னும் தனிநூல் ஒன்று இயற்றப்பட்டது. இந்நூலை ----------- புலவர்கள் பாடியுள்ளார்கள்.**

1] 23

2] 33

3] 43

**4] 53**

**7] ஒளியைக் கோட்டம் அடையச் செய்வதனால் தொலைவிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் தோன்றும்படி செய்யலாம் என்று கண்டவர் ----------------.**

1] ஐசக் நியூட்டன்

2] தாமசு ஆல்வா எடிசன்

**3] கலீலியோ கலிலி**

4] கிரகாம் பெல்

**8] "நெடுந்தொலைவிலுள்ள பெரிய பனைமரத்தின் உருவத்தைப் புல் நுனியில் தேங்கிய சிறுபனித்துளி மிகத்தெளிவாக காட்டும்" என்ற ---------- என்பவரின் சிந்தனை, அன்றைய தமிழரின் அறிவியல் கருத்தை வெளிப்படுத்துகிறது.**

1] சீத்தலைச்சாத்தனார்

2] இளங்கோவடிகள்

**3] கபிலர்**

4] திருவள்ளுவர்

**9] நிடத நாட்டு மன்னன் பெயர் ----------?**

1] சுந்தர பாண்டியன்

2] இரும்பொறை

3] அலாவுதீன் கில்ஜி

**4] நளன்**

**10] விதர்ப்ப நாட்டு மன்னன் மகள் பெயர் -------------?**

1] காயசாண்டிகை

2] மணிமேகலை

**3] தமயந்தி**

4] கயல்விழி

**11] நிடத நாட்டு மன்னன் நளன், விதர்ப்ப நாட்டு மன்னன் மகள் தமயந்தி ஆகிய இருவரும் ----------- பறவையின் உதவியால் ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்து அன்பு கொள்கின்றனர்.**

1] புறா

2] கிளி

**3] அன்னப் பறவை**

4] மயில்

**12] விதர்ப்ப நாட்டு மன்னன் பெயர்?**

1] சுந்தர பாண்டியன்

2] இரும்பொறை

**3] வீமன்**

4] நளன்

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] ஆழி - கடல்

2] வடிஅம்பு - வடிக்கப்பட்ட அம்பு

3] விசும்பு - வானம்

**4] செற்றான் - இறந்தான்**

**குறிப்பு :- செற்றான் - வென்றான்**

**14] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] அரவு - முதலை**

2] பிள்ளைக் குருகு - நாரைக்குஞ்சு

3] வள்ளை - ஒருவகை நீர்க்கொடி

4] கடா - எருமை

**குறிப்பு :- அரவு - பாம்பு**

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வெளவி - கவ்வி

2] சங்கின் பிள்ளை - சங்குக் குஞ்சுகள்

3] கொடி - பவளக்கொடி

**4] கோடு - வீடு**

**குறிப்பு :- கோடு - கொம்பு**

**16] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கழி - உப்பங்கழி

2] திரை - அலை

**3] மேதி - பசு**

4] கள் - தேன்

**குறிப்பு :- மேதி - எருமை**

**17] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] புள் - அன்னம்

**2] சேடி - எதிரி**

3] ஈரிருவர் - நால்வர்

4] ஊசலாடுற்றாள் - மனம் தடுமாறினாள்

**குறிப்பு :- சேடி - தோழி**

**18] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கடிமாலை - மணமாலை

2] சூழ்வவிதி - நல்வினை

**3] தார் - காடு**

4] செம்மை சேர் - புகழ்மிகு

**குறிப்பு :- தார் - மாலை**

**19] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] காசினி - நீர்**

2] நன்னுதல் - அழகிய நெற்றி

3] வெள்கி - நாணி

4] களிகூர - மகிழ்ச்சி பொங்க

**குறிப்பு :- காசினி - நிலம்**

**20] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வயவேந்து - வெற்றி வேந்தன் (நளன்)

2] ஒண்தாரை - ஒளிமிக்க மலர்மாலை

**3] மல்லல் - சீர்குறைந்த**

4] மறுகு - அரசவீதி

**குறிப்பு :- மல்லல் - வளம்**

**21] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மடநாகு - இளைய பசு

2] மழவிடை - இளங்காளை

3] செம்மாந்து - பெருமிதத்துடன்

**4] நவ்வி - பசு**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**22] ஆழிவடி அம்பு அலம்ப நின்றானும் அன்றொருகால்; ஏழிசைநூற் சங்கத் (து) இருந்தானும் - நீள்விசும்பின்; நல்தேவர் தூது நடந்தானும் பாரதப்போர்; செற்றானும் கண்டாய் இச்சேய் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**23] தெரியல் இவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை ; அரவின் பசுந்தலை என் றஞ்சி - இரவெல்லாம் பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும் ; வள்ளைக் குருநாடர் மன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**24] வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த ; பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை - உண்ணாது ; அருங்கடா நிற்கும் அவந்திநாடு ஆளும் ; இருங்கடா யானை இவன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**25] கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்; தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால் - வான்கடல்வந்; அந்தோ வெனவெடுக்கு அங்கநாடு ஆளுடையான்;செந்தேன் மொழியாயிச் சேய் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**3] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**26] வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்; கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப் - புள்ளோடு; வண்டு இரியச் செல்லும் மணிநீர்க் கலிங்கர் கோன்;**

**தண் தெரியல் தேர்வேந்தன் தான் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**27] காவலரைத் தன் சேடி காட்டக்கண்டு ஈரிருவர் ; தேவர் நளன் உருவாச் சென்றிருந்தார் - பூவரைந்த; மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்; றூசலா டுற்றாள் உள்ளம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**28] மின்னும்தார் வீமன்தன் மெய்மரபில் செம்மைசேர்; கன்னியான் ஆகில் கடிமாலை - அன்னம் தான்; சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்; மன்னவனைத் தன்மனத்தே வைத்து - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**29] கண் இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்; வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி; நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்; அறிந்தாள் நளன் தன்னை ஆங்கு - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**30] விண் அரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்; கண் அகல் ஞாலம் களிகூர - மண் அரசர் ; வன் மாலை தன் மனத்தே சூட வய வேந்தைப்; பொன்மாலை சூட்டினாள் பொன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

winmeen

**31] திண்தோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்; வெண்தா மரையாய் வெளுத்தவே - ஒண்தாரைக்; கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்; பூமாலை பெற்றிருந்த போது - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**32] மல்லல் மறுகில் மடநாகு உடனாகச்; செல்லும் மழவிடைபோல் செம்மாந்து - மெல்லியலாள்; பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்; நன்மாலை வேலான் நளன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] திருவள்ளுவமாலை, கபிலர்

**2] நளவெண்பா, புகழேந்திப் புலவர்**

3] புறநானூறு, கண்ணகனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**33] நளவெண்பா நூலின் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கபிலர்

2] கம்பர்

3] ஒட்டக்கூத்தர்

**4] புகழேந்திப் புலவர்**

**34] நளவெண்பா நூலின் ஆசிரியர் புகழேந்திப் புலவர் அவர்கள் பிறந்த ஊர்?**

1] மதுரை

2] திண்டுக்கல்

3] தூத்துக்குடி

**4] தொண்டைநாட்டின் பொன்விளைந்த களத்தூர்**

**35] கீழ்கண்டவர்களுள் வரகுண பாண்டியனின் அவைப் புலவர் யார்?**

1] கபிலர்

2] கம்பர்

3] ஒட்டக்கூத்தர்

**4] புகழேந்திப் புலவர்**

**36] கீழ்கண்டவர்களுள் சந்திரன் சுவர்க்கி என்ற வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் யார்?**

1] கபிலர்

2] கம்பர்

3] ஒட்டக்கூத்தர்

**4] புகழேந்திப் புலவர்**

**37] நளவெண்பா நூலின் ஆசிரியர் புகழேந்திப் புலவர் அவர்களின் காலம்?**

1] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

2] கி.பி. பத்தாம் நூற்றாண்டு

3] கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு

**4] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு**

**குறிப்பு:- கம்பரும், ஒட்டக்கூத்தரும் இவர் காலத்தில் வாழ்ந்தனர். [ வெண்பா யாப்பில் காப்பியப் பொருளைத் தொடர்நிலைச் செய்யுள்களாய்ப் பாடிய சிறப்பினால், இவர் "வெண்பாவிற் புகழேந்தி" எனப் போற்றப்படுகிறார். ]**

**38] நளவெண்பா என்பது, நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூலென விரிந்து பொருள் தரும். இந்நூல் ----------- காண்டங்களை உடையது.**

1] 2 **2] 3** 3] 4 4] 5

**குறிப்பு :- [(1)சுயம்வர காண்டம்; (2)கலித்தொடர் காண்டம்; (3)கலிநீங்கு காண்டம் ]**

**39] நளவெண்பா நூலில் --------- வெண்பாக்கள் உள்ளன.**

1] 63

2] 96

3] 108

**4] 431**

**40] பாரிசு நகரைச் சார்ந்த ----------- என்னும் அறிஞர் கணக்கிடும் கருவியைக் கண்டறிந்தார்.**

1] ஜான் பெஸ்கி

2] ஜஸ்டின் ட்ரூடோ

3] காரல் மார்க்ஸ்

**4] பிளேஸ் பாஸ்கல்**

winmeen

**41] --------------- இல் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சார்லஸ் பாப்பேஜ் கணினியை முதலில் வடிவமைத்தார்.**

1] கி.பி 1823

**2] கி.பி 1833**

3] கி.பி 1843

4] கி.பி 1853

**42] கணினியின் தந்தை - என அழைக்கப்படுபவர் யார்?**

1] ஜான் பெஸ்கி

**2] சார்லஸ் பாப்பேஜ்**

3] காரல் மார்க்ஸ்

4] பிளேஸ் பாஸ்கல்

**43] ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகள் -------- என்பவர், கணிதச் செயல்பாட்டுக்குத் தேவையான கட்டளைகளை வகுத்தமையால், "முதல் செயல்திட்ட வரைவாளர்" எனப் போற்றப்படுகிறார்.**

1] ஏஞ்சலினா

2] விக்ட்டோரியா

**3] லேடி லவ்லேஸ்**

4] இவர்களில் யாருமில்லை

**44] மின்னியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி, ஹார்வார்டு பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் ------------ என்பாரை ஐ.பி.எம். பொறியாளர் துணையுடன் எண்ணிலக்கக் கணினியைக் கண்டறிய தூண்டியது. இதற்கு "ஹார்வார்டு மார்க்-1 "எனப் பெயரிட்டனர்.**

1] ஜான் பாஸ்டல்

2] பிம்பெர்னர் லீ

**3] ஹோவார்டு ஐக்கன்**

4] இவர்களில் யாருமில்லை

**45] இணையம் என்னும் வடிவத்துக்கு வித்திட்டவர் ---------------- என்னும் அமெரிக்கராவார்.**

**1] ஜான் பாஸ்டல்**

2] பிம்பெர்னர் லீ

3] ஹோவார்டு ஜக்கன்

4] இவர்களில் யாருமில்லை

**46] ---------- ஆம் ஆண்டில், ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர்.**

1] 1950

**2] 1960**

3] 1970

4] 1980

**குறிப்பு** :- 1960 ஆம் ஆண்டில் ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர். இது மிகுந்த காலச்செலவை ஏற்படுத்தியது. இதற்கு மாற்றாக, ஒரு கட்டடத்துக்குள் இருக்கும் கணினிகளை எல்லாம் கம்பிச்சுருளுடன் இணைக்க ஈதர்நெட் அட்டை என்னும் சிறுபலகையைப் பொருத்திப் பயன்படுத்தினர். இந்த இணைப்பு குறும்பரப்பு வலைப்பின்னல் எனப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒரு வட்டாரத்துக்குள் உள்ள கணினிகளை இணைத்தனர். இஃது அகன்ற பரப்பு வலைப்பின்னல் கொண்டது. இந்த வலைப்பின்னல் வழியாக உலகம் முழுதும் உள்ள கணினிகளை ஓரளவுதான் இணைக்க முடிந்தது. முழுமையான இணைப்பைப்பெறச் செயற்கைகோள் வழி இணைப்பினைப் பயன்படுத்திப் புவியைச் சுற்றி, நாடுகளின் மீது வலம்வரும் விண்வெளிக்கலன்களுக்கு இடையே இணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த உலகம் முழுமைக்கான வலையமைப்பு இணையம் எனப் பெயர் பெற்றது.

**இணையத்துக்குத் தேவையானவை** :- இணையதளச் சேவையைப் பயன்படுத்த தேவையான பொருள்களாவன, 1. கணினி; 2. தொலைபேசி; 3. இணையச்சேவை

வழங்குநர்; 4. மாற்றி; 5. தொடர்பு மென்பொருள். இவற்றைக் கொண்டு இணையத் தொடர்பைப் பெறலாம்.

**47] சுவிச்சர்லாந்து நாட்டைச் சார்ந்த ---------- என்னும் இயற்பியல் வல்லுநர் 1989 ஆம் ஆண்டு இணையத்தளத்திற்கு உலகளாவிய வலைபின்னல் எனப் பெயரிட்டார். இதனை வையக விரிவு வலை எனவும் அழைக்கலாம். இவ்வலையமைப்பு பல செய்திகளை அழியாமல் பாதுகாக்க உதவுகிறது.**

1] ஜான் பாஸ்டல்

**2] பிம்பெர்னர் லீ**

3] ஹோவார்டு ஜக்கன்

4] இவர்களில் யாருமில்லை

**48] வையக விரிவு வலை செயல்படுவதனைக் கொண்டு இணைய இணைப்பு ---------- வகைகள் உள்ளன.**

1] 2 2] 3 **3] 4** 4] 5

**குறிப்பு :- அவை, 1. உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு; 2. கம்பி வட மாற்றி; 3. செயற்கைக்கோள் சேவை; 4. கண்ணறைச் சேவை.**

**49] ----------- என்னும் இணையத்தளம் தமிழ் எழுத்துகளை எழுதவும், ஒலிக்கவும் கற்றுத் தருகிறது.**

1] தமிழன்டா

2] தமிழச்சி

**3] தமிழம்**

4] தமிழ் ஈழம்

**50] கடந்த இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச் சிறந்தது என்றே சொல்வேன்" என்பது கணினி வல்லுநர் ------------ அவர்களின் கூற்று ஆகும்.**

**1] பில்கேட்ஸ்**

2] லாரி பேஜ்

3] சுந்தர் பிச்சை

4] திம் குக்

**51] "ஆவணம்" என்னும் துணைப்பாடக் கதைப்பகுதியின் ஆசிரியர் யார்?**

**1] ந.பழநியப்பன், மரியாதை ராமன் கதைகள்**

2] சுஜாதா

3] புதமைப் பித்தன்

4] கல்கி

**52] நம் முன்னோர்கள் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் வழங்கி வந்தனரோ, அதனை அப்படியே நாமும் வழங்கி வருவதற்கு "வழக்கு" என்று பெயர். இஃது -------------- வகைப்படும்.**

1] 1 **2] 2** 3] 3 4] 4

**குறிப்பு:-** இஃது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

**53] ஒரு பொருளைச் சுட்டுவதற்கு, எந்தச் சொல் இயல்பாக வருகிறதோ, அந்தச் சொல்லாலேயே வழங்குவதை இயல்பு வழக்கு என்பர். இயல்பு வழக்கு எத்தனை வகைப்படும்?**

1] 1 2] 2 **3] 3** 4] 4

**குறிப்பு** :- 1. இலக்கணம் உடையது; 2. இலக்கணப் போலி; 3. மரூஉ என மூன்று வகைப்படும்.

[1] **இலக்கணம் உடையது**:- இலக்கணப்பிழை இல்லாமல் வழங்கி வருவதனை இலக்கணமுடையது என்பர். சான்றாக, யாழினி பாடம் படித்தாள் - இத்தொடர் இலக்கணப் பிழையின்றி அமைந்தது அல்லவா!.

[2] **இலக்கணப் போலி**:- நகர்ப்புறம், கால்வாய், கொம்பு நுனி போன்ற இலக்கணமுடைய சொற்களைப் புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு என மாற்றி, நம் முன்னோர் இலக்கணமுடையது போல் வழங்கி வருவதனை 'இலக்கணப் போலி' என்கிறோம்.

[3] **மரூஉ**:- தஞ்சாவூர், கோயமுத்தூர் இவை தஞ்சை, கோவை எனச் சிதைந்து வந்துள்ளதனால், இவற்றை மரூஉ என அழைக்கிறோம்.

54] **தகுதியான சொற்களைப் பேசுவது தகுதி வழக்கு என்பர். இஃது ------------ வகைப்படும்.**

1] 1 2] 2 **3] 3** 4] 4

**குறிப்பு** :- தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை:- 1.இடக்கரடக்கல், 2.மங்கலம், 3.குழூஉக்குறி

**1.இடக்கரடக்கல்**:- பலர் முன்னே கூறுவதற்கு இடர்ப்பாடகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால், அப்பொருளைத் தெரிவிப்பது இடக்கரடக்கல் என்பர். சான்றாக, 'வாய் கழுவி வந்தேன்' என்னும் இத்தொடரை நீக்கி, 'வாய் பூசி வந்தேன்' எனக் கூறுவர்.

**2.மங்கலம்**:- அமங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது 'மங்கலம்' என்பர். சான்றாக, இறந்தாரை இறைவனடி சேர்ந்தார் எனக் கூறுவர்.

**3.குழூஉக்குறி** :- ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும் வகையில், ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயரைக் குழூஉக்குறி என்பர். சான்றாகப் பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்பர்.

**55] வங்காள மொழியில் பக்கிம் என்றால் ---------- என்பது பொருள்.**

1] அழகுமிக்க

2] செல்வமிக்க

**3] வளைந்த**

4] நிமிர்ந்த

**56] "ஆனந்த மடம்" - நூலின் ஆசிரியர் யார்?**

1] விவேகானந்தர்

2] இராமகிருசுணர்

**3] பக்கிம் சந்திரர்**

4] இவர்களில் யாருமில்லை

**57] கிளையினிற் பாம்பு தொங்க; விழுதென்று குரங்கு தொட்டு; விளக்கினைத் தொட்ட பிள்ளை; வெடுக்கெனக் குதித்த தைப்போல்; - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார் (ஞான ரதம்)

**2] பாரதிதாசன் (அழகின் சிரிப்பு)**

3] வாணிதாசன் (கொடி முல்லை)

4] இவற்றில் ஏதுமில்லை

**58] கிளைதொறும் குதித்துத் தாவி; கீழுள்ள விழுதை எல்லாம்; ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி; உச்சிபோய்த் தன்வால் பார்க்கும் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார் (ஞான ரதம்)

**2] பாரதிதாசன் (அழகின் சிரிப்பு)**

3] வாணிதாசன் (கொடி முல்லை)

4] இவற்றில் ஏதுமில்லை

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 4

**1] தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு; தியங்கியே கிடந்ததைக் கண்டு; தான் அதைச் சம்பு வின்கனி என்று; தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] விவேகசிந்தாமணி, இந்நூல் புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] புறநானூறு, கண்ணகனார்

**குறிப்பு :- விவேகசிந்தாமணி என்னும் இந்நூல், புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு. இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை.**

**2] வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி; மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சிப்; போனது வண்டோ பறந்ததோ பழந்தான்; புதுமையோ இதுஎனப் புகன்றாள் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] விவேகசிந்தாமணி, இந்நூல் புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] புறநானூறு, கண்ணகனார்

**குறிப்பு :- விவேகசிந்தாமணி என்னும் இந்நூல், புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு. இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை.**

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மது - தேன்

2] தியங்கி - மயங்கி

**3] சம்பு - நெல்லிக்கனி**

4] மதியம் - நிலவு

**குறிப்பு :- சம்பு - நாவல்**

**4] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வண்டு - நாவற்பழம்

2] மங்கையின் முகம் - வான் நிலவு

3] மலர்க்கரம் - தாமரை

**4] கேழல் - மான்**

**குறிப்பு :- கேழல் - பன்றி**

**5] வாய்மையும் அறமும் பிறர்துயர் களையும்; வண்மையும் தியாகமும் இணைதீர் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பாரதத்தாய், அசலாம்பிகை அம்மையார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] புறநானூறு, கண்ணகனார்

**6] தூய்மையும் ஒழுங்கின் கலியினில் வளர்ந்து; துலங்கிடத் தீமையும் துயரும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பாரதத்தாய், அசலாம்பிகை அம்மையார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] புறநானூறு, கண்ணகனார்

**7] சேய்மையுற் றகலத் தோன்றிய கருணைச்; செங்கதி ரவனெனத் தகைய - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பாரதத்தாய், அசலாம்பிகை அம்மையார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] புறநானூறு, கண்ணகனார்

**8] தாய்மையன் பிறனை யீன்றபா ரதத்தாய்; தாள்மலர் பணிவதே தவமாம் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பாரதத்தாய், அசலாம்பிகை அம்மையார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] புறநானூறு, கண்ணகனார்

**9] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக :-**

1] வாய்மை - உண்மை

**2] களையும் - உரைக்கும்**

3] வண்மை - வள்ளல் தன்மை

4] துலங்குதல் - விளங்குதல்

**குறிப்பு :- களையும் - நீக்கும்**

**10] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக :-**

1] சேய்மை - தொலைவு

2] தவம் - பெரும்பேறு

3] நவ்வி - மான்

**4] கேழல் - சிறுத்தை**

**குறிப்பு :- கேழல் - பன்றி**

**11] அசலாம்பிகை அம்மையார் அவர்கள் பிறந்த ஊர்?**

**1] திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இரட்டணை**

2] தூத்துக்குடிக்கு அருகில் உள்ள கோவில்பட்டி

3] விருதுநகர்க்கு அருகில் உள்ள சாத்தூர்

4] திருவாரூர் அருகில் உள்ள மன்னார்குடி

**12] காந்திபுராணம், ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம் - ஆகிய நூல்களின் ஆசிரியர்?**

**1] அசலாம்பிகை அம்மையார்**

2] மறைமலையடிகள்

3] வாணிதாசன்

4] திரு.வி.க

**13] அசலாம்பிகை அம்மையார் சிறந்த பேச்சாளர். இவரை இக்கால ஔவையார் என்று ------------ பாராட்டுவார்.**

1] சுரதா

2] மறைமலையடிகள்

3] வாணிதாசன்

**4] திரு.வி.க**

**14] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர் பலகாலம் திருப்பாதிரிப்புலியூரில் (கடலூர்) வாழ்ந்தார். இறுதிக்காலத்தில் சில ஆண்டு வடலூரில் வாழ்ந்தார். அப்போது, நானூற்று ஒன்பது பாடல்களைக் கொண்ட இராமலிங்க சுவாமிகள் சரிதம் என்னும் செய்யுள் நூலை இயற்றினார்.**

**1] அசலாம்பிகை அம்மையார்**

2] மறைமலையடிகள்

3] வாணிதாசன்

4] திரு.வி.க

**15] காந்திபுராணம், ------------------------ பாடல்களைக் கொண்டது. இந்நூல் காந்தியடிகளைப் பாட்டுடைத் தலைவராக கொண்டு பாடப்பெற்றது.**

1] ஈராயிரத்து ஐம்பத்தி நான்கு

2] ஈராயிரத்து நாற்பத்தி நான்கு

3] ஈராயிரத்து இருபத்து நான்கு

**4] ஈராயிரத்து முப்பத்து நான்கு**

**16] ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி யார்?**

1] ஜான்சி ராணி

2] ராணி மங்கம்மாள்

**3] வேலு நாச்சியார்**

4] அம்புஜத்தம்மாள்

**17] வேலு நாச்சியார் அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

3] முத்தையா - ராஜம்மாள்

**4] செல்லமுத்து சேதுபதி - சக்கந்தி முத்தாத்தாள்**

**18] வேலு நாச்சியார் அவர்கள் பிறந்த வருடம்?**

**1] 1730**

2] 1755

3] 1780

4] 1799

**19] இது யாரைப்பற்றிய கூற்று?**

**சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் இவரை மணந்து கொண்டார். ஆங்கிலேயர் 1722 ஆம் ஆண்டு சிவகங்கை சீமையின் மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார். -------------- என்னும் இவர், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார். அவருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.**

1] ஜான்சி ராணி

2] ராணி மங்கம்மாள்

**3] வேலு நாச்சியார்**

4] அம்புஜத்தம்மாள்

**20] கணவனைக் கொன்றவர்களை வென்று, ---------------- ஆண்டில் சிவகங்கையை மீட்டார், வேலு நாச்சியார்.**

1] 1773

2] 1775

3] 1778

**4] 1780**

**21] கடலூர் அஞ்சலையம்மாள் பிறந்த வருடம்?**

**1] 1890**

2] 1891

3] 1892

4] 1893

**22] இது யாரைப்பற்றிய கூற்று?**

**இவர், கடலூரில் உள்ள முதுநகரில் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். 1921 ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போதே, இவரும் தமது பொதுவாழ்க்கையைத் தொடங்கினார். இவர், நீலன் சிலையை அகற்றும் போராட்டம், உப்புக் காய்ச்சும் போராட்டம், மறியல் போராட்டம், தனியாள் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

**ஆகிய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு பல ஆண்டு சிறையில் வாடினார்.**

**1] அஞ்சலையம்மாள்**

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

4] அம்புஜத்தம்மாள்

**23] இது யாரைப்பற்றிய கூற்று?**

**இவர், கடலூர், திருச்சி, வேலூர், பெல்லாரி ஆகிய சிறைகளில் இருந்துள்ளார். வேலூர்ச் சிறையில் இருந்தபோது, கருவுற்றநிலையில் இருந்த அவரை ஆங்கிலேய அரசு வெளியில் அனுப்பிவிட்டு, மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது.**

**1] அஞ்சலையம்மாள்**

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

4] அம்புஜத்தம்மாள்

**24] நீலன் சிலையை அகற்றும் போரட்டத்தில் தம்முடைய ஒன்பது வயது மகளையும் ஈடுபடுத்தியவர் யார்?**

**1] அஞ்சலையம்மாள்**

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

4] அம்புஜத்தம்மாள்

**25] கடலூர் அஞ்சலையம்மாள் அவர்கள் மகளின் பெயர்?**

1] சரோஜா

2] பிரேமா

**3] அம்மாக் கண்ணு**

4] இவற்றில் ஏதுமில்லை

**26] கடலூர் அஞ்சலையம்மாள் அவர்களின் மகளை, காந்தியடிகள் தன்னுடன் வார்தாவில் உள்ள ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று -------- எனப் பெயரிட்டுப் படிக்கவும் வைத்தார்.**

1] கல்பனா

**2] லீலாவதி**

3] தாமரை

4] இவற்றில் ஏதுமில்லை

**27] காந்தியடிகள் கடலூருக்கு வந்தபோது, அவரைச் சந்திப்பதற்கு ------------------ என்பவருக்கு ஆங்கில அரசு தடை விதித்தது. ஆனால், ---------- என்பவர் பர்தா வேடமணிந்து, குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்றிச்சென்றார்.**

**1] அஞ்சலையம்மாள்**

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

4] அம்புஜத்தம்மாள்

**28] ---------------- என்பவர், அஞ்சலையம்மாளைத் தென்னாட்டின் ஜான்சிராணி என்றழைத்தார்.**

1] திரு.வி.க

2] சுரதா

**3] காந்தியடிகள்**

4] மு.வரதராசனார்

**29] அம்புஜத்தம்மாள் பிறந்த வருடம்?**

1] 1879ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாள்

2] 1889ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாள்

**3] 1899ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாள்**

4] 1909ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாள்

**30] இந்தக் கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், வீட்டிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் எனப் பழமொழிகளையும் திறம்படப் பயின்றார். அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு, எளிமையாக வாழ்ந்தார். பட்டு, பகட்டு, ஆங்கிலமோகம் அனைத்தையும் துறந்தார்.**

1] அஞ்சலையம்மாள்

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

**4] அம்புஜத்தம்மாள்**

**31] இந்தக் கூற்று யாருடன் தொடர்புடையது?**

**வை.மு.கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி முதலியவர்களோடு நட்புக்கொண்டு பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். மகாகவி**

**பாரதியாரின் பாடல்களைப் பாடி விடுதலையுணர்வை ஊட்டினார். அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதனால் வேலூர்ச்சிறையில் அடைக்கப்பட்டார்.**

1] அஞ்சலையம்மாள்

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

**4] அம்புஜத்தம்மாள்**

**32] காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று செல்லமாக அழைக்கப்பட்டவர் யார்?**

1] அஞ்சலையம்மாள்

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

**4] அம்புஜத்தம்மாள்**

**33] தன் தந்தையின் பெயரோடு, காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் சீனிவாச காந்தி நிலையம் என்னும் தொண்டு நிறுவனத்தை அமைத்தவர் யார்?**

1] அஞ்சலையம்மாள்

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

**4] அம்புஜத்தம்மாள்**

**34] ------------------------ என்பவர், தம் எழுபதாண்டு நினைவாக, நான் கண்ட பாரதம் என்னும் அரிய நூலை எழுதியுள்ளார். 1964 ஆம் ஆண்டு தாமரைத்திரு (பத்மஸ்ரீ) விருது பெற்றுள்ளார்.**

1] அஞ்சலையம்மாள்

2] ராணி மங்கம்மாள்

3] வேலு நாச்சியார்

**4] அம்புஜத்தம்மாள்**

**35] ஓர் ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துள்ள மரங்கள் ---------- பேர்களுக்கு ஓர் ஆண்டிற்குத் தேவையான உயிர்க்காற்றைக் கிடைக்கச் செய்கின்றன.**

1] 15 2] 16 3] 17 **4] 18**

**36] கார்குழலி பாடம் படித்தாள். இத்தொடரில் உள்ள மூன்று சொற்களும் தொடர்ந்து வந்து பொருளைத் தருகின்றன. சொற்கள் தொடராகும் போது இரு சொற்களுக்கிடையே வேற்றுமை, வினை, உவமை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று மறைந்து வரும். இங்ஙனம் உருபுகள் மறைந்து வரும் தொடர்களைத் --------------------- தொடர்கள் என்பர்.**

**1] தொகைநிலைத்**

2] முடிவில்லாத

3] கூட்டுத்

4] தொகாநிலைத்

**37] 'கயல்விழி' , இச்சொல்லில் கயல், விழி என இரண்டு சொற்கள் உள்ளன. இவ்விரு சொற்களுக்கு இடையே போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இதனை ------------ எனக்கூறுவர்.**

1] பண்புத்தொகை

**2] உவமைத்தொகை**

3] உம்மைத்தொகை

4] அன்மொழித்தொகை

**38] தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**

1] 3 2] 4 3] 5 **4] 6**

**குறிப்பு:-** தொகை நிலைத்தொடர் அறுவகைப்படும். அவை, 1. வேற்றுமைத்தொகை; 2. வினைத்தொகை; 3. பண்புத்தொகை; 4. உவமைத்தொகை; 5. உம்மைத்தொகை; 6.அன்மொழித்தொகை

**39] வேற்றுமைகள் எண் வகைப்படும். இவற்றுள் ---------- வேற்றுமைக்கும் ------------- வேற்றுமைக்கும் உருபு இல்லை.**

1] 2, 3

2] 4, 5

**1] 1, 8**

4] 6, 7

**40] இலக்கணக்குறிப்பு தருக. பால் பருகினான்**

**1] இரண்டாம் வேற்றுமைத்தொகை**

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

3] நான்காம் வேற்றுமைத்தொகை

4] ஐந்தாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு :- பால் பருகினான் - இரண்டாம் வேற்றுமைத்தொகை (பால் + ஐ + பருகினான் - இங்கு ஐ என்னும் உருபு மறைந்துள்ளது)**

**41] இலக்கணக்குறிப்பு தருக. தலை வணங்கினான்.**

1] இரண்டாம் வேற்றுமைத்தொகை

**2] மூன்றாம் வேற்றுமைத்தொகை**

3] நான்காம் வேற்றுமைத்தொகை

4] ஐந்தாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு :- தலை வணங்கினான் - மூன்றாம் வேற்றுமைத்தொகை (தலை + ஆல் + வணங்கினான்)**

**42] இலக்கணக்குறிப்பு தருக. வேலன் மகன்**

1] இரண்டாம் வேற்றுமைத்தொகை

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

**3] நான்காம் வேற்றுமைத்தொகை**

4] ஐந்தாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு :- வேலன் மகன் - நான்காம் வேற்றுமைத்தொகை (வேலன் + கு + மகன்)**

**43] இலக்கணக்குறிப்பு தருக. ஊர் நீங்கினான்**

1] இரண்டாம் வேற்றுமைத்தொகை

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

3] நான்காம் வேற்றுமைத்தொகை

**4] ஐந்தாம் வேற்றுமைத்தொகை**

**குறிப்பு :- ஊர் நீங்கினான் - ஐந்தாம் வேற்றுமைத்தொகை (ஊர் + இன் + நீங்கினான்)**

**44] இலக்கணக்குறிப்பு தருக. செங்குட்டுவன் சட்டை**

1] இரண்டாம் வேற்றுமைத்தொகை

2] ஏழாம் வேற்றுமைத்தொகை

**3] ஆறாம் வேற்றுமைத்தொகை**

4] ஐந்தாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு :- செங்குட்டுவன் சட்டை - ஆறாம் வேற்றுமைத்தொகை (செங்குட்டுவன் + அது + சட்டை)**

**45] இலக்கணக்குறிப்பு தருக. குகைப்புலி**

1] இரண்டாம் வேற்றுமைத்தொகை

**2] ஏழாம் வேற்றுமைத்தொகை**

3] ஆறாம் வேற்றுமைத்தொகை

4] ஐந்தாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு :- குகைப்புலி - ஏழாம் வேற்றுமைத்தொகை (குகை + கண் + புலி)**

**46] இலக்கணக்குறிப்பு தருக. உண்கலம், ஆடுகொடி, பாய்புலி, அலைகடல்.**

1] பண்புத்தொகை

2] அன்மொழித்தொகை

**3] வினைத்தொகை**

4] தொழிற்பெயர்

**குறிப்பு :- வினைத்தொகை :- உண்கலம் இத்தொடரைப் படித்துப் பாருங்கள். இதனை உண்டகலம், உண்கின்ற கலம், உண்ணும் கலம் என முக்காலத்திற்கும் ஏற்பப்பொருள் கொள்ளலாம். ஆடுகொடி, பாய்புலி, அலைகடல் ஆகிய தொடர்கள் வினைத்தொகை பயின்று வந்த தொடர்கள். இவ்வாறு காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம், வினைத்தொகை எனப்படும்.**

**47] காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம், ------------ எனப்படும்.**

1] பண்புத்தொகை

2] அன்மொழித்தொகை

**3] வினைத்தொகை**

4] தொழிற்பெயர்

**48] வெண்ணிலவு, சதுரக்கல் - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] பண்புத்தொகை**

2] அன்மொழித்தொகை

3] வினைத்தொகை

4] தொழிற்பெயர்

**குறிப்பு :- வெண்ணிலவு, சதுரக்கல், இன்சுவை, இச்சொற்றொடர்களைப் படித்துப் பாருங்கள். வெண்மை, சதுரம், இனிமை ஆகிய பண்புப் பெயர்கள் நிலவு, கல், சுவை ஆகிய பெயர்ச்சொற்களோடு சேர்ந்து வரும்போது இரண்டிற்கும் இடையில் 'ஆகிய, ஆன' என்னும் பண்பு உருபுகளும் 'மை' விகுதியும் தொக்கி (மறைந்து) வந்துள்ளன. எனவே, இவை பண்புத்தொகை பயின்று வந்த தொடர்கள். (எ.கா.) வெண்மை + நிலவு = வெண்ணிலவு**

**49] மல்லிகைப்பூ - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

2] அன்மொழித்தொகை

3] வினைத்தொகை

4] தொழிற்பெயர்

**குறிப்பு :- இருபெயரொட்டுப் பண்புத்தொகைபற்றிக் காண்போம். எடுத்துகாட்டாக, மல்லிகைப்பூ என்னும் சொல்லைப் பார்ப்போம். மல்லிகை என்பது சிறப்புப்பெயர், பூ என்பது பொதுப்பெயர். இரண்டுக்கும் இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இஃது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.**

**50] கபிலபரணர், உற்றார் உறவினர் - இலக்கணக்குறிப்பு தருக.**

1] இருபெயரொட்டுப் பண்புத்தொகை

2] அன்மொழித்தொகை

3] வினைத்தொகை

**4] உம்மைத்தொகை**

குறிப்பு :- உம்மைத்தொகை :- கபிலபரணர், உற்றார் உறவினர். இத்தொடர்கள் கபிலரும் பரணரும், உற்றாரும் உறவினரும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன. இடையிலும் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வந்து பொருள் தருவதனால், உம்மைத் தொகை எனப்பட்டது.

**அன்மொழித்தொகை** :- கயல்விழி வந்தாள். இத்தொடரில் முதலில் உள்ள 'கயல்விழி' என்பது, 'கயல் போன்ற விழி' என்னும் பொருளைத் தரும் உவமைத்தொகை ஆகும். 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நின்றதனால், 'கயல்போன்ற விழியை உடைய பெண் வந்தாள்' எனப் பொருள் தருகிறது. இதில் 'உடைய' , 'பெண்' என்னும் சொற்கள் தொடரில் இல்லாதவை.

இவ்வாறு உவமைத்தொகையை அடுத்து அல்லாதமொழி தொக்கி வருவதனால் இத்தொடரை உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்கிறோம். இதனைப்போன்று வேற்றுமை, வினை, பண்பு, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது அன்மொழித்தொகை ஆகும்.

**உவமைத்தொகை** :- கயல்விழி வந்தாள். இத்தொடரில் முதலில் உள்ள 'கயல்விழி' என்பது, 'கயல் போன்ற விழி' என்னும் பொருளைத் தரும் உவமைத்தொகை ஆகும்.

**51] வளர்பிறை என்பது -------------- ஆகும்.**

1] பண்புத்தொகை

**2] வினைத்தொகை**

3] வேற்றுமை தொகை

4] உவமைத்தொகை

**52] "கயல்விழி" என்பது --------- ஆகும்.**

1] பண்புத்தொகை

2] வினைத்தொகை

3] வேற்றுமை தொகை

**4] உவமைத்தொகை**

**53] செம்மொழி என்பது ---------- ஆகும்.**

**1] பண்புத்தொகை**

2] வினைத்தொகை

3] வேற்றுமை தொகை

4] உவமைத்தொகை

**54] மா, பலா, வாழை என்பது -------- ஆகும்.**

1] பண்புத்தொகை.

2] வினைத்தொகை

**3] உம்மைத்தொகை**

4] உவமைத்தொகை

**55] பொருந்தாதது எது?**

1] வினைத்தொகை - செய்தொழில்

2] உவமைத்தொகை - மதிமுகம்

3] உம்மைத்தொகை - நாலிரண்டு

4] அன்மொழித்தொகை - பவளவாய் பேசினாள்

**5] பண்புத்தொகை - கயல்விழி**

**குறிப்பு :- பண்புத்தொகை - செம்மொழி**

**56] பொருந்தாதது எது?**

1] கருங்கண் - பண்புத்தொகை

2] வெற்றிலைபாக்கு - உம்மைத்தொகை

3] புத்தகம் படித்தான் - வேற்றுமைத்தொகை

**4] வளர் புகழ் - அன்மொழித்தொகை**

**குறிப்பு :- வளர் புகழ் - வினைத்தொகை**

**57] பொருந்தாதது எது?**

1] மலர் முகம் - உவமைத்தொகை

2] பொற்றொடி வந்தாள் - அன்மொழித்தொகை

3] நாலிரண்டு - உம்மைத்தொகை

**4] கயல்விழி - பண்புத்தொகை**

**குறிப்பு :- கயல்விழி - உவமைத்தொகை**

**58] 'இளமுருகன் படிக்கிறான்' - இத்தொடரைப் படித்து பாருங்கள். 'இளமுருகன்' என்னும் எழுவாயும், 'படிக்கிறான்' என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று பொருளைத் தருகின்றன. இவ்வாறு ஒரு தொடரில் இருசொற்கள் அமைந்து, இரண்டிற்கும் இடையில் சொல்லோ உருபோ மறையாது பொருளை உணர்த்துவது ------------ எனப்படும்.**

1] தொகைநிலைத்தொடர்

**2] தொகாநிலைத் தொடர்**

3] அயற்கூற்றுத்தொடர்

4] கூட்டுத் தொடர்

**59] தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**

1] 6 2] 7 3] 8 **4] 9**

**60] கபிலன் வந்தான், இது ------------ தொடர்?**

1] பெயரெச்சத்தொடர்

2] வினைமுற்றுத்தொடர்

3] விளித்தொடர்

**4] எழுவாய்த்தொடர்**

**குறிப்பு :- கபிலன் வந்தான் இச்சொற்றொடரில் 'கபிலன்' என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'வந்தான்' என்னும் பயனிலை வந்துள்ளதனால் இஃது எழுவாய்த்தொடர்.**

**61] கதிரவா வா! இது ------------- தொடர்?**

1] பெயரெச்சத்தொடர்

2] வினைமுற்றுத்தொடர்

**3] விளித்தொடர்**

4] எழுவாய்த்தொடர்

**குறிப்பு :- கதிரவா வா! இது விளித்தொடர்.**

**62] கண்டேன் சீதையை இது ------- தொடர்?**

1] பெயரெச்சத்தொடர்

**2] வினைமுற்றுத்தொடர்**

3] விளித்தொடர்

4] எழுவாய்த்தொடர்

**குறிப்பு :- கண்டேன் சீதையை - வினைமுற்று முதலில் வந்து பெயரைத் தொடர்கிறது. அதனால், இது வினைமுற்றுத்தொடர்.**

**63] விழுந்த மரம், இது ---------- தொடர்?**

**1] பெயரெச்சத்தொடர்**

2] வினைமுற்றுத்தொடர்

3] விளித்தொடர்

4] எழுவாய்த்தொடர்

**குறிப்பு : விழுந்த மரம் - ‘விழுந்த’ என்னும் எச்சவினை ‘மரம்’ என்னும் பெயர்ச்சொல்லோடு முடிவதனால், இது பெயரெச்சத்தொடர்.**

**64] வந்துபோனான், இது ---------- தொடர்?**

**1] வினையெச்சத்தொடர்**

2] வேற்றுமை தொகாநிலைத்தொடர்

3] இடைச்சொற்றொடர்

4] உரிச்சொற்றொடர்

**குறிப்பு :- வந்துபோனான் - ‘வந்து’ என்னும் எச்சவினை ‘போனான்’ என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளதனால், இது வினையெச்சத்தொடர் ஆகும்.**

**65] வீட்டைக் கட்டினான், இது ---------- தொடர்?**

1] வினையெச்சத்தொடர்

**2] வேற்றுமை தொகாநிலைத்தொடர்**

3] இடைச்சொற்றொடர்

4] உரிச்சொற்றொடர்

**குறிப்பு :- வீட்டைக் கட்டினான் - இத்தொடரில் ‘ஐ’ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளதனால், இது வேற்றுமை தொகாநிலைத் தொடர்.**

**66] மற்றொன்று, இது ----------- தொடர்?**

1] வினையெச்சத்தொடர்

2] வேற்றுமை தொகாநிலைத்தொடர்.

**3] இடைச்சொற்றொடர்**

4] உரிச்சொற்றொடர்

**குறிப்பு :- மற்றொன்று - மற்று + ஒன்று 'மற்று' என்னும் இடைச்சொல்லை அடுத்து 'ஒன்று' என்னும் சொல் தொடர்ந்து வந்ததனால் இஃது இடைச்சொற்றொடர்.**

**67] மாமுனிவர், இது --------- தொடர்?**

1] வினையெச்சத்தொடர்

2] வேற்றுமை தொகாநிலைத்தொடர்.

3] இடைச்சொற்றொடர்

**4] உரிச்சொற்றொடர்**

**குறிப்பு :- மாமுனிவர் - இத்தொடரில் 'மா' என்பது உரிச்சொல். இதனைத் தொடர்ந்து, 'முனிவர்' என்னும் சொல் வந்துள்ளதனால், இஃது உரிச்சொற்றொடர்.**

**இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் :- 'பாம்பு பாம்பு' என்பது அடுக்குத்தொடர். இதனைப் பிரித்தால் பொருள்தரும். இஃது இரண்டு, மூன்று, நான்கு முறையும்கூட அடுக்கிவரும்.**

**'கலகல' என்பது இரட்டைக்கிளவி. இஃது இரட்டைச்சொல்லாகவே வரும், பிரித்தால் பொருள் தராது. அடுக்குத்தொடர் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வரும். இரட்டைக்கிளவி அடைமொழியாய்க் குறிப்புப்பொருளில் வரும்.**

**68] மற்றுப் பிற என்னும் தொடரில் 'மற்று' என்பது?**

1] உரிச்சொல்

**2] இடைச்சொல்**

3] பெயர்ச்சொல்

4] வினைச்சொல்

**69] சாலப் பசித்தது என்பது -------- தொடர்?**

**1] உரிச்சொல்**

2] இடைச்சொல்

3] பெயர்ச்சொல்

4] வினைச்சொல்

**70] கூடிப் பேசினர் என்னும் தொடர் ------ ஆகும்?**

1] வினைமுற்றுத்தொடர்

2] உரிச்சொற்றொடர்

3] பெயரெச்சத்தொடர்

**4] வினையெச்சத்தொடர்**

**71] பொருந்தாதது எது? பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு?**

1] கோர்த்து - கோத்து

**2] சுவற்றில் - சுவறில்**

3] நாட்கள் - நாள்கள்

4] மனதில் - மனத்தில்

**குறிப்பு :- சுவற்றில் - சுவரில்**

**72] பொருந்தாதது எது? பேச்சு வழக்கு - எழுத்து வழக்கு?**

1] பதட்டம் - பதற்றம்

2] சிலவு - செலவு

3] அருகாமையில் - அருகில்

**4] கோர்த்து - கோற்த்து**

**குறிப்பு :- கோர்த்து - கோத்து**

**73] பொருந்தாதது எது? பிழையைக் கண்டறிக.**

1] ஓர் மாவட்டம் - ஒரு மாவட்டம்

2] ஒரு அமைச்சர் - ஓர் அமைச்சர்

**3] அவரது மகனோடு - அவரின் மகனோடு**

4] மேற்க்கொண்டார் - மேற்கொண்டார்

**குறிப்பு :- அவரது மகனோடு - அவருடைய மகனோடு**

**74] பொருந்தாதது எது? பிழையைக் கண்டறிக.**

1] அந்த சுற்றுலா - அந்தச்சுற்றுலா

2] கண்டதை கூறவே - கண்டதனைக் கூறவே

**3] அவர்தான் - அவரேதான்**

4] மேற்க்கொண்டார் - மேற்கொண்டார்

**குறிப்பு :- அவர்தான் - அவர்தாம்**

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 5

**1] உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் ?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] திருமந்திரம், திருமூலர்**

**2] உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் ?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] திருமந்திரம், திருமூலர்**

winmeen

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] திடம் - உறுதி

2] மெய்ஞ்ஞானம் - மெய்யறிவு

3] உபாயம் - வழிவகை

**4] நவ்வி - கரடி**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**4] மூலன் என்னும் பெயர், திரு என்னும் பெயரடை பெற்று, அதனுடன் அர் என்னும், மரியாதைப் பன்மையும் பெற்றுத் திருமூலர் என ஆயிற்று. இவர் காலம் ------------------- முற்பகுதி.**

1] இரண்டாம் நூற்றாண்டின்

2] மூன்றாம் நூற்றாண்டின்

3] நான்காம் நூற்றாண்டின்

**4] ஐந்தாம் நூற்றாண்டின்**

**5] சைவத் திருமுறைகளில் ------------ திருமுறை திருமந்திரம்.**

1] முதலாவது

2] நான்காவது

3] ஏழாவது

**4] பத்தாவது**

**6] ------------ என்னும், இந்நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்னும் வேருபெயரும் உண்டு. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.**

1] புறநானூறு

2] நான்மணிக்கடிகை

3] பழமொழி நானூறு

**4] திருமந்திரம்**

**குறிப்பு :- சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறை திருமந்திரம். இதற்குத் தமிழ் மூவாயிரம் என்னும் வேருபெயரும் உண்டு. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல், மூன்றாம் தந்திரத்தில் எழுநூற்று இருபத்து நான்காவது பாடலாகும்.**

**7] ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது ------------ நூலின் புகழ்மிக்க தொடராகும்.**

1] புறநானூறு

2] நான்மணிக்கடிகை

3] பழமொழி நானூறு

**4] திருமந்திரம்**

**8] நகைசெய் தன்மையி னம்பெழீ இத் தாய்துகள் பகைசெய் நெஞ்சமும் பற்றலு மொன்றுற - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் ?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] தேம்பாவணி, வீரமாமுனிவர் (மகவருள் படலம்)**

**9] முகைசெய் மேனி தழுவிமுத் திட்டலுங் குகைசெய் யின்பெழக் கோலமிட்ட டொத்ததே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் ?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] தேம்பாவணி, வீரமாமுனிவர் (மகவருள் படலம்)**

**10] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நகை - புன்னகை

2] முகை - மொட்டு

3] மேனி - உடல்

**4] குருதி - அருகில்**

**குறிப்பு :- குருதி - இரத்தம்**

**11] கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி - இது யாருடைய இயற்பெயர்?**

1] ஜி யு போப்

2] கால்டுவெல்

**3] வீரமாமுனிவர்**

4] எல்லிஸ்

**12] கொண்டல் போபெஸ்கி - எலிசபெத், இது யாருடைய பெற்றோர் பெயர்?**

1] ஜி யு போப்

2] கால்டுவெல்

**3] வீரமாமுனிவர்**

4] எல்லிஸ்

**13] வீரமாமுனிவர் பிறந்த ஊர்?**

1] பிரான்சு

**2] இத்தாலி**

3] இங்கிலாந்து

4] ஆசுதிரேலியா

**14] இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் - ஆகிய அனைத்து மொழிகளையும் சரளமாக அறிந்தவர் யார்?**

1] ஜி யு போப்

2] கால்டுவெல்

**3] வீரமாமுனிவர்**

4] எல்லிஸ்

**15] வீரமாமுனிவர் ---------- வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தார்?**

1] பதினெட்டாம்

2] இருபதாம்

**3] முப்பதாம்**

4] நாற்பதாம்

**16] ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம், கித்தேரியம்மாள் அம்மானை - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] ஜி யு போப்

2] கால்டுவெல்

**3] வீரமாமுனிவர்**

4] எல்லிஸ்

**17] 08.11.1680 முதல் 04.02.1747 வரை - இது யாருடைய காலத்தைக் குறிக்கிறது?**

1] ஜி யு போப்

2] கால்டுவெல்

**3] வீரமாமுனிவர்**

4] எல்லிஸ்

**18] கிறித்துவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படும் நூல்?**

1] இரட்சணிய யாத்திரிகம்

2] பெத்தலகேம் குறவஞ்சி

**3] தேம்பாவணி**

4] இவற்றில் ஏதுமில்லை

**19] கீழ்க்கண்ட கூற்று எந்நூலைப் பற்றியது?**

**இந்நூலில் மூன்று காண்டங்களும், முப்பத்தாறு பாடல்களும் உள்ளன. பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து.**

1] இரட்சணிய யாத்திரிகம்

2] பெத்தலகேம் குறவஞ்சி

**3] தேம்பாவணி**

4] இவற்றில் ஏதுமில்லை

**20] கீழ்க்கண்டவற்றில் எந்நூல், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டது?**

1] இரட்சணிய யாத்திரிகம்

2] பெத்தலகேம் குறவஞ்சி

**3] தேம்பாவணி**

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- தேம்பாவணி = தேம்பா + அணி = வாடாதமாலை என்றும், தேம்பாவணி = தேன் + பா + அணி = தேன்போன்ற இனிய பாடல்களாலான மாலை என்றும் பொருள்படும்.**

**21] நாடகம் என்னும் சொல் ------------- எனப் பிரியும்.**

1] நா + டகம்

2] நாடு + கம்

**3] நாடு + அகம்**

4] நாட + கம்

**குறிப்பு :- நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதனால், நாடகம் எனப் பெயர் பெற்றது என்பர். அகம் - நாடு; உன்னுள் நோக்கு; உன்னை உணர்;**

**22] கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும், கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் என்பர். இதற்கு -------------------- என்னும் பெயரும் உண்டு.**

1] திரைப்படம்

2] எடுத்துக் கூறுதல்

**3] கூத்துக்கலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**23] தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம் ஆகும். நாடகம் தோற்றம் பெற்றதன் வரலாற்றை அறியப் புகும்போது, --------------- என்னும் பண்பு அடிப்படையாக அமைதலைக் காணலாம்.**

**1] போலச் செய்தல்**

2] நடைமுறைப் படுத்துவது

3] எடுத்துக் கூறுவது

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு :- பண்டைய மரப்பாவைக்கூத்து, பொம்மலாட்டமாக வளர்ச்சியடைந்த பின்னர், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியன முறையே பாவைக்கூத்தின் வளர்ச்சி நிலைகளாக மக்களிடையே வழக்கிலிருந்தன.**

**24] ------------------, நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்து இருக்கிறது.**

1] நற்றிணை

2] கலித்தொகை

3] புறநானூறு

**4] தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்**

**குறிப்பு :- 'கூத்தாட்டவைக்குழாத் தற்றே' என்னும் குறள்வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி தெரிய வருகிறது.**

**25] ------------------ என்பவர், நாடகமேத்தும், நாடகக் கணிகை என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிடுகிறார்.**

1] சீத்தலைச்சாத்தனார்

**2] இளங்கோவடிகள்**

3] ஔவையார்

4] விளம்பிநாகனார்

**குறிப்பு :- தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதனை நாட்டியம் என்றும், ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம்புனைந்து ஆடுவதனை நாடகம் என்றும் குறிப்பிட்டு வந்துள்ளனர். 'நாட்டியம்', 'நாடகம்' இரண்டிற்கும் பொதுவாகக் கூத்து என்னும் சொல்லே வழக்கில் இருந்தது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கூத்துவகைகளைப் பற்றியும், நாடகநூல்கள் பற்றியும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**26] ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் தமிழ் நூல்களில், முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல் முதலிய பல நாடக நூல்கள் நாட்டியத்திற்கும் நாடகத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளன. ----------------------, நாடகக் கலையைப் பற்றியும் காட்சித் திரைகளைப் பற்றியும் நாடக அரங்கின் அமைப்புப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளது.**

1] மணிமேகலை

**2] சிலப்பதிகாரம்**

3] புறநானூறு

4] கலித்தொகை

**27] ------------------ என்பவர், செய்யுள் வடிவில் இயற்றிய தம் நாடகவியல் என்னும் நூலில், நாடகம் அதன் விளக்கம், வகைகள், எழுதப்பட வேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.**

1] மறைமலையடிகள்

**2] பரிதிமாற்கலைஞர்**

3] விபுலானந்தர்

4] பம்மல் சம்பந்தனார்

**28] சுவாமி விபுலானந்தர் எழுதிய மதங்க சூளாமணியும், ------------ எழுதிய சாகுந்தலமும் நாடகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும்.**

1] பரிதிமாற் கலைஞர்

2] சங்கரதாசு சுவாமிகள்

3] பம்மல் சம்பந்தனார்

**4] மறைமலையடிகள்**

**29] நாடகப் பேராசிரியர் ----------------------, நாடகத்தமிழ் என்னும் தம்நூலில் தொழில்முறை நாடக அரங்குகளைப்பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.**

1] பரிதிமாற் கலைஞர்

2] சங்கரதாசு சுவாமிகள்

**3] பம்மல் சம்பந்தனார்**

4] மறைமலையடிகள்

**30] ---------------- நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசம் என்னும் நாடக நூலை எழுதியுள்ளான்.**

1] இரண்டாம்

2] மூன்றாம்

3] ஆறாம்

**4] ஏழாம்**

**31] --------------- நூற்றாண்டில் இராசராசாசோழன் ஆட்சிக் காலத்தில் இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்றதாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.**

1] ஆறாம்

2] எட்டாம்

3] பத்தாம்

**4] பதினோராம்**

**குறிப்பு :- தஞ்சாவூரை ஆண்டபோது கோவிலில் நாடகங்கள் மராத்திய மன்னர்களால் நடத்தப்பெற்றன. நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் குறவஞ்சி நாடகங்கள் தோன்றின. பள்ளு நாடகவகை, உழவர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துள்ளன.**

**32] ----------- நூற்றாண்டின் பிற்பகுதியில், நொண்டி நாடகங்கள் தோன்றின. செல்வக்குடியில் பிறந்த ஒருவன், ஒழுக்கங்கெட்டு, நோயும் வறுமையும் உற்று இறுதியில் திருந்தி வாழ்வதாக இவ்வகை நாடகங்கள் அமைந்தன.**

1] ஆறாம்

2] எட்டாம்

3] பத்தாம்

**4] பதினேழாம்**

**33] ---------- நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், கோபால கிருட்டின பாரதியாரின் நந்தனார் சரித்திரம் ஆகியன கட்டியங்காரன் உரையாடல்களோடு முழுவதும் பாடல்களாக அமைந்தன.**

1] ஆறாம்

2] எட்டாம்

3] பத்தாம்

**4] பதினெட்டாம்**

**34] ---------------- நூற்றாண்டில் சமுதாயச் சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன.**

1] பத்தாம்

2] பன்னிரண்டாம்

3] பதினாறாம்

**4] பத்தொன்பதாம்**

**35] டம்பாச்சாரி விலாசம் - ஆசிரியர்?**

1] மனோன்மணியம் சுந்தரனார்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற்கலைஞர்

**4] காசி விசுவநாதர்**

**36] மனோன்மணியம் என்னும் கவிதை நாடகக் காப்பியத்தின் ஆசிரியர் யார்?**

**1] பேராசிரியர் சுந்தரனார்**

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற்கலைஞர்

4] காசி விசுவநாதர்

**37] பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும் கவிதை நாடகக் காப்பியத்தை --------- ஆம் ஆண்டில் வெளியிட்டார்?**

1] 1855

2] 1861

3] 1887

**4] 1891**

**38] பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும் கவிதை நாடகக் காப்பியத்தை 1891 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் --------- எழுதிய மறைவழி என்னும் ஆங்கிலக் கதையைத் தழுவியதாக இருந்தாலும் வடிவத்தாலும், பாத்திர அமைப்பாலும், சூழலாலும் தமிழ்ப்பண்பு ஓங்கியிருந்தது.**

1] டல்கௌசி பிரபு

2] வில்லியம் பெண்டிங்

3] ராபர்ட் கிளைவ்

**4] லார்ட் லிட்டன்**

**39] ---------- நாடகம்தான் தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகமாகும்.**

1] தேசியம்

2] வந்தே மாதரம்

**3] கதரின் வெற்றி**

4] நாளை நமதே

**குறிப்பு:- கதரின் வெற்றி நாடகம்தான் தமிழ்நாட்டில் முதன்முதலாக நடத்தப்பட்ட தேசிய சமுதாய நாடகமாகும். இதனைத் தொடர்ந்து தேசியக்கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன.**

**40] நாடக உலகின் இமயமலை என்றும், தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்றும் அழைக்கப்பட்டவர் யார்?**

1] மறைமலையடிகள்

2] திரு.வி.க

3] பரிதிமாற்கலைஞர்

**4] சங்கரதாசு சுவாமிகள்**

**குறிப்பு :- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குப் பெருந்தொண்டு புரிந்தவர் சங்கரதாசு சுவாமிகள்.**

**41] பிரகலாதன், சிறுத்தொண்டர், இலவகுசா, பவளக்கொடி, அபிமன்யு, சுந்தரி முதலான நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளவர் யார்?**

1] மறைமலையடிகள்

2] திரு.வி.க

3] பரிதிமாற்கலைஞர்

**4] சங்கரதாசு சுவாமிகள்**

**42] தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்பட்டவர் யார்?**

1] மறைமலையடிகள்

**2] பம்மல் சம்பந்தனார்**

3] பரிதிமாற்கலைஞர்

4] சங்கரதாசு சுவாமிகள்

**43] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்துள்ளார். இவரது மனோகரன் நாடகம் எழுபது ஆண்டுகளாகத் தமிழ் நாடகமேடையில் புகழ்பெற்று விளங்கியது. தமது நாடக அனுபவங்களையெல்லாம், நாடகமேடை நினைவுகள் என்னும் தலைப்பிலும் நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? என்னும் தலைப்பிலும் எழுதியுள்ளார்.**

1] மறைமலையடிகள்

**2] பம்மல் சம்பந்தனார்**

3] பரிதிமாற்கலைஞர்

4] சங்கரதாசு சுவாமிகள்

**44] மதுரையில் 1942 ஆம் ஆண்டில் புலமைக்கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம் அரங்கேறியது. நாடகம் முழுவதும் ஔவையாராக நடிக்கும் வாய்ப்பைப் பெற்று சிறந்தமுறையில் நடித்தவர் ------------------?**

**1] தி.க.சண்முகனார்**

2] பம்மல் சம்பந்தனார்

3] பரிதிமாற்கலைஞர்

4] சங்கரதாசு சுவாமிகள்

**குறிப்பு :- இவரை ஔவை சண்முகனார் என்றே அழைத்தனர்.**

**45] "நாடகச் சாலையொத்த நற்கலா சாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

**3] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

4] வாணிதாசன்

**46] சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்?**

1] நச்சினார்க்கினியர்

**2] அடியார்க்கு நல்லார்**

3] சுந்தரனார்

4] விபுலானந்தர்

**47] ஒன்றன் இயற்பெயர் தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வந்துள்ளது. இவ்வாறு வருவதற்கு -------------- என்பது பெயர்.**

1] புணர்ச்சி

2] வழு

**3] ஆகுபெயர்**

4] இவற்றில் ஏதுமில்லை

**48] ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?**

1] 14 2] 15 **3] 16** 4] 17

**குறிப்பு :- ஆகுபெயர் பதினாறு வகைபெறும். அவையாவன: பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், பண்பாகு பெயர், தொழிலாகு பெயர், எண்ணல் அளவையாகு பெயர், எடுத்தல் அளவையாகு பெயர், முகத்தல் அளவையாகு பெயர், நீட்டல் அளவையாகு பெயர், சொல்லாகு பெயர், தானியாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர்.**

**49] அளவைக் குறிக்கும் பெயர்களை அளவைப் பெயர்கள் என்பர். அவை எத்தனை வகைப்படும். அவை யாவை?**

1] 1 2] 2 3] 3 **4] 4**

**விளக்கம் :- அளவைப் பெயர்கள் நான்கு வகைப்படும். அவையாவன :- எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என அளவை நான்கு வகைப்படும்.**

**50] ஒன்று பெற்றால் ஒளி மயம் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

**1] எண்ணல் அளவை ஆகுபெயர்**

2] முகத்தல் அளவை ஆகுபெயர்

3] எடுத்தல் அளவை ஆகுபெயர்

4] நீட்டல் அளவை ஆகுபெயர்

**விளக்கம் :- ஒன்று பெற்றால் ஒளி மயம். இத்தொடரில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்குப் பெயராகி வந்தது. இஃது எண்ணல் அளவை ஆகுபெயர்.**

**51] ஐந்து கிலோ என்ன விலை? - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] எண்ணல் அளவை ஆகுபெயர்

2] முகத்தல் அளவை ஆகுபெயர்

**3] எடுத்தல் அளவை ஆகுபெயர்**

4] நீட்டல் அளவை ஆகுபெயர்

**விளக்கம் :- ஐந்து கிலோ என்ன விலை? இத்தொடரில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக் குறிக்காமல், அவ்வளவுடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு..) ஆகிவந்தது. எனவே, இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.**

**52] நான்கு லிட்டர் தேவை - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] எண்ணல் அளவை ஆகுபெயர்

**2] முகத்தல் அளவை ஆகுபெயர்**

3] எடுத்தல் அளவை ஆகுபெயர்

4] நீட்டல் அளவை ஆகுபெயர்

**விளக்கம் :- நாலு லிட்டர் தேவை. இத்தொடரில் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப்பெயர், அவ்வளவைக் குறிக்கவில்லை. அவ்வளவுடைய நெய், எண்ணெய், பால் முதலியவற்றுள் ஒன்றுக்கு ஆகிவந்தது. எனவே, இது முகத்தல் அளவை ஆகுபெயர்.**

**53] மூன்று மீட்டர் கொடு - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] எண்ணல் அளவை ஆகுபெயர்

2] முகத்தல் அளவை ஆகுபெயர்

3] எடுத்தல் அளவை ஆகுபெயர்

**4] நீட்டல் அளவை ஆகுபெயர்**

**விளக்கம் :- மூன்று மீட்டர் கொடு. இத்தொடரில், மூன்று மீட்டர் என்பது, அவ்வளவுடைய அளவுகோலைக் குறிக்காது, அதனால் நீட்டி அளக்கப்பெறும் துணிக்கு ஆகி வந்தது. எனவே, இது நீட்டல் அளவை ஆகுபெயர்.**

**குறிப்பு : "ஒன்றுகொடு, நான்கு கிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் வேண்டும்" என்பனபோல வரும் அளவுத்தொடர்கள் ஆகுபெயராம். 'ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும்' என்பன ஆகுபெயராகா.**

**54] வள்ளுவர்சொல் வாழ்க்கைக்கு இனிது - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

**2] சொல்லாகுபெயர்**

3] இடவாகுபெயர்

4] கருவியாகு பெயர்

**விளக்கம் :- வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது. இத்தொடரில் வள்ளுவர்சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்ததால், இது சொல்லாகுபெயர்.**

**55] பாலை இறக்கு - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

**1] தானியாகுபெயர்**

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

4] கருவியாகு பெயர்

**விளக்கம் :- பாலை இறக்கு. பாலின் பெயர், பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி), அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகுபெயர் . பொருள், இடத்திற்கு ஆகி வருவது தானியாகுபெயர். இடவாகுபெயர் :- இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயர்.**

**56] யாழ் கேட்டு மகிழ்ந்தாள் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] கருவியாகு பெயர்**

**விளக்கம் :- யாழ் கேட்டு மகிழ்ந்தாள். இத்தொடரில், யாழ் என்னும் கருவி இசைக்கு ஆகி வந்ததால் கருவியாகு பெயர். கருவியாகு பெயர் : கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகிவரும். (எ-டு) : வீணை கேட்டு மெய்ம்மறந்தேன்.**

**57] நான் சமையல் கற்றேன் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] காரியவாகு பெயர்**

**விளக்கம் :- நான் சமையல் கற்றேன். இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர். காரியவாகு பெயர் : காரியப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகிவருவது. (எ-டு) : நன்னூல் கற்றேன்..**

**58] திருவள்ளுவரைப் படித்துப்பார் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] கருத்தாவாகு பெயர்**

**விளக்கம் :- திருவள்ளுவரைப் படித்துப்பார். இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததனால், கருத்தாவாகு பெயராயிற்று.**

**59] நாரதர் வருகிறார் - இது எந்த ஆகுபெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டு?**

1] தானியாகுபெயர்

2] சொல்லாகுபெயர்

3] இடவாகுபெயர்

**4] உவமையாகு பெயர்**

**விளக்கம் :- ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல். இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைபோன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகிவந்தது. அதனால், இஃது உவமையாகுபெயராயிற்று.**

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி

கருவி காரியம் கருத்தன் ஆதியுள்

ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்

தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. - நன்னூல் 290...

**60] நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர் ---------- ஆகும்?**

1] முகத்தலளவையாகு பெயர்

2] நீட்டலளவையாகு பெயர்

**3] எண்ணலளவையாகு பெயர்**

4] எடுத்தலளவையாகு பெயர்

**61] தயிரை இறக்கு. இத்தொடர் ----------- ஆகுபெயர் ஆகும்?**

1] இடவாகு பெயர்

**2] தானியாகு பெயர்**

3] உவமையாகு பெயர்

4] கருவியாகு பெயர்

**62] 'மல்லிகை சூடினாள்' - என்பது ------------ ஆகுபெயர்?**

**1] முதலாகு பெயர் (பொருளாகு பெயர்)**

2] இடவாகு பெயர்

3] காலவாகு பெயர்

4] சினையாகு பெயர்

**குறிப்பு:- பொருளாகு பெயர் :- 'மல்லிகை' என்பது 'பூ' இல்லை, அது கொடி. 'மல்லிகை சூடினாள்' எனச்சொன்னால், அங்கு மல்லிகை என்பது கொடியாகிய முதற்பொருளைக் குறிக்காமல் பூ என்னும் சினையைக் குறிக்கிறது. இவ்வாறு முதற்பொருள் சினைக்கு (உறுப்புக்கு) ஆகி வருவது, முதலாகு பெயர் எனப்படும். இதனைப் பொருளாகுபெயர் எனவும் கூறுவர்.**

**63] 'பள்ளி' - என்பது -------------- ஆகுபெயர்?**

1] முதலாகு பெயர் (பொருளாகு பெயர்)

**2] இடவாகு பெயர்**

3] காலவாகு பெயர்

4] சினையாகு பெயர்

**குறிப்பு :- நேற்றுப் பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்ற பள்ளி, எது? பூண்டிப்பள்ளி. பூண்டிப் பள்ளியா வந்து பேசியது? பள்ளி எப்படிப் பேசும்? பூண்டியிலுள்ள பள்ளியில் பயின்ற மாணவி பேசினாள், 'பள்ளி' என்னும் இடப்பெயர், அப்பள்ளியில் பயிலும் மாணவிக்கு ஆகி வந்தது. அதனால், இஃது இடவாகு பெயர்.**

**64] திசம்பர் பூ - என்பது எந்த ஆகுபெயர்?**

1] முதலாகு பெயர் (பொருளாகு பெயர்)

2] இடவாகு பெயர்

**3] காலவாகு பெயர்**

4] சினையாகு பெயர்

**குறிப்பு :- காலவாகு பெயர் :- உன் தலையில் வைத்திருக்கும் பூவின் பெயரென்ன? திசம்பர் பூ. திசம்பர் என்பது என்ன? மாதத்தின் பெயர். திசம்பர் என்னும் மாதப்பெயர், அம்மாதத்தில் பூக்கும் பூவிற்கு ஆகி வந்தது. அதனால், இது காலவாகுபெயர்.**

**65] 'வெற்றிலை நட்டான்' - என்பது -------- ஆகுபெயர்?**

1] முதலாகு பெயர் (பொருளாகு பெயர்)

2] இடவாகு பெயர்

3] காலவாகு பெயர்

**4] சினையாகு பெயர்**

**குறிப்பு :- சினையாகு பெயர் :- சினை என்றால் உறுப்பு. 'வெற்றிலை நட்டான்' - இத்தொடரில் உள்ள வெற்றிலை என்பது சினையாகிய இலையைக் குறிக்காமல், அதன் முதல் பொருளாகிய கொடிக்கு ஆகி வந்தது. அதனால், இது சினையாகு பெயர் ஆயிற்று.**

**66] 'வெள்ளை அடிப்போம்' என்பது ---------- ஆகுபெயர்?**

1] முதலாகு பெயர் (பொருளாகு பெயர்)

2] இடவாகு பெயர்

3] காலவாகு பெயர்

**4] பண்பாடு பெயர் (குணவாகு பெயர்)**

**குறிப்பு :- குணவாகு பெயர் :- பொங்கலுக்கு முன் வீட்டுச் சுவர்களுக்கு என்ன அடிப்போம்? வெள்ளை. வெள்ளை என்பது நிறப்பண்பு ஆனால், அது நிறத்தைக் குறிக்காமல், சுண்ணாம்பைக் குறித்து வந்தது. அதனால், இது பண்பாகு பெயர். இதனைக் குணவாகுபெயர் எனவும் கூறுவர்.**

**67] 'பொங்கல்' உண்போம் - இது ---------- ஆகுபெயர்?**

1] முதலாகு பெயர் (பொருளாகு பெயர்)

**2] தொழிலாகு பெயர்**

3] காலவாகு பெயர்

4] பண்பாடு பெயர் (குணவாகு பெயர்)

**குறிப்பு :- தொழிலாகுபெயர்:- 'பொங்கல்' உண்போம், ஐயா. இங்குப் பொங்கல் என்பது பொங்குதலாகிய தொழிற்பெயர். இத்தொழிற்பெயர் தொழிலைக் குறிக்காமல், அத்தொழிலால் ஆகும் உணவைக் குறித்தது. அதனால், இது தொழிலாகு பெயர்.**

**68] வறுவல் தின்றான் - என்பது?**

1] முதலாகு பெயர்

2] இடவாகு பெயர்

**3] தொழிலாகு பெயர்**

4] சினையாகு பெயர்

**69] சித்திரை வந்தாள் - என்பது?**

1] முதலாகு பெயர்

2] இடவாகு பெயர்

**3] காலவாகு பெயர்**

4] சினையாகு பெயர்

**70] 'ஊர் உறங்கியது' - என்பது?**

1] முதலாகு பெயர்

**2] இடவாகு பெயர்**

3] காலவாகு பெயர்

4] சினையாகு பெயர்

**71] 'நீலம் சூடினாள்' - என்பது?**

**1] பண்பாகு பெயர் (குணவாகு பெயர்)**

2] இடவாகு பெயர்

3] காலவாகு பெயர்

4] சினையாகு பெயர்

**72] பொருந்தாதது எது? சொற்றொடர்களில் அமைந்துள்ள வழுக்களை அறிவோம்.**

1] அரசன் வந்தது - திணை வழு

2] கபிலன் பேசினாள் - பால் வழு

3] குயில்கள் கூவியது - எண் வழு

4] கமலா சிரித்தாய் - இட வழு

5] வளவன் நேற்று வந்திருக்கிறான் - கால வழு

**6] ஆந்தை கத்தியது - பால் வழு**

**குறிப்பு :- ஆந்தை கத்தியது - மரபு வழு**

**73] பொருந்தாதது எது? சொற்றொடர்களில் அமைந்துள்ள வழுக்களை அறிவோம்.**

1] கபிலன் பேசியது - திணை வழு

2] கண்ணன் படித்தாள் - பால் வழு

3] பறவைகள் பறந்தது - எண் வழு

4] இன்று வருவான் - கால வழு

**6] சிங்கம் கனைத்தது - இட வழு**

**குறிப்பு :- சிங்கம் கனைத்தது - மரபு வழு**

**74] புகழெனின் உயிரும் கொடுக்குவர் ; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] கலித்தொகை

2] அகநானூறு

**3] புறநானூறு**

4] நற்றிணை

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 6

**1] தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும் போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**2] கம்பராமாயணம், கம்பர்**

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

**2] மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும் ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**2] கம்பராமாயணம், கம்பர்**

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

4] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

winmeen

**3] ------------ ஆறு மகரந்தப்பொடிகளைச் சிந்தும் சோலைகளை வளப்படுத்தியும், சண்பக வனங்களைக் கடந்தும், அரும்புகள் விரிந்திருக்கின்ற குளங்களை நிரப்பியும், புதுமணல்மிக்க நீர்நிலைகள் வழியாகவும், குருக்கத்தி வேலியிட்ட கமுகத்தோட்டங்களில் பாய்ந்தும், வயல்களைச் செழிக்கச் செய்தும் பாய்ந்து செல்வது, உடலினுள் உயிர்புகுந்து பரவுதனைப் போன்று விளங்குகிறது.**

1] மகாநதி

2] காவிரி

**3] சரயு**

4] கங்கை

**குறிப்பு :- சரயு நதி - தற்போதைய உத்தரப் பிரதேச மாநிலத்தில் பாயும் சரயு நதியின் வளம்.**

**4] கம்பர் பிறந்த ஊர்?**

**1] நாகை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்**

2] திருவாரூர் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்

3] தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்

4] மதுரை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூர்

**5] சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் - இந்த நூல்களின் ஆசிரியர் யார்?**

1] சீத்தலைச்சாத்தனார்

**2] கம்பர்**

3] சேக்கிழார்

4] மாணிக்கவாசகர்

**6] கம்பர், வடமொழியில் ----------- எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் காப்பியம் இயற்றினார். கம்பர் தாம் இயற்றிய அந்நூலுக்கு, இராமாவதாரம் எனப் பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என வழங்கலாயிற்று. எனவே, இது வழிநூல் எனப்படுகிறது.**

**1] வால்மீகி**

2] அகத்தியர்

3] போகர்

4] யுவான் சுவாங்

**7] கம்பராமாயணம் -------------- காண்டங்களைக் கொண்டது.**

1] 3 2] 4 3] 5 **4] 6**

**விளக்கம்:- கம்பராமாயணம் ஆறு காண்டங்களையுடையது. அவை, 1. பால காண்டம், 2. அயோத்திய காண்டம், 3. ஆரணிய காண்டம், 4. கிட்கிந்தா காண்டம், 5. சுந்தர காண்டம், 6. யுத்த காண்டம் என்பன.**

**குறிப்பு :- காண்டம் என்பது பெரும்பிரிவு எனவும், படலம் என்பது உட்பிரிவு எனவும் வழங்கப்படுகிறது.**

**8] தூலம்போல் வளர்கி ளைக்கு; விழுதுகள் தூண்கள்! தூண்கள்; ஆலினைச் சுற்றி நிற்கும்; அருந்திறல் மறவர்! வேரோ - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] அழகின் சிரிப்பு, பாரதிதாசன்**

2] குயில், பாரதியார்

3] தொடுவானம், வாணிதாசன்

4] கவிதாஞ்சலி, கண்ணதாசன்

**குறிப்பு :- இங்கு இடம்பெற்றுள்ள பாடல் "அழகின் சிரிப்பு" என்னும் நூலில் "விழுதும் வேரும்" என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.**

**9] வாலினைத் தரையில் வீழ்த்தி; மண்டிய பாம்பின் கூட்டம் !; நீலவான் மறைக்கும் ஆல்தான்; ஒற்றைக்கால் நெடிய பந்தல் ! - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] அழகின் சிரிப்பு, பாரதிதாசன்**

2] குயில், பாரதியார்

3] தொடுவானம், வாணிதாசன்

4] கவிதாஞ்சலி, கண்ணதாசன்

**குறிப்பு :- இங்கு இடம்பெற்றுள்ள பாடல் “அழகின் சிரிப்பு” என்னும் நூலில் “விழுதும் வேரும்” என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.**

**10] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] திறல் - வலிமை

2] மறவர் - வீரர்

3] தாது - மகரந்தம்

**4] போது - காடு**

**குறிப்பு :- போது - மலர்**

**11] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] பொய்கை - குளம்

2] பூகம் - கமுகம் (பாக்கு மரம்)

3] நவ்வி - மான்

**4] கேண்மை - பகை**

**குறிப்பு :- கேண்மை - நட்பு**

**12] பாரதிதாசன் அவர்களின் இயற்பெயர் என்ன?**

1] சுப்பிரமணி

2] சுப்பிரக்கவி

**3] சுப்புரத்தினம்**

4] சுப்புராஜ்

**13] பாரதிதாசன் அவர்களின் பெற்றோர் பெயர் என்ன?**

1] சாத்தப்பன் - விசாலாட்சி

2] சேதுராஜ் - பொன்னம்மாள்

3] முத்தையா - கண்ணகி

**4] கனகசபை - இலக்குமி**

**14] பாரதிதாசன் அவர்கள் பிறந்த ஊர்?**

1] திருச்சி

2] மதுரை

**3] புதுச்சேரி**

4] ஈரோடு

**15] பாரதிதாசன் அவர்களின் காலம்?**

1] 29.04.1861 முதல் 21.04.1934 வரை

2] 29.04.1871 முதல் 21.04.1944 வரை

3] 29.04.1881 முதல் 21.04.1954 வரை

**4] 29.04.1891 முதல் 21.04.1964 வரை**

**16] பாவேந்தர், புரட்சிக்கவிஞர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்

**17] பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்

**18] அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம், குறிஞ்சித்திட்டு, தமிழியக்கம் - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்

**19] கீழ்க்கண்ட கூற்று யாரைப் பற்றியது?**

**பாரதியாருடன் கொண்ட நெருங்கிய தொடர்பினால் பாரதிதாசன் எனத் தன்பெயரை அமைத்துக்கொண்டார். தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர்.**

1] கண்ணதாசன்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்

**20] மெய்யினால் அறியும் உயிர் ------- உடையது. இதற்குச் சான்றாக புல், மரம் முதலிய தாவரங்களைக் கூறலாம்.**

**1] ஓரறிவு**

2] ஈரறிவு

3] மூவறிவு

4] நாலறிவு

**21] மெய், வாய் ஆகியவை ---------- அறிவு. (நத்தை, சங்கு முதலியன.)**

1] ஓரறிவு

**2] ஈரறிவு**

3] மூவறிவு

4] நாலறிவு

**22] எறும்பு, கரையான், அட்டை முதலியன ------ அறிவு.**

1] ஓரறிவு

2] ஈரறிவு

**3] மூவறிவு**

4] நாலறிவு

**குறிப்பு :- மெய், வாய், மூக்கு**

**23] நண்டு, தும்பி, வண்டு முதலியன --------- அறிவு.**

1] ஓரறிவு

2] ஈரறிவு

3] மூவறிவு

**4] நாலறிவு**

**குறிப்பு :- மெய், வாய், மூக்கு, கண்**

**24] விலங்கு, பறவை முதலியன ------------- அறிவு.**

1] ஈரறிவு

2] மூவறிவு

3] நாலறிவு

**4] ஐயறிவு**

**குறிப்பு :- மெய், வாய், மூக்கு, கண், செவி**

**25] மனிதர் ------ அறிவு.**

1] மூவறிவு

2] நாலறிவு

3] ஐயறிவு

**4] ஆறறிவு**

**குறிப்பு :- மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம்**

**26] ------------- மரங்கள் அடர்ந்துள்ள சிரபுஞ்சிதான் உலகிலேயே அதிக அளவு மழைபெறும் இடம்.**

1] தமிழ்நாட்டில்

2] டெல்லியில்

**3] அசாமில்**

4] பஞ்சாப்பில்

**27] இந்தியாவில் ----------- இல் ஒரு பங்கு அளவே காடுகள் உள்ளன. இவை மழைவரக் காரணமாக இருப்பதனோடு மட்டுமில்லாமல் வனவிலங்குகளுக்கும் புகலிடமாக உள்ளன.**

1] ஆறு

2] ஏழு

**3] எட்டு**

4] ஒன்பது

**28] ------------- மாதம் முதல் வாரத்தை அரசு வன விலங்கு வாரமாக கொண்டாடி வருகிறது.**

1] ஜனவரி

2] மார்ச்சு

4] ஜூன்

**4] அக்டோபர்**

**29] வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் ---------- ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.**

1] 1952

2] 1962

**3] 1972**

4] 1982

**30] நமது நாட்டில் ---------- வனவிலங்குப் பாதுகாப்பு இடங்களும், அறுபத்தாறு தேசிய வனவிலங்குப் பூங்காக்களும் முந்நூற்று அறுபத்தெட்டுப் புகலிடங்களும் அமைந்துள்ளன.**

1] பதினைந்து

2] பதினாறு

**3] பதினேழு**

4] பதினெட்டு

**31] ஒவ்வோராண்டும் அக்டோபர் திங்கள் ------------ நாள் உலக வனவிலங்கு நாளாக கொண்டாடப்படுகிறது.**

1] முதல்

2] இரண்டாம்

3] மூன்றாம்

**4] நான்காம்**

**32] சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியகம் எப்போது தொடங்கப்பட்டது?**

**1] கி.பி 1851**

2] கி.பி 1852

3] கி.பி 1853

4] கி.பி 1854

**குறிப்பு :- அருங்காட்சியகம் என்பது அரிதான பழம்பொருள்களைத் தொகுத்து வைத்துள்ள இடமாகும். சென்னை எழும்பூரில் அருங்காட்சியகம் அமைந்துள்ளது. இது கி.பி 1851 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இக்காட்சியகம் முதலில் மைய அருங்காட்சியகம் என்றழைக்கப்பட்டது.**

**33] 'முகிலன் வந்தான்' என்பது ஒரு தொடர். இத்தொடரில் முகிலன் என்பது எழுவாய். இந்த எழுவாய், வந்தான் என்னும் பயனிலையை ஏற்று இயல்பாக வருகிறது. இந்த எழுவாய் வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றுள் ஒன்றனைப் பயனிலையாகக்கொண்டு முடியும். இவ்வாறு வருவது -------------------- எனப்படும்.**

**1] எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை**

2] இரண்டாம் வேற்றுமை

3] மூன்றாம் வேற்றுமை

4] நான்காம் வேற்றுமை

**குறிப்பு :- எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை. இதற்கு உருபு இல்லை.**

winmeen

**34] ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது ---------------- எனப்படும். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை எனவும் வழங்குவர்.**

1] எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை

**2] இரண்டாம் வேற்றுமை**

3] மூன்றாம் வேற்றுமை

4] நான்காம் வேற்றுமை

**குறிப்பு :- இரண்டாம் வேற்றுமை:- இதன் உருபு 'ஐ' அஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பொருள்களில் வரும்.**

**(எ. கா.)-**

வளவன் பள்ளியைக் கட்டினான் - ஆக்கல்

சோழன் பகைவரை அழித்தான் - அழித்தல்

தேன்மொழி கோவிலை அடைந்தாள் - அடைதல்

குழகன் சினத்தை விடுத்தான் - நீத்தல்

கயல்விழி குயிலைப் போன்றவள் - ஒத்தல்

கண்ணன் செல்வத்தை உடையவன் - உடைமை

35] ---------- **வேற்றுமை, தம்மையேற்ற பெயர்ப்பொருளைக் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளாக வேறுபடுத்தும். இவற்றுள் ஆல், ஆன் உருபுகள் கருவி, கருத்தா ஆகிய இருபொருள்களிலும் வரும். கருவி முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.**

1] எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை

2] இரண்டாம் வேற்றுமை

3] **மூன்றாம் வேற்றுமை**

4] நான்காம் வேற்றுமை

**குறிப்பு :- மூன்றாம் வேற்றுமை :- உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன.**

**(எ.கா.)**

நாரால் கயிறு திரித்தான்.

முதற் கருவி (காரியமாக மாறி அஃதாகவே இருப்பது).

கையால் கயிறு திரித்தான்.

துணைக்கருவி (காரியம் செயல்படும்வரை துணையாக இருப்பது.)

இதேபோல் கருத்தாவும் இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இருவகைப்படும்.

**(எ.கா.)**

தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.

இயற்றுதல் கருத்தா. (தானே செய்வது)

கோவில் அரசனால் கட்டப்பட்டது. - ஏவுதல் கருத்தா.

(தான் செய்யாமல் பிறரைச் செய்ய வைப்பது.)

**உடனிகழ்ச்சி என்றால் என்ன?**

ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் உடனிகழ்வது உடனிகழ்ச்சிப் பொருள் எனப்படும். (எ.கா.)

தாயோடு குழந்தை சென்றது.

நாயோடு குட்டியும் சென்றது.

கருவிப்பொருளில் கொண்டு என்னும் சொல்லும் உடனிகழ்ச்சிப் பொருளில் உடன் என்னும் சொல்லும் சொல்லுருபுகளாக வரும்.

(எ.கா.)நூல்கொண்டு தைத்தான்

ஆறுமுகனுடன் வள்ளி சென்றாள்.

**36] கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும் வேற்றுமை ----------?**

1] எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை

2] இரண்டாம் வேற்றுமை

3] மூன்றாம் வேற்றுமை

**4] நான்காம் வேற்றுமை**

**குறிப்பு :- (எ. கா.) - உருபு ‘கு’ .**

புலவர்க்குப் பரிசு கொடுத்தார் - கொடை

நோய்க்குப் பகை மருந்து - பகை

பாரிக்கு நண்பர் கபிலர் - நட்பு

வீட்டுக்கு ஒரு பிள்ளை - தகுதி

வளையலுக்குப் பொன் - அதுவாதல்

கூலிக்கு வேலை - பொருட்டு

கோவலனுக்கு மனைவி கண்ணகி - முறை

திருத்தணிக்கு வடக்கே வேங்கடம் - எல்லை

'கு' வுக்குப் பதிலாகப் பொருட்டு, நிமித்தம் என்பன சொல்லுருபுகளாக வரும்.

(எ.கா.)

கூலியின்பொருட்டு வேலை செய்தான்.

வேலையின் நிமித்தம்அயலூர் சென்றான்.

கு உடன் ஆக என்பதும் சேர்ந்து வரும்.

(எ.கா.)

கூலிக்காக வேலை செய்தான்.

**37] இல், இன் - எந்த வேற்றுமைக்கான உருபு?**

1] இரண்டாம் வேற்றுமை

2] மூன்றாம் வேற்றுமை

3] நான்காம் வேற்றுமை

**4] ஐந்தாம் வேற்றுமை**

குறிப்பு :- ஐந்தாம் வேற்றுமை :- உருபுகள் இல், இன் என்பன. இவை தம்மை ஏற்ற பெயர்பொருளை நீங்கல், ஒப்பு, எல்லை ஏதுப்பொருள்களாக வேறுபடுத்தும்.

(எ.கா.) - தலையின் இழிந்த மயிர் - நீங்கல்

பாலின் நிறம் கொக்கு - ஒப்பு

சென்னையின் மேற்கு வேலூர் - எல்லை

அறிவில் மிக்கவர் ஔவை - ஏது

**இருந்து, நின்று, விட, காட்டிலும் என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் ஆகும்.**

(எ.கா.) - வேலன் ஊரிலிருந்து வந்தான். - இருந்து

அரசன் தேரினின்று இறங்கினான் - நின்று

கயல்விழி என்னைவிடப் பெரியவள் - விட

தமிழைக்காட்டிலும் சுவையான மொழி உண்டா? - காட்டிலும்

**38] அது, அது, அ - எந்த வேற்றுமைக்கான உருபு?**

1] இரண்டாம் வேற்றுமை

2] மூன்றாம் வேற்றுமை

3] ஐந்தாம் வேற்றுமை

**4] ஆறாம் வேற்றுமை**

**குறிப்பு :- ஆறாம் வேற்றுமை :**

உருபுகள் அது, ஆது, அ என்பன.

அது, ஆது என்பன ஒருமைக்கும், அ என்பது பன்மைக்கும் வரும்.

இவ்வுருபுகள் கிழமைப் (உரிமை) பொருளில் வரும்.

(எ.கா.) -

எனது வீடு

எனாது நூல்

தை, மாசி எனத் தமிழ் மாதங்கள் பன்னிரண்டு.

ஆறாம் வேற்றுமைக்கு ‘உடைய’ என்பது சொல்லுருபாக வரும். (எ.கா.) - என்னுடைய வீடு, நண்பனுடைய சட்டை.

**39] கண், கால், மேல், கீழே, இடம், இல் - எந்த வேற்றுமைக்கான உருபு?**

1] இரண்டாம் வேற்றுமை

2] மூன்றாம் வேற்றுமை

3] ஐந்தாம் வேற்றுமை

**4] ஏழாம் வேற்றுமை**

**குறிப்பு :- ஏழாம் வேற்றுமை :-**

உருபுகள் கண், கால், மேல், கீழே, இடம், இல் முதலியன.

(எ.கா.) - மணியில் ஒலி - இல்

வீட்டின்கண் பூனை - கண்

அவனுக்கு என்மேல் வெறுப்பு - மேல்

பெட்டியில் பணம் உள்ளது - இல்

குறிப்பு : ‘இல்’ என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்பு, ஏது, நீங்கல் ஆகிய பொருளில் வரும். ஏழாம் வேற்றுமை உருபு இல் இடப்பொருளில் வரும்.

(எ.கா.) - மாலையில் மலர்கள். இல் ஏழாம் வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்தது. மாலையிலிருந்து மலரைப் பறித்தான். இல் ஐந்தாம் வேற்றுமை உருபு நீங்கல் பொருளில் வந்தது.

**40] விளிவேற்றுமை - என்று எதனை அழைப்பர்?**

**1] எட்டாம் வேற்றுமை**

2] மூன்றாம் வேற்றுமை

3] ஐந்தாம் வேற்றுமை

4] ஏழாம் வேற்றுமை

குறிப்பு :- எட்டாம் வேற்றுமை :- விளிவேற்றுமை. படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்க இவ்வேற்றுமை பயன்படுகிறது. இதனை விளிவேற்றுமை என வழங்குவர். **(எ.கா.) - கண்ணா வா!, கிளியே பேசு!**

**41] வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது?**

1] நான்காம் வேற்றுமை

2] இரண்டாம் வேற்றுமை

**3] முதல் வேற்றுமை**

4] ஆறாம் வேற்றுமை

**42] பெயர்ச்சொல்லைக் கருத்தாவாக மாற்றுவது ?**

1] நான்காம் வேற்றுமை

2] இரண்டாம் வேற்றுமை.

**3] முதல் வேற்றுமை**

4] ஆறாம் வேற்றுமை

**43] கிழமைப்பொருளில் வருவது?**

1] நான்காம் வேற்றுமை

2] இரண்டாம் வேற்றுமை

3] முதல் வேற்றுமை.

**4] ஆறாம் வேற்றுமை**

**44] இராமனுக்குத் தம்பி இலக்குவன். இதிலுள்ள வேற்றுமை உருபு ---------- பொருளில் வந்துள்ளது.**

1] கொடை

2] பகை

3] நட்பு

**4] முறை**

**45] செயப்படுபொருள் வேற்றுமை ------------ எனவும் அழைக்கப்பெறும்.**

**1] இரண்டாம் வேற்றுமை உருபு**

2] மூன்றாம் வேற்றுமை உருபு

3] ஐந்தாம் வேற்றுமை உருபு

4] நான்காம் வேற்றுமை உருபு

**46] கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் ---------- உருபு வரும்.**

**1] ஆல், ஆன்**

2] ஒடு, ஓடு

3] கண், இடம்

4] இவற்றில் ஏதுமில்லை

**47] விளி வேற்றுமை என்று அழைக்கப்படுவது?**

1] இரண்டாம் வேற்றுமை

2] மூன்றாம் வேற்றுமை

**3] எட்டாம் வேற்றுமை**

4] நான்காம் வேற்றுமை

**48] பொருந்தாதது எது?**

1] காட்டை அழித்தான் - அழித்தல்

2] புலியைப் போன்றவன் - ஒத்தல்

3] கூலியின் பொருட்டு வேலை - பொருட்டு

4] என்னுடைய வீடு - ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு

**5] ஏழாம் வேற்றுமை - அவன் யார்**

**குறிப்பு :- ஏழாம் வேற்றுமை - கிளையின்கண் காக்கை**

**49] பொருந்தாது எது?**

1] முதல் வேற்றுமை - அவன் யார்?

2] மூன்றாம் வேற்றுமை - மரத்தால் செய்தது

3] ஐந்தாம் வேற்றுமை - கல்வியில் பெரியவர் கம்பர்

4] ஏழாம் வேற்றுமை - கிளையின்கண் காக்கை

**5] ஆறாம் வேற்றுமை - ஐ**

**குறிப்பு :- ஆறாம் வேற்றுமை - அது, ஆது, அ**

**50] நன்னூலுக்குக் காண்டிகையுரை கண்டவர்?**

**1] இராமானுசக் கவிராயர்**

2] மறைமலையடிகள்

3] வேங்கட மகாலிங்கம்

4] மீனாட்சி சுந்தரம்

**51] தெரியாது - இது கீழ்க்கண்ட எதனுடைய எடுத்துக்காட்டு?**

**1] குற்றியலுகரம்**

2] குற்றியலிகரம்

3] முற்றியலுகரம்

4] இவற்றில் ஏதுமில்லை

**52] தமிழ்நாட்டின் தேசியப்பறவை?**

1] கிளி

2] மயில்

**3] மரகதப் புறா**

4] இவற்றில் ஏதுமில்லை

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 7

**1] விடுபட்டதை தேர்வு செய்க.**

**எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**

**------------- ---------------- ------------ ?**

**1] பண்புடைமை என்னும் வழக்கு**

2] பண்புபா ராட்டும் உலகு

3] பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

4] பண்புள பாடறிவார் மாட்டு

**2] விடுபட்டதை தேர்வு செய்க.**

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**

**------------- ---------------- ------------ ?**

**1] பண்புடைமை என்னும் வழக்கு**

2] பண்புபா ராட்டும் உலகு

3] பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

4] பண்புள பாடறிவார் மாட்டு

**3] விடுபட்டதை தேர்வு செய்க.**

**உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**

**------------- ---------------- ------------ ?**

1] பண்புடைமை என்னும் வழக்கு

2] பண்புபா ராட்டும் உலகு

**3] பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு**

4] பண்புள பாடறிவார் மாட்டு

**4] விடுபட்டதை தேர்வு செய்க.**

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**

-------------- ------------------ ------------- ?

1] பண்புடைமை என்னும் வழக்கு

**2] பண்புபா ராட்டும் உலகு**

3] பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

4] பண்புள பாடறிவார் மாட்டு

**5] விடுபட்டதை தேர்வு செய்க.**

**நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**

-------------- ------------------ ------------- ?

1] பண்புடைமை என்னும் வழக்கு

2] பண்புபா ராட்டும் உலகு

3] பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

**4] பண்புள பாடறிவார் மாட்டு**

**6] விடுபட்டதை தேர்வு செய்க.**

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**

-------------- ------------------ ------------- ?

**1] மண்புக்கு மாய்வது மன்**

2] மக்கட்பண்(பு) இல்லா தவர்

3] பண்பாற்றா ராதல் கடை

4] பகலும்பாற் பட்டன் றிருள்

**7] விடுபட்டதை தேர்வு செய்க.**

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**

**------------- ----------------- ----------- ?**

1] மண்புக்கு மாய்வது மன்

**2] மக்கட்பண்(பு) இல்லா தவர்**

3] பண்பாற்றா ராதல் கடை

4] பகலும்பாற் பட்டன் றிருள்

**8] விடுபட்டதை தேர்வு செய்க.**

**நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்**

**------------- ----------------- ----------- ?**

1] மண்புக்கு மாய்வது மன்.

2] மக்கட்பண்(பு) இல்லா தவர்

**3] பண்பாற்றா ராதல் கடை**

4] பகலும்பாற் பட்டன் றிருள்

**9] விடுபட்டதை தேர்வு செய்க.**

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**

**------------- ----------------- ------------ ?**

1] மண்புக்கு மாய்வது மன்

2] மக்கட்பண்(பு) இல்லா தவர்

3] பண்பாற்றா ராதல் கடை

**4] பகலும்பாற் பட்டன் றிருள்**

**10] விடுபட்டதை தேர்வு செய்க.**

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**

**------------- ----------------- ------------ ?**

1] மண்புக்கு மாய்வது மன்

2] மக்கட்பண்(பு) இல்லா தவர்

**3] கலந்தீமை யால்திரிந் தற்று**

4] பகலும்பாற் பட்டன் றிருள்

**11] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வழக்கு - நன்னெறி

**2] ஆன்ற - தாழ்ந்த**

3] நீடிய - தீராத

4] நன்றி - உதவி

**குறிப்பு :- ஆன்ற - உயர்ந்த**

**12] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நகையுள்ளும் - விளையாட்டாகவும்

2] பாடறிவார் - நெறியுடையார்

3] மாய்வது - அழிவது

**4] அரம் - நன்மை**

**குறிப்பு :- அரம் - வாளைக் கூர்மையாக்கும் கருவி.**

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நண்பு - நட்பு

2] நயம்இல - தீங்கு, இனிமையற்ற

**3] கடை - நட்பு**

4] நயன் - நேர்மை

**குறிப்பு :- கடை - இழிவு**

**14] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நகல்வல்லர் - சிரித்து மகிழ்பவர்

2] மாயிரு ஞாலம் - மிகப்பெரிய உலகம்

3] திரிந்தற்று - திரிந்ததுபோன்றது

**4] நவ்வி - புலி**

**குறிப்பு :- நவ்வி - மான்**

**15] வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்; வாடினேன் பசியினால் இளைத்தே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்**

**16] வீடுதோ றிரந்தும் பசியாற தயர்ந்த; வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்**

**17] நீடிய பிணியால் வருந்திகின் றோர்என்; நேர்உறக் கண்டுளந் துடித்தேன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்**

**18] ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்; சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

3] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**4] திருவருட்பா, இராமலிங்க அடிகளார்**

**19] இராமலிங்க அடிகளார் அவர்களின் பெற்றோர் பெயர் என்ன?**

1] சாத்தப்பன் - விசாலாட்சி

**2] இராமையா - சின்னம்மை**

3] ராகவேந்திரர் - கல்பனா அம்மையார்

4] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

**20] இராமலிங்க அடிகளார் அவர்களின் ஊர்?**

**1] சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர்**

2] தூத்துக்குடிக்கு அருகிலுள்ள கோவில்பட்டி

3] காஞ்சிபுரம் அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூர்

4] திருவாரூர் அருகிலுள்ள மன்னார்குடி

**21] இராமலிங்க அடிகளார் அவர்களின் சிறப்புப் பெயர்?**

1] மனிதருள் மாணிக்கம்

2] தெய்வப் புலவர்

**3] திருவருட்பிரகாச வள்ளலார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**22] இராமலிங்க அடிகளார் அவர்களின் காலம்?**

1] 05.10.1803 முதல் 30.01.1854 வரை

2] 05.10.1813 முதல் 30.01.1864 வரை

**3] 05.10.1823 முதல் 30.01.1874 வரை**

4] 05.10.1833 முதல் 30.01.1884 வரை

**23] கீழ்க்கண்ட கூற்று எந்தநூலைப் பற்றி கூறுகிறது?**

**இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல் என்றும், இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என்றும் இருவகையாகப் பொருள் கூறலாம். இஃது ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதி பிள்ளைப் பெருவிண்ணப்பம் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.**

**1] திருவருட்பா**

2] மணிமேகலை

3] நற்றிணை

4] கலித்தொகை

**24] வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சத்திய தருமச்சாலை ஆகியவற்றை நிறுவியவர் யார்?**

1] சீத்தலைச்சாத்தனார்

2] இளங்கோவடிகள்

3] விளம்பி நாகனார்

**4] இராமலிங்க அடிகளார்**

**25] திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] சீத்தலைச்சாத்தனார்

2] இளங்கோவடிகள்

3] விளம்பி நாகனார்

**4] இராமலிங்க அடிகளார்**

**26] உலகில் தோன்றிய பல்வேறு அறிவியல் கல்விகளில் மிகத் தொன்மையானது, பழமையானது ---------- கல்வி.**

1] ஜோதிடம்

2] மருத்துவம்

**3] வானியல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**27] உலகம், ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் -------------- குறிப்பிடுகிறது.**

1] மணிமேகலை

**2] தொல்காப்பியம்**

3] அகத்தியம்

4] அகநானூறு

**குறிப்பு :- தொல்காப்பியப் பாடல் :- நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்; கலந்த மயக்கம் ஆதலின்;**

**28] மண்திணிந்த நிலனும்; நிலன் ஏந்திய விசும்பும் ; விசும்பு தைவரு வளியும் ; வளித்தலை இய தீயும்; தீ முரணிய நீரும் என்றாங்கு; ஐம்பெரும்பூதத்து இயற்கை போல்… இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**

1] மணிமேகலை

2] தொல்காப்பியம்

3] அகத்தியம்

**4] புறநானூறு**

**29] பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்புவரை, உலகம் தட்டையானது என்றே நம்பி வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில்தான் போலந்து நாட்டைச் சார்ந்த ----------------------- என்பவர் உலகம் தட்டை இல்லை, உருண்டையானது என முறையாகக் கணித்து கூறினார்.**

1] காரல் மார்க்ஸ்

**2] நிக்கோலஸ்கிராப்ஸ்**

3] கலிலியோ

4] ஐசக் நியூட்டன்

**30] பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த --------------- என்பவர், உலகம் உருண்டையானது என்பதனைத் தம் தொலைநோக்கியால் கண்டுபிடித்துச் சொன்ன பிறகுதான் மக்கள் ஏற்றுக்கொண்டனர்.**

1] காரல் மார்க்ஸ்

2] நிக்கோலஸ்கிராப்ஸ்

**3] கலிலியோ**

4] ஐசக் நியூட்டன்

**31] சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை - என்னும் பாடலில் உலகம் சுழல்கிறது எனக் கூறியவர்?**

1] இராமலிங்க அடிகளார்

2] நல்லாதனார்

**3] திருவள்ளுவர்**

4] விளம்பி நாகனார்

**32] வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் ----------------?**

1] சனி

**2] ஞாயிறு**

3] செவ்வாய்

4] புதன்

**33] ---------------- நூலில் --------------- என்பவர் ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என ஞாயிற்றைப் போற்றியுள்ளமையைக் காணலாம்.**

**1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] திருவருட்பா, இராமலிங்க அடிகள்

4] புறநானூறு, கண்ணகனார்

**34] ஞாயிற்றைச் சுற்றியுள்ள பாதையை ஞாயிற்று வட்டம் என்றனர் பழந்தமிழர், என ----------- குறிப்பிடுகிறது.**

1] சிலப்பதிகாரம்

2] மணிமேகலை

3] திருவருட்பா

**4] புறநானூறு**

**குறிப்பு :- செஞ்ஞாயிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப், பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் - இப்பாடலின் வழியாக ஞாயிற்று வட்டம், அதன் இயக்கம், அந்தரமாய் நிற்கும் வான்வெளி மண்டலம் என்பன பற்றிய வானியல் அறிவை அறிய முடிகிறது.**

**35] தானே ஒளிவிடக்கூடிய ஞாயிற்றை நாள்மீன் எனவும், ஞாயிற்றிடமிருந்து ஒளிபெற்று ஒளிவிடக்கூடியவற்றைக் கோள்மீன் எனவும் பண்டைத்தமிழர் குறிப்பிட்டுள்ளனர். -------- தானாக ஒளிவீசுவதில்லை.**

**1] திங்கள்**

2] செவ்வாய்

3] புதன்

4] வியாழன்

**குறிப்பு :- மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழி மதி - இந்த வானியல் உண்மையைத் திருக்குறள் வெளிப்படுத்துகிறது.**

**36] திங்களைப் பாம்பு கொண்டற்று - என்று கூறும் நூல் எது?**

**1] திருக்குறள்**

2] புறநானூறு

3] கலித்தொகை

4] நற்றிணை

**குறிப்பு :- திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள் 1146) என்னும் குறள் தொடர், திங்கள் மறைப்புப் (சந்திரகிரகணம்) பற்றியதாகும் . திங்களின் நிலையைக் கருதித் தேய்பிறை, வளர்பிறை எனவும் குறித்துள்ளனர்.**

**37] புதிதாகக் கண்டறிந்த கோளைப் ---------- என அழைத்தனர். புதிதாக அறிந்ததனால் அதற்கு 'அறிவன்' எனவும் பெயருண்டு.**

1] செவ்வாய்

2] புளூட்டோ

**3] புதன்**

4] வெள்ளி

**குறிப்பு :- செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய் என அழைத்தனர். இன்றைய அறிவியல் வல்லுனர்கள் செவ்வாய் கோளில், மண் சிவப்பு நிறமாய் இருப்பதனை அறிவியல் ஆய்வு மூலம் புலப்படுத்தியுள்ளனர். வெண்மை நிறமுடைய கோளை வெள்ளி என அழைத்தனர். வெள்ளிக்கோளில் வெள்ளித்தாது இருப்பதனை இன்று அறிவியல் ஆய்வு புலப்படுத்தியுள்ளது. ஞாயிறு உதயத்திற்கு முன்பே வெள்ளி எழுந்து விடியலை உணர்த்துவதனால் இதனை விடிவெள்ளி என்றனர். புதிதாகக் கண்டறிந்த கோளைப் புதன் என அழைத்தனர். புதிதாக அறிந்ததனால் அதற்கு 'அறிவன்' எனவும் பெயருண்டு.**

**38] வியா என்றால் ---------, ---------- எனப் பொருள்படும். வானில் பெரிய கோளாக வலம் வருவதனையே வியாழன் என்றனர்.**

**1] பெரிய, நிறைய**

2] சிறிய, குறைய

3] சிறந்த, பரந்த

4] இவற்றில் ஏதுமில்லை

**39] ---------- கோளை காரிக்கோள் என அழைத்தனர். இக்கோளில் கந்தகம் இருப்பதாக இன்றைய அறிவியல் ஆய்வு கூறுகிறது.**

1] செவ்வாய்

2] வெள்ளி

3] புதன்

**4] சனி**

**40] 'வலவன் ஏவா வானூர்தி' - என்னும் ------------ பாடல் வரி சங்க காலத்திலேயே ஓட்டுநர் இல்லா வானூர்தி இருந்தது என்னும் செய்தியைக் கூறுகிறது.**

**1] புறநானூறு**

2] கலித்தொகை

3] நற்றிணை

4] மணிமேகலை

**குறிப்பு :- வானூர்தி ஓட்டுகிறவனைத் தமிழில் வலவன் என அழைக்கிறோம்.**

**41] ---------, --------- நூல்களில் வான்வழிப் பயணங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.**

**1] சிலப்பதிகாரம், மணிமேகலை**

2] திருக்குறள், கலித்தொகை

3] நற்றிணை , குறுந்தொகை

4] ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து

**42] -------------- என்னும் நூல் மயிற்பொறி விமானத்தின் செயல்திறனைப் பற்றி கூறுகிறது.**

**1] சீவகசிந்தாமணி**

2] கலித்தொகை

3] நற்றிணை

4] மணிமேகலை

**43] --------- நூலில், இராவணன் செலுத்திய புட்பக விமானத்தைப் பற்றிய செய்தி உள்ளது.**

1] சீவகசிந்தாமணி

2] கலித்தொகை

**3] கம்பராமாயணம்**

4] மணிமேகலை

**45] ------------ நூலில், வானூர்தி வடிவமும், அதனை இயக்கும் முறைமையும் பற்றிய வான் பயணச் செய்திகள் காணப்படுகின்றன.**

**1] பெருங்கதை**

2] கலித்தொகை

3] கம்பராமாயணம்

4] மணிமேகலை

**46] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இத்தாலி நாட்டின் பைசா நகரத்தின் ஒரு மாலைப்பொழுதில் தலைமைக் கிறித்தவக் கோவிலில் வழிபாடு நடந்து கொண்டிருந்தது. அனைவரின் பார்வையும் ஆண்டவனை நோக்கி இருந்தது. ஆனால், ஒரு சிறுவனின் பார்வை மட்டும் அங்கு ஊசலாடிக் கொண்டிருந்த தொடர்விளக்கின் மீது இருந்தது. அச்சிறுவனின் வயது 17 மட்டும் தான். அச்சிறுவனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பே மருத்துவத்துறையில் நாடித்துடிப்பைக் கணக்கிடும் கருவியைக் கண்டுபிடிக்கத் தூண்டுகோலாய் அமைந்தது. கடிகாரத்தின் பெண்டுலத்தை - ஊசலை - அமைத்து நேரத்தைக் கணக்கிடவும் உதவியது.**

1] ஐசக் நியூட்டன்

2] தாமசு ஆல்வா எடிசன்

**3] கலீலியோ கலிலி**

4] இவர்களில் யாருமில்லை

**47] இவர், ஊசல் விதியை கண்டுபிடித்தார் மற்றும் வானியல் ஆய்வுக்கு முன்னோடியாகவும் விளங்கினார். அவர் யார்?**

1] ஐசக் நியூட்டன்

2] தாமசு ஆல்வா எடிசன்

**3] கலீலியோ கலிலி**

4] இவர்களில் யாருமில்லை

**48] கலீலியோ கலிலி பிறந்த நாடு?**

1] எகிப்து

2] பிரான்சு

**3] இத்தாலி**

4] பிரேசில்

**47] கலீலியோ கலிலி இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் --------------- ஆம் ஆண்டு பிறந்தார்?**

1] 1562

2] 1563

**3] 1564**

4] 1565

**49] கலீலியோ கலிலி பிறந்த வருடம்?**

1] 15.03.1564

2] 15.04.1564

3] 15.01.1564

**4] 15.02.1564**

**50] கலீலியோ கலிலி அவர்களின் தந்தை பெயர்?**

**1] வின்சென்சோ கலீவீ**

2] தாமசு ஆல்பிரட்

3] ஜான்சன் கலீலி

4] இவர்களில் யாருமில்லை

**51] கலீலியோ கலிலி, தம் இளமைக்காலத்திலிருந்தே இயற்கை மீதும், அறிவியல் மீதும் மிகுந்த ஆர்வம் உடையவராய் விளங்கினார். ------------ படிப்பதில் தமக்கிருக்கும் விருப்பத்தைத் தந்தையாரிடம் வெளிப்படுத்தினார்.**

1] வணிகம்

**2] மருத்துவம்**

3] வானியல்

4] கணிதம்

**52] கலீலியோ, பைசா நகரப் பல்கலைக்கழகத்தில் -------------- துறையில் மாணவராய்ச் சேர்ந்த குறுகிய காலத்திற்குள் அறிவியலில் அவர்தம் முதல் கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. அதுதான் ஊசல்விதி.**

**1] மருத்துவம்**

2] வணிகம்

3] கணிதம்

4] வானியல்

**53] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**பல்கலைக்கழகத்தில் கலீலியோ பயிலும் துறையில் கணக்குப் பாடமாக அமையவில்லை. ஒருமுறை கணக்கு வல்லுநர் ஒருவர் சுவையாகக் கணக்கு நடத்திக் கொண்டிருந்ததனைத் தற்செயலாக அவர் கேட்டார். பல நாள், அவர் கணக்கியல் விரிவுரையாளரின் அறையில் மறைந்திருந்து கணக்குப் பாடங்களைப் கேட்டார். ஆகவே, கணக்கில் மிகவும் நாட்டம் கொண்டு, சிறந்த பல ஆய்வுகளை வெளியிட்டார். அதனால், தம்முடைய ---------- ஆம் அகவையிலேயே பைசாநகரப் பல்கலைக்கழகத்தில் கணக்கியல் பேராசிரியராகப் பணியமர்த்தப்பபடார்.**

1] 23 2] 24 **3] 25** 4] 26

**54] ஒரே நேரத்தில் உயரத்திலிருந்து எறியப்படும் பொருள்களுள் எடை மிகுந்த பொருள் விரைவாகவும், எடை குறைந்த பொருள் மெதுவாகவும் நிலத்தை வந்தடையும் - இது யாருடைய கண்டுபிடிப்பு?**

1] கலீலியோ

2] ஐசக் நியூட்டன்

**3] அரிஸ்டாட்டில்**

4] இவர்களில் யாருமில்லை

**55] அரிஸ்டாட்டிலின் கருத்துப்படி, ஒரே நேரத்தில் உயரத்திலிருந்து எறியப்படும் பொருள்களுள் எடை மிகுந்த பொருள் விரைவாகவும், எடை குறைந்த பொருள் மெதுவாகவும் நிலத்தை வந்தடையும் என்றிருந்தது. பல ஆண்டாக அரிஸ்டாட்டில் கூறிய இக்கருத்துச் சரியானதுதான் என்று பொதுமக்களும் நம்பி வந்தனர். ஆனால், --------------- என்பவர், இக்கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, தம்முடைய கருத்தை ஆய்வின்மூலம் மெய்பித்துக் காட்ட விரும்பினார். பொதுமக்கள் முன்னிலையில் பைசா கோபுரத்தில் தாமே ஏறி நூறு பவுண்டு (கிலோ) எடையும். ஒரு பவுண்டு (கிலோ) எடையும் கொண்ட இரு இரும்புக்குண்டுகளை ஒரே நேரத்தில் மேலிருந்து கீழே விழச்செய்தார். அவை இரண்டும் ஒரே நேரத்தில் தரையைத் தொட்டன.**

**1] கலீலியோ**

2] ஐசக் நியூட்டன்

3] தாமசு ஆல்வா எடிசன்

4] இவர்களில் யாருமில்லை

**56] கலீலியோ, ---------- ஆம் ஆண்டில் பதுவா பல்கலைக்கழகத்தில் கணக்கியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.**

1] 1580 2] 1582 3] 1590 **4] 1592**

**57] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவர், கணக்கும் வானியலும் பற்றி விரிவுரை ஆற்றினாலும், நிலை இயக்கவியலிலும் பொறியியலிலும் ஆய்வு நிகழ்த்திக் கொண்டிருந்தார். இவர், காற்று மற்றும் வெப்ப அளவியை முதன்முதலாக உருவாக்கினார். இராணுவப் பொறியாளர்களும் துப்பாக்கி வீரர்களும் எளிதாகக் கணக்கிடுவதற்குக் கணக்குக் கருவியை வடிவமைத்தார்.**

**1] கலீலியோ**

2] ஐசக் நியூட்டன்

3] தாமசு ஆல்வா எடிசன்

4] இவர்களில் யாருமில்லை

**58] சூரியனைச் சுற்றியே புவி நகர்கிறது என்பது வானியல் அறிஞர் ------------ என்பவரின் வானியல் கொள்கையாகும்.**

1] கலீலியோ

2] ஐசக் நியூட்டன்

3] தாமசு ஆல்வா எடிசன்

**4] கோபர் நிகசு**

**59] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**வானியல் ஆய்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது இவரின் தொலைநோக்கி.தொலைவில் உள்ள பொருளிலிருந்து வரும் ஒளிக்கதிரைக் கோள ஆடியின் மூலம் ஒருங்குதிரட்டிக் கருவிழிக்குக் கொடுத்தால், அதன் திறன் மிகும் என்பதனை உணர்ந்தார்.இதனடிப்படையில் 1610 ஆம் ஆண்டில் தொலைநோக்கியை அமைத்து விண்வெளியை ஆய்வு செய்தார். பால்வீதி என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என மெய்ப்பித்தார். 'நிலவின் மேற்பரப்புக் கரடுமுரடானது என்றும், மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்தது' என்றும் தொலைநோக்கி மூலம் கண்டறிந்து கூறினார்.**

**1] கலீலியோ**

2] ஐசக் நியூட்டன்

3] தாமசு ஆல்வா எடிசன்

4] கோபர் நிகசு

**60] கலீலியோ கலிலி அவர்கள் , வீட்டில் சிறை வைக்கப்பட்ட ஆண்டு?**

1] 1601 2] 1610 **3] 1616** 4] 1661

**61] பல்வேறு துன்பங்களுக்கு இடையில் ------------ ஆம் ஆண்டில் உலகத்தின் முதன்மையான இரு முறைமைகளைப் பற்றிய உரையாடல் என்னும் தலைப்பிலும், அவரது கண்பார்வை பெரிதும் மங்கிய நிலையில், ----------- ஆம் ஆண்டில் புதிய அறிவியலைச் சார்ந்த இரு உரையாடல் என்னும் தலைப்பிலும் மிகச்சிறந்த நூல்களை எழுதி வெளியிட்டார். அந்நூல்களை அடிப்படையாகக்கொண்டே அறிவியல் அறிஞர் ஐசக் நியூட்டன் தம்முடைய கொள்கைகளை உருவாக்கினர்.**

**1] 1632, 1638**

2] 1633, 1637

3] 1631, 1636

4] 1630, 1635

**62] கலீலியோ கலிலி அவர்கள், ------------ ஆம் ஆண்டு சனவரித் திங்களன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.**

1] 1630

2] 1632

3] 1640

**4] 1642**

**63] நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றங்கள் ஏற்படுமானால் அதனை விகாரப்புணர்ச்சி என்பர். விகாரப்புணர்ச்சி --------- வகைப்படும்.**

1] 1 2] 2 **3] 3** 4] 4

**குறிப்பு :- விகாரப்புணர்ச்சி :-** நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றங்கள் ஏற்படுமானால் அதனை விகாரப்புணர்ச்சி என்பர்.

**(எ.கா.):-** பலா + சுளை = பலாச்சுளை - மெய் தோன்றியது.

படம் + கட்சி = படக்காட்சி - நிலைமொழி ஈறுகெட்டு மெய் தோன்றியது. ( ம் மறைந்து க் தோன்றியது)

பொன் + சிலை = பொற்சிலை - நிலைமொழி ஈறு திரிந்தது (ன் -ற்) ஆனது.

இவ்வாறு விகாரப்புணர்ச்சி தோன்றல், கெடுதல், திரிதல் என மூவகைப்படும்.

**(எ.கா.) -**

தோன்றல் : திரு + குறள் = திருக்குறள் (க்)

கெடுதல் : மரம் + வேர் = மரவேர் (ம்)

திரிதல் : பல் + பொடி = பற்பொடி (ற்)

**விகாரப்புணர்சிக்கு மேலும் சில எடுத்துக்காட்டுகள் கூறுங்கள்.**

மா + பழம் = மாம்பழம்.

வடக்கு + திசை = வடதிசை.

மணம் + கோலம் = மணக்கோலம்.

அல் + திணை = அஃறிணை

64] **பொருந்தாதது எது?**

இயல்பு புணர்ச்சி - தமிழ் + மண் = தமிழ்மண்

தோன்றல் - வாழை + குலை = வாழைக்குலை

**திரிதல் - பொன் + குடம் = பொன்குடம்**

கெடுதல் - பாடம் + வேளை = பாடவேளை

**குறிப்பு :- திரிதல் - பொன் + குடம் = பொற்குடம்**

**65] நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்கு ------------- என்று பெயர்.**

1] வழு

2] பொருள்கோள்

**3] புணர்ச்சி**

4] இவற்றில் ஏதுமில்லை

**66] வாழை + தோட்டம் என்பது ----------- புணர்ச்சி.**

1] இயல்பு

**2] விகாரப்**

3] திசைப்பெயர்

4] பண்புப்பெயர்

**67] நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது ----------------?**

**1] இயல்பு புணர்ச்சி**

2] விகார புணர்ச்சி

3] பண்புப்பெயர் புணர்ச்சி

4] திசைபெயர் புணர்ச்சி

**68] விகாரப் புணர்ச்சி ---------- வகைப்படும்.**

1] ஐந்து

2] ஆறு

**3] மூன்று**

4] நான்கு

**69] பொருந்தாதது எது? வல்லினம் மிகும்.**

1] அ, இ, எ என்னும் சுட்டெழுத்துக்களின் பின் வல்லொற்று மிகும்

2] அந்த, இந்த, அப்படி, எப்படி, அவ்வகை, இவ்வகை என்னும் சொற்களின் பின் வல்லொற்று மிகும்

3] இனி, தனி, மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்களின் பின் வல்லொற்று மிகும்

**4] இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின் பின் வல்லொற்று மிகாது**

**குறிப்பு :- இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின் பின் வல்லொற்று மிகும்.**

70] **பொருந்தாதது எது? வல்லினம் மிகும்.**

1] இரண்டாம் மற்றும் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் பின் வல்லொற்று மிகும்

**2] நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லொற்று மிகாது**

3] ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் பின் வல்லொற்று மிகும்

4] ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையின் பின் மற்றும் ஏழாம் வேற்றுமைத்தொகையின் பின் வல்லொற்று மிகும்

**குறிப்பு :- நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லொற்று மிகும்**

**71] "பொய் சொல்லா மாணிக்கம்" - என்று பெருமையோடு அழைக்கப்பட்டவர்?**

**1] வயிரவன் கோவில் சுப்பிரமணியார் மகனார் மாணிக்கம் (வ.சுப.மா)**

2] ராஜம் கிருஷ்ணன்

3] சுஜாதா

4] வேங்கட மகாலிங்கம்

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 8

**1] வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன் மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] வில்லிபாரதம், வில்லிபுத்தூரார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] கம்பராமாயணம், கம்பர்

**2] தேன்பெற்ற துழாய் அலங்கல் களப மார்பும் திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] வில்லிபாரதம், வில்லிபுத்தூரார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] கம்பராமாயணம், கம்பர்

**3] ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும் உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] வில்லிபாரதம், வில்லிபுத்தூரார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] கம்பராமாயணம், கம்பர்

**4] யான்பெற்ற பெருந்தவப்பேறு) என்னை அன்றி இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

**1] வில்லிபாரதம், வில்லிபுத்தூரார்**

2] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] கம்பராமாயணம், கம்பர்

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வான்பெற்ற நதி – கங்கையாறு

2] துழாய் அலங்கல் – துளசிமாலை

**3] களபம் – மாமரம்**

4] புயம் – தோள்

**குறிப்பு :- களபம் - சந்தனம்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] தைவந்து – தொட்டுத்தடவி

2] ஊன் – தசை

3] பகழி – அம்பு

**4] நாமம் – ஊர்**

**குறிப்பு :- நாமம் - பெயர்**

**7] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] இருநிலம் – பெரிய உலகம்

**2] நவ்வி - புலி**

3] ஆழி - கடல்

4] சிந்தை - மனம்

**குறிப்பு :- நவ்வி – மான்**

**8] வில்லிபுத்தூரார் அவர்களின் தந்தை பெயர்?**

1] முத்தையா

**2] வீரராகவர்**

3] வெங்கட்ராமன்

4] இவற்றில் ஏதுமில்லை

**9] வில்லிபுத்தூரார் புலவரை ஆதரித்தவர்?**

1] சடையப்ப வள்ளல்

2] நச்சினார்க்கினியர்

**3] வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்**

4] கடிகை முத்துப் புலவர்

**10] வில்லிபுத்தூரார் அவர்களின் காலம்?**

1] பத்தாம் நூற்றாண்டு

2] பன்னிரண்டாம் நூற்றாண்டு

3] பதிமூன்றாம் நூற்றாண்டு

**4] பதினான்காம் நூற்றாண்டு**

**11] வில்லிபாரதம் நூல் ----------- பருவம் கொண்டது.**

1] ஆறு

2] ஏழு

3] எட்டு

**4] பத்து**

**12] வில்லிபாரதம் நூல் ----------- விருத்தப் பாடலால் ஆனது.**

**1] 4350**

2] 3245

3] 2656

4] 1098

**13] காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்; கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல் வேண்டி; மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை; மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்; - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன்

**2] முடியரசன்**

3] மீ.ராசேந்திரன்

4] தாரா பாரதி

**14] தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்; தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்; மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு; மேல்விழுந்து பாடுப வன் கவிஞன் அல்லன் - - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன்

**2] முடியரசன்**

3] மீ.ராசேந்திரன்

4] தாரா பாரதி

**15] ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்; ஆள்களனத் துஞ்சாமல், தனது நாட்டின்; மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்; மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன்

**2] முடியரசன்**

3] மீ.ராசேந்திரன்

4] தாரா பாரதி

**16] காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக்; கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்; தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்; தலைவனெனப் பாடுபவன் கவிஞன்,வீரன் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வாணிதாசன்

**2] முடியரசன்**

3] மீ.ராசேந்திரன்

4] தாரா பாரதி

**17] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கைம்மாறு – பயன்

2] தேட்டையிட – செல்வம் திரட்ட

**3] மீட்சி – தீமை**

4] மாள – நீங்க

**குறிப்பு :- மீட்சி – மேன்மை**

**18] துரைராசு - என்பது யாருடைய இயற்பெயர்?**

1] தாராபாரதி

2] பெருஞ்சித்திரனார்

**3] முடியரசன்**

4] அழ. வள்ளியப்பா

**19] முடியரசன் (துரைராசு) அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

3] முத்தையா - ராஜம்மாள்

**4] சுப்பராயலு - சீதாலட்சுமி**

**20] முடியரசன் (துரைராசு) அவர்களின் ஊர்?**

1] திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி

2] தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி

3] விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர்

**4] தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம்**

**21] பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம் ஆகிய நூல்களின் ஆசிரியர்?**

1] தாராபாரதி

2] பெருஞ்சித்திரனார்

**3] முடியரசன்**

4] அழ. வள்ளியப்பா

**22] கீழ்க்கண்டவர்களுள், மீ.சு. உயர்நிலைப் பள்ளியில் (காரைக்குடி) தமிழாசிரியர் ஆக பணியாற்றியவர் யார்?**

1] தாராபாரதி

2] காமராசன்

3] சுஜாதா

**4] முடியரசன் (துரைராசு)**

**23] கீழ்க்கண்டவர்களுள் யாருக்கு, பறம்புமலையில் நடந்த விழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது?**

1] தாராபாரதி

2] காமராசன்

3] சுஜாதா

**4] முடியரசன் (துரைராசு)**

**24] முடியரசன் (துரைராசு) அவர்களுக்கு, பூங்கொடி என்னும் காவியத்துக்காக --------------- ஆம் ஆண்டில் தமிழக அரசு,பரிசு வழங்கியது.**

1] 1956

**2] 1966**

3] 1976

4] 1986

**25] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**இவர், பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.**

1] தாராபாரதி

2] காமராசன்

3] சுஜாதா

**4] முடியரசன் (துரைராசு)**

**26] முடியரசன் (துரைராசு) அவர்களின் காலம்?**

1] 07.10.1920 முதல் 03.10.1998 வரை

2]07.10.1930 முதல் 03.12.1998 வரை

**3] 07.10.1920 முதல் 03.12.1998 வரை**

4] 07.10.1920 முதல் 03.12.1988 வரை

**27] மன்னிப்பு உருதுச்சொல், பொறுத்துக்கொள்க எனத் தமிழில் சொல்லுங்கள் எனக் கூறியவர் யார்?**

1] மறைமலையடிகள்

2] தாராபாரதி

3] அயோத்திதாசப் பண்டிதர்

**4] தேவநேயப் பாவாணர்**

**28] தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர்?**

**1] கால்டுவெல்**

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

4] தேவநேயப் பாவாணர்

**29] தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் ------------ ?**

1] கால்டுவெல்

**2] மறைமலையடிகள்**

3] பரிதிமாற் கலைஞர்

4] தேவநேயப் பாவாணர்

**30] தனித்தமிழுக்கு வித்திட்டவர் ------------------ ?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

**3] பரிதிமாற் கலைஞர்**

4] தேவநேயப் பாவாணர்

**31] தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் ------------------ ?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**32] மொழிஞாயிறு என்று அழைக்கப்படுபவர் யார்?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**33] ------------------ என்பவர் தனித்தமிழ் ஊற்று, செந்தமிழ் ஞாயிறு, இலக்கியப் பெட்டகம், இலக்கணச் செம்மல், தமிழ்மானங் காத்தவர், தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர்மூச்சாகக் கொண்டவர்.**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**34] உலக முதன்மொழி தமிழ். இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ். திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் யார்?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**35] உலகின் முதல் மாந்தன் தமிழன்; தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் பாவாணரது ஆய்வுபுலத்தின் இரு கண்களாம். அவர், தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறினார். - இது யாருடைய கூற்று?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**36] தேவநேயப் பாவாணர் அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] சாத்தப்பன் - விசாலாட்சி

2] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

**3] ஞானமுத்து – பரிபூரணம்**

4] சுப்பராயலு – சீதாலட்சுமி

**37] தேவநேயப் பாவாணர் அவர்களின் ஊர்?**

1] திருச்சி

2] மயிலாடுதுறை

3] மதுரை

**4] சங்கரன்கோவில்**

**38] பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ் பி.ஓ.எல். - இதனுடன் தொடர்புடையவர் யார்?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**39] தேவநேயப் பாவாணர் அவர்களின் காலம்?**

1] 07.02.1902 – 15.01.1951

2] 07.02.1912 – 15.01.1961

3] 07.02.1922 – 15.01.1971

**4] 07.02.1902 – 15.01.1981**

**40] செந்தமிழ்ச் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்பெருங் காவலர் என 174 சிறப்புப் பெயர்கள் - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] கால்டுவெல்

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**41] கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் எனவும், பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் எனவும் வலியுறுத்தியவர் யார்?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**42] ஒருமுறை ஆசிரிய நண்பர் சிலருடன் தாரைமங்கலம் (தாரமங்கலம்) என்னும் ஊருக்கு சென்று, அங்கே இரவு தங்கிவிட்டு மறுநாள் காலையில் திரும்பினார். அவரை அன்பர் சிலர் சூழ்ந்துகொண்டு, ஊர்சென்று வந்ததனைப்பற்றிக் கேட்டனர். அவருள் ஒருவர், ஐயா பகலுணவும், இராவுணவும் எவ்வாறு இருந்தன? எனக் கேட்டார். பாவாணர் பகலுணவு, பகல் உணவாகவும், இராவுணவு இரா உணவாகவும் இருந்தன என்றார். - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**43] தமிழ் வளர்த்தால் பசியும் பட்னியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என எண்ணியவர் யார்?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**44] உண்ட வீட்டிற்கு எதாவது செய்தல் வேண்டும், உட்கார்ந்துக்கொண்டு உண்டு செல்வது நன்றாகாது - என்று கூறியவர் யார்?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**45] தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, மண்ணிலே விண், பண்டைத் தமிழர், நாகரிகமும் பண்பாடும், உயர்தரக் கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை, தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம் - முதலான நாற்பத்து மூன்று நூல்களையும், இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் இவர் எழுதியுள்ளார் - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**46] பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக --------------- அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுதிகள் சிலவற்றை வெளிக்கொணர்ந்தார்.**

1] 08.05.1972

2] 08.05.1973

**3] 08.05.1974**

4] 08.05.1975

**47] தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்ற இயலாத சூழல் நேர்ந்த போது, எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு, அவற்றோடு மானமும் உண்டு என்று வெளியேறியவர் யார்?**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**48] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், வறுமையில் வாடினாலும் பணம் கைக்குக் கிடைத்தால் நூல்களே வாங்குவார். புலமைச் செருக்கில்லாமல் மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்தவர். அன்பு கசியும் நெஞ்சத்தில் ஆழமான நன்றியுணர்வுமிக்கவர்.**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**49] ----------------- என்பவரின் பெயரில் சென்னை அண்ணாசாலையில் மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகிறது. இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பு என்னும் இடத்தில் பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.**

1] திரு.வி.க

2] மறைமலையடிகள்

3] பரிதிமாற் கலைஞர்

**4] தேவநேயப் பாவாணர்**

**50] -------------------- இல், 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார்.**

1] திருச்சி

2] சென்னை

**3] மதுரை**

4] கோவை

**51] மணம் நுகர்ந்ததற்குப் பணம் - என்னும் கதையின் ஆசிரியர் யார்?**

1] சுஜாதா

2] ராஜம் கிருஷ்ணன்

3] அழ. வள்ளியப்பா

**4] ஸ்ரீமதி எஸ்.இலட்சுமி (பார் புகழும் பரமார்த்தகுரு கதைகள்)**

**52] பலா + சுளை = பலாச்சுளை; பனி + போர் = பனிப்போர்; தினை + துணை = தினைத்துணை - ஆகிய எடுத்துக்காட்டுகள் எதனுடன் தொடர்புடையவை?**

**1] உயிரீற்றுப் புணர்ச்சி**

2] மெய்யீற்றுப் புணர்ச்சி

3] விகாரப் புணர்ச்சி

4] இவற்றில் ஏதுமில்லை

குறிப்பு:- உயிரீற்றுப் புணர்ச்சி :- பல, பலா, கனி, தீ இச்சொற்களைப் ஒலித்துப் பாருங்கள். இச்சொற்களில் கடைசி எழுத்து உயிர்மெய் எனினும் உயிர் ஈறாகக் கொள்ளுதல் வேண்டும்.

பல' இச்சொல்லில் (ல் + அ = ல) 'அ' உயிர் ஈறு.

உயிர் ஈற்றுச் சொல்முன் வல்லின எழுத்துக்கள் வந்தால், அதன் மெய்யெழுத்து மிகும்.

(எ.கா.)

பலா + சுளை = பலாச்சுளை

பனி + போர் = பனிப்போர்

தினை + துணை = தினைத்துணை

**உடம்படுமெய் : (உயிர் முன் உயிர்):-**

அணில், ஏணி, ஏற்றம். ஐவர், ஔவை, இரும்பு, உண்டு, உயிர், ஊர்வலம், ஓடு.

'மணி' + அடி . இங்கு மணி என்பது நிலைமொழி. இதன் ஈறு (ண் + இ) உயிர். அடி என்பது வருமொழி. அதன் முதல் எழுத்து அ – உயிர். இவ்விரண்டும் ஒன்றாகச் சேரும்போது மணி + அடி = மணி + ய் + அடி = மணியடி இடையில் 'ய்' என்னும் மெய் தோன்றி, மணியடி என்னும் சொல்லாகிறது.

பூவழகு என்னும் சொல்லை எவ்வாறு பிரிக்கலாம்?

பூ + அழகு – 'பூவழகு' என வரும்.

ஆனால், பூவழகு என்னும் சொல், பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு. இடையில் இங்கு 'வ்' என்னும் மெய் எழுத்துத் தோன்றுகிறது.

சேவடி என்பது எவ்வாறு பிரியும்?

சே + வ் + அடி – 'சேவடி' என வரும். இங்கே 'வ்' என்னும் மெய் வந்துள்ளது.

சே + அடி = சே + வ் + அடி = சேவடி, மேலும், சே + ய் + அடி = சேயடி எனவும் வரும்.

இ, ஈ, ஐ ஆகியனமுன் உயிர்வரின் 'ய்' தோன்றும் :

கிளி + அலகு = கிளி + ய் + அலகு = கிளியலகு.

தீ + எரிகிறது = தீ + ய் + எரிகிறது = தீயெறிகிறது.

பனை + ஓலை = பனை + ய் + ஓலை = பனையோலை

அ, ஆ, உ, ஊ, ஓ முன் 'வ்' தோன்றும் :

குண + அழகி = குண + வ் + அழகி = குணவழகி

பலா + இலை = பலா + வ் + இலை + பலாவிலை

திரு + ஆரூர் = திரு + வ் + ஆரூர் = திருவாரூர்

பூ + அழகி = பூ + வ் + அழகி = பூவழகி

கோ + இல் = கோ + வ் + இல் = கோவில்

ஏ முன் உயிர்வரின் 'வ்', 'ய்' இரண்டும் வரும் :

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

அவனே + அரசன் = அவனே + ய் + அரசன் = அவனேயரசன்

ய், வ், வருவதற்குப் புணர்ச்சியில் ஏதேனும் பெயர் உண்டா? நிலைமொழி ஈற்று உயிரும், வருமொழிமுதல் உயிரும் இணையும்போது வ் அல்லது ய் இடையில் தோன்றும். இதற்கு உடம்படுமெய் என்பது பெயர்.

இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும் உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் – நன்னூல், 162

**மெய்யீற்றுப் புணர்ச்சி :-**

‘நூல் + ஆடை’ என்பதனில் நூல் என்பது நிலைமொழி. ஆடை என்பது, வருமொழி. நூல் என்னும் நிலைமொழியின் ஈறு என்ன? மெய் எழுத்து உள்ளது. அதனால் மெய்யீறு..

மெய்யீற்று நிலைமொழிமுன், உயிர்முதல் வருமொழிச் சொற்கள் வந்தால், எவ்வாறு புணரும் என்பதனைப் பாருங்கள். அணில், ஆடை, இலை… என வரும் சொற்கள்தாமே உயிர்முதல் மொழிகள்.

பால் + ஆடை என்பதனில், பால் மெய்யீற்று நிலைமொழி முன் ஆடை உயிர்முதல் வருமொழி சேரும்போது, மெய் (ல்) உயிரோடு (ஆ) சேர்ந்து பாலாடை என்றாகிறது. ஏனெனில், மெய் தனித்து இயங்காது, உயிருடன் சேர்ந்துதான் இயங்கும், இதுவே இயல்பு.

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – நன்னூல், 204

(உடல் – மெய்) இங்கு உடல் என்பது மெய்யெழுத்தைக் குறித்தது. இதுபோல் சிலவற்றைக் கூறுங்கள். மலர் + அடி = மலரடி. கனல் + எரி = கனலெரி. கடல் + ஓரம் = கடலோரம்.

கண், கல், பொன், மண், என்பனவும் மெய்யீற்று நிலைமொழிகளே.

முன்பு சொன்ன மெய்யீறுகள் நெடிலெடுத்தும், இரண்டு முதலாகப் பல எழுத்துக்கள் சார்ந்தும் வந்தவை. குறிலடுத்து வந்த மெய்யீறுகள், இவற்றின்முன் உயிர்முதல்

வருமொழி வந்தால் கண் + அழகு = கண் + ண் + அழகு = கண்ணழகு என்னுமாறு இணையும்.

தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி விரட்டும் – நன்னூல், 205

கல் + அணை = கல்லணை. கண் + ஆடி = கண்ணாடி.

பல் + அழகு = பல்லழகு. விண் + அரசு = விண்ணரசு.

**53] பொருந்தாதது எது?**

1] இடை + அழகு = உயிர்முன் உயிர்

2] மண் + அகல் = மெய்முன் உயிர்

3] கிளி + மூக்கு = உயிர்முன் மெய்

**4] மரம் + கிளை = மெய்முன் உயிர்**

**குறிப்பு :- மரம் + கிளை = மெய்முன் மெய்**

**54] பாடும் பாடல் - இத்தொடரில் பாடல் என்பது -----------?**

1] நிலைமொழி

**2] வருமொழி**

3] பொதுமொழி

4] இவற்றில் ஏதுமில்லை

**55] பலவாண்டு - இச்சொல் பிரியும் முறை ------------ ?**

1] பல் + ஆண்டு

2] பல + வாண்டு

**3] பல + ஆண்டு**

4] இவற்றில் ஏதுமில்லை

**56] பனை + ஒலை - இரண்டிற்கும் இடையில் --------------- தோன்றும்.**

1] வ் **2] ய்** 3] ம் 4] இவற்றில் ஏதுமில்லை

**57] முள் தாளுடன் - என்பதன் பொருள்?**

1] முள்ளுடன் உள்ள இலை

2] முள்ளுடன் உள்ள தலை

**3] முள் குத்திய காலுடன்**

4] இவற்றில் ஏதுமில்லை

**58] பொருந்தாதது எது? வல்லினம் மிகா இடம்.**

1] கதை + சொன்னான் = கதை சொன்னான் (இரண்டாம் வேற்றுமைத்தொகை)

2] அழகனோடு + சென்றான் = அழகனோடு சென்றான் (மூன்றாம் வேற்றுமை விரி)

3] வீட்டிலிருந்து + பார்த்தான் = வீட்டிலிருந்து பார்த்தான் (ஐந்தாம் வேற்றுமை விரி)

**4] எனது + புத்தகம் = எனது புத்தகம் (ஏழாம் வேற்றுமை விரி)**

**குறிப்பு :- எனது + புத்தகம் = எனது புத்தகம் (ஆறாம் வேற்றுமை விரி)**

**59] பொருந்தாதது எது? வல்லினம் மிகா இடம்.**

1] சுடு + சோறு = சுடுசோறு (வினைத்தொகை)

2] கல்வி + கேள்வி = கல்விகேள்வி (உம்மைத்தொகை)

3] படித்த + பாடம் = படித்தபாடம் (பெயரெச்சம்)

**4] கோழி + கொக்கரித்தது = கோழிகொக்கரித்தது (வினைமுற்று)**

**குறிப்பு :- கோழி + கொக்கரித்தது = கோழிகொக்கரித்தது (எழுவாய்த்தொடர்)**

**60] பொருந்தாதது எது? வல்லினம் மிகா இடம்.**

1] வாழ்க + செந்தமிழ் = வாழ்க செந்தமிழ் (வியங்கோள் வினைமுற்று)

2] அது, இது, எது என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. (எ.டு) அது + தான் = அதுதான். அன்று, இன்று, என்று என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. (எ.டு) எத்தனை + பொருள் = எத்தனை பொருள்

3] அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. (எ.டு) எத்தனை + பொருள் = எத்தனை பொருள்

**4] 'படி' என முடியும் வினையெச்சம், உகரவீற்று வினையெச்சம், எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும். (எடு) வரும்படி கூறினாள் ('படி' என்னும் சொல்)**

**குறிப்பு :- 'படி' என முடியும் வினையெச்சம், உகரவீற்று வினையெச்சம், எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது. (எடு) வரும்படி கூறினாள் ('படி' என்னும் சொல்)**

**61] சுவாமி வேதாசலத்தின் மகள் பெயர்?**

**1] நீலாம்பிகை அம்மையார்**

2] காதம்பரி அம்மையார்

3] வளர்மதி அம்மையார்

4] இவற்றில் ஏதுமில்லை

**62] பெற்ற தாய்தனை மகமறந் தாலும் பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும் உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும் உயிரை மேவிய உடல்மறந் தாலும் - என்னும் பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

**1] திருவருட்பா, இராமலிங்க வள்ளலார்**

2] கம்பராமாயணம், கம்பர்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] நான்மணிக்கடிகை, விளம்பிநாகனார்

**63] சுவாமி வேதாசலம் என்னும் தம் வடமொழிப் பெயரைத் தனித்தமிழில் ------------ என்று மாற்றி வைத்துக்கொண்டார்.**

1] பரிதிமாற்கலைஞர்

**2] மறைமலையடிகள்**

3] நவநீதன்

4] வேங்கட மகாலிங்கம்

**64] கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டு வரும்படி சொல்லியிருந்தேன்.அவன் அன்று வாரமல் மறுநாள் வந்து வெறுங்கையோடு நின்றதால் அவனைச் சினந்தேன். அவன் பேசினான்.. - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] மறைமலையடிகள்

2] திரு.வி.க

3] பாவாணர்

**4] கி.ஆ.பெ.விசுவநாதம்**

**65] 'நான் நேற்றே மலைக்கு நடந்தேன்; பலவிடங்களில் அலைந்தேன்; இறுதியில் பெரும் பாறைத்தேன் கண்டு சிறிது மலைத்தேன்; ஒரு கொடியைப் பிடித்தேன்; ஏறிச் சென்று கலைத்தேன்; பானையில் பிழிந்தேன்; நன்றாக வடித்தேன்; அதனைக் கண்டு மகிழ்ந்தேன்; அத்தேனில் சிறிது குடித்தேன்; களித்தேன்; களைந்தேன்; மறந்தேன்; இன்று காலை எழுந்தேன்; நினைத்தேன்; தேனை அடைத்தேன்; எடுத்தேன்; விரைந்தேன்; நடந்தேன்; வந்தேன்; சேர்ந்தேன்; இப்போதுதான் உங்கள் வீட்டில் கொடுத்தேன்" - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] மறைமலையடிகள்

2] திரு.வி.க

3] பாவாணர்

**4] கி.ஆ.பெ.விசுவநாதம்**

**66] நானும் இதைக்கேட்டு மகிழ்ந்தேன். அவனுக்கு உரியதனையும் தந்தேன். அடடா! எப்படி தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே! இதனைப் பார்த்தேன், குடித்தேன் என்று கூறாமல் "படித்தேன்' எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படி "தேன்' என இனிக்கும். என்னே தமிழின் இனிமை! - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] மறைமலையடிகள்

2] திரு.வி.க

3] பாவாணர்

**4] கி.ஆ.பெ.விசுவநாதம்**

## எட்டாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 9

**1] உலக குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே உருகும் அடியர் இதய நெகிழ உணர்வில் எழுநல் உதயமே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**2] கலையும் நிறையும் அறிவு முதிர முதிரு மதுர நறவமே கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**3] அலகில் புவனம் முடியும் வெளியில் அளியும் ஒளியின் நிலயமே அறிவுள் அறிவை அறியும் அவரும் அறிய அரிய பிரமமே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**4] மலையின் மகள்கண் மணியை அனைய முதலை வருக வருகவே வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**5] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] மதி – செல்வம்**

2] அமுதகிரணம் – குளிர்ச்சியான ஒளி

3] உதயம் – கதிரவன்

4] மதுரம் – இனிமை

**குறிப்பு :- மதி – அறிவு**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] நறவம் – மான்**

2] கழுவு துகளர் – குற்றமற்றவர்

3] சலதி – கடல்

4] அலகு இல் – அளவில்லாத

**குறிப்பு :- நறவம் – தேன்**

**7] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] புவனம் – உலகம்

2] மதலை – குழந்தை

3] பருதிபுரி – கதிரவன் வழிபட்ட இடம் (வைத்தீசுவரன் கோவில்)

**4] கேழல் - மான்**

**குறிப்பு :- கேழல் – பன்றி**

**8] குமரகுருபரர் அவர்களின் பெற்றோர் பெயர்?**

**1] சண்முகசிகாமணிக் கவிராயர் – சிவகாமி சுந்தரியம்மை**

2] சிவானந்தம் - முத்துமாடத்தி

3] நவநீதன் - பொற்கொடி

4] இவர்களில் யாருமில்லை

**9] குமரகுருபரர் அவர்களின் ஊர்?**

1] காசி

2] திருவில்லிப்புத்தூர்

**3] திருவைகுண்டம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**10] கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, திருவாரூர் மும்மணிக்கோவை, நீதிநெறி விளக்கம் - ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**11] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**தமிழ், வடமொழி, இந்துத்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர், திருப்பனந்தாளிலும் காசியிலும் தம்பெயரால் மடம் நிறுவி உள்ளார்.**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**12] கீழ்க்கண்டவர்களுள் காசியில் இறைவனது திருவடியடைந்தவர் யார்?**

**1] குமரகுருபரர்**

2] திரு.வி.க

3] ஔவையார்

4] தாயுமானவர்

**13] குமரகுருபரர் அவர்களின் காலம்?**

1] பதினைந்தாம் நூற்றாண்டு

2] பதினாறாம் நூற்றாண்டு

**3] பதினேழாம் நூற்றாண்டு**

4] பதினெட்டாம் நூற்றாண்டு

**14] தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ். --------------- பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் ----------- பாடலென நூறு பாடலால், பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்து இயம்புவது பிள்ளைத்தமிழ்.**

1] 4, 25

2] 5, 20

3] 2, 50

**4] 10, 10**

**15] பிள்ளைத்தமிழ் ------------ வகைப்படும்.**

1] 1  **2] 2**  3] 3  4] 4

**குறிப்பு :- பிள்ளைத்தமிழ் இருவகைப்படும்**

1. ஆண்பால் பிள்ளைத்தமிழ்

2. பெண்பால் பிள்ளைத்தமிழ்

**ஆண்பால் பிள்ளைத்தமிழ் :** 1. காப்பு, 2. செங்கீரை, 3. தாலாட்டு, 4. சப்பாணி, 5. முத்தம், 6. வருகை, 7. அம்புலி, 8. சிற்றில், 9. சிறுபறை, 10. சிறுதேர்.

**பெண்பால் பிள்ளைத்தமிழ் :** 1. காப்பு, 2. செங்கீரை, 3. தாலாட்டு, 4. சப்பாணி, 5. முத்தம், 6. வருகை, 7. அம்புலி, 8. நீராடல், 9. அம்மானை, 10. ஊசல்.

இறுதி மூன்று பருவங்களான சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆண்பாலுக்கும், அம்மானை, கழங்கு (நீராடல்), ஊசல் என்பன பெண்பாலுக்கும் உரியன.

**16] புள்ளிருக்குவேளூரில் (வைத்தீசுவரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் பெயர் -----------------------?**

**1] முத்துக்குமாரசுவாமி**

2] கார்த்திகேயன்

3] பாலசுப்ரமணியம்

4] கந்தசாமி

**குறிப்பு :-** புள்ளிருக்குவேளூரில் (வைத்தீசுவரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் பெயர் முத்துக்குமாரசுவாமி, அவர்மீது பாடப்பட்டமையால் இது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனப் பெயர் பெற்றது. இப்பகுதியில் உள்ள பாடல் வருகைப்பருவத்தில் இடம்பெற்றுள்ளது. இது நூலின் ஆறாவது பருவமாகும். குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வது. தளர்நடையிட்டு வரும் குழந்தையின்

சிறப்புகளை எடுத்துக்கூறி, அருகில் வருக வருக என வாய்குளிர, மனங்குளிர அழைக்கும் பாடல்களைக் கொண்டதாய் இப்பருவம் அமைந்துள்ளது.

**17] -------------------- நூல் எள்ளல், இளமை, அறியாமை, மடமை ஆகிய நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்கிறது.**

**1] தொல்காப்பியம்**

2] திருக்குறள்

3] பழமொழி நானூறு

4] புறநானூறு

**18] நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் இருளாகத் தோன்றும் என்று கூறியவர்?**

1] மாணிக்கவாசகர்

2] விளம்பி நாகனார்

3] தொல்காப்பியர்

**4] திருவள்ளுவர்**

குறிப்பு :- நகைச்சுவையின் இன்றியமையாமையைப் புலப்படுத்த வந்த வள்ளுவர், நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்; பகலும்பாற் பட்டன் றிருள். - என நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் இருளாகத் தோன்றும் என்கிறார்.

**19] நகைச்சுவை உணர்வு மட்டும் தனக்கு இல்லையெனில், எப்பொழுதோ தனது வாழ்க்கையை இழந்திருக்கக்கூடும் எனக் கூறியவர் யார்?**

1] அண்ணா

2] நேரு

**3] காந்தி**

4] காமராசர்

**20] அஞ்சலை அரக்க ! பார்விட் டந்தர மடைந்தா னன்றே வெஞ்சின் வாலி , மீளான், வாலும்போய் வீழ்ந்ததன்றே - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

2] புறநானூறு, கண்ணகனார்

**3] கம்பராமாயணம், கம்பர்**

4] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

**21] காணமுடியாத பேய்களை உருவாக்கி, உயிருள்ள உண்மைப்பிறவிகள் போல நம் கண்முன்னே நடமாடவிட்டு, நகைச்சுவைக்குரிய செயல்களை அவற்றிடையே காட்டியுள்ளனர் யார்?**

1] சீத்தலைச்சாத்தனார்

2] கண்ணகனார்

**3] சயங்கொண்டார்**

4] விளம்பி நாகனார்

**22] ------------------ இருபொருள் தருமாறு சொற்களைப் பாட்டில் அமைத்துப் பாடுவதில் வல்லவர்.**

1] குமரகுருபரர்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

**3] கவி காளமேகம்**

4] இவர்களில் யாருமில்லை

**23] வாலெங்கே ? நீண்டுஎழுந்த வல்லுகி ரெங்கே ? நாலு காலெங்கே ? ஊன்வடிந்த கண்ணெங்கே ? – சாலப் புவிராயர் போற்றும் புலவர்காள் ! நீங்கள் கவிராயர் என்றிருந்தக் கால் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] குமரகுருபரர்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

**3] கவி காளமேகம்**

4] இவர்களில் யாருமில்லை

**குறிப்பு :- நாங்கள் கவிராசர்கள் என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும்படி, கவி என்பதற்குக் குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு பாடினார், கவி காளமேகம்.**

**24] அரசர்கள் புகழ்ந்து போற்றும் புலவர்களாகிய நீங்கள் குரங்கரசர்களாக இருந்தால், உங்களுக்கு இருக்க வேண்டிய நீண்ட வாழும், கூர்மையான நகங்களும் ஊன் வடிந்த கண்களும் உங்களிடம் இல்லையே ! அப்படி இருக்கும் போது, நீங்கள் எப்படிக் கவிராயர்கள் என்று கூறிக்கொள்ள முடியும்? எனக்கேட்டு அவர்களை எள்ளி நகையாடியவர் யார்?**

1] குமரகுருபரர்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

**3] கவி காளமேகம்**

4] இவர்களில் யாருமில்லை

**25] ---------------- என்பவர், ஒருமுறை ஆய்ச்சியரிடமிருந்து பருகுவதற்காக மோர் வாங்கினார். அவர் கண்ணுக்கு மோர், மோராகத் தெரியவில்லை; வெறும் நீராகத் தெரிந்தது. உடனே, ஒரு பாடலும் அவர் மனத்தில் தோன்றியது. "கார் என்று பேர்படைத்தாய்..." எனத் தொடங்கும் பாடலை அமைத்து, அப்பாடலில் நீ வானவெளியில் மேகமாகத் திரியும் போது கார் என்றும், மழையாகப் பூமியில் பெய்யும் போது நீர் என்றும், ஆய்ச்சியர் கையில் வந்த உடன் மோர் என்றும் முப்பேரும் பெற்றாய் எனக்கூறி நகைக்க வைக்கிறார்.**

1] குமரகுருபரர்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

**3] கவி காளமேகம்**

4] இவர்களில் யாருமில்லை

**26] --------------- என்பவரும் நகைச்சுவையாகப் பாடுவதில் வல்லவர். ஒரு பாடலில், ஒருவன் மிருதங்கம் வாசிப்பதனை நகைப்புடன் கூறுகிறார். மிருதங்கத்திலிருந்து எழும் ஓசை இனிமையாக இல்லாமல், எரு தட்டும் ஓசைபோல் இருந்ததாம். அதனைக்கேட்ட பெண்கள் எரு வாங்க, கூடையை எடுத்துக்கொண்டு, ஓசை வந்த திசையை நோக்கி ஓடினார்களாம்.**

1] குமரகுருபரர்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] கவி காளமேகம்

**4] அழகிய சொக்கநாதர்**

**27] ஒரு வீட்டில் பெண் ஒருத்தி பாடிக் கொண்டிருந்தாள். ஆனால், உண்மையில் அவள் பாடவில்லை, கத்திக்கொண்டிருந்தாள். அவள் பாட்டைக் கேட்டு, காணாமல் போன தன் கழுதை திரும்ப வந்தது என்று எண்ணிக் 'கண்டேன் கண்டேன்' என்று, அதன் உரிமையாளர் ஓடி வந்தாராம் என நகைச்சுவை தோன்றப் பாடியவர்?**

1] குமரகுருபரர்

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] கவி காளமேகம்

**4] அழகிய சொக்கநாதர்**

**28] மயிலின் கழுத்து நீண்டு இருப்பதனை நகைச்சுவையாக விளக்கியவர் இவர். அயலான் வீட்டில் அறையில் நடப்பதை எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே இயற்கை யன்னை இப்பெண் கட்கெல்லாம் குட்டைக் கழுத்தைக் கொடுத்தான் உனக்கோ கறையொன் றில்லாக் கலாப மயிலே ! நிமிர்ந்து நிற்க நீள் கழுத்து அளித்தான் -**

**"பெண்களின் கழுத்து நீண்டிருந்தால், அண்டைவீட்டு அறையிலே நடப்பதனை ஆர்வத்தோடு பார்ப்பார்களாம். மயில் அப்படிப் பார்க்காதாம். எனக் கூறிய கவிஞர்?**

**1] பாரதிதாசன்**

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] கவி காளமேகம்

4] அழகிய சொக்கநாதர்

**29] ஆலமரத்திலிருந்து தொங்கிய ஒரு பாம்பை விழுது என நினைத்துப் பற்றியது மந்தி; பாம்பென உணர்ந்ததும் விளக்கைத் தொட்ட குழந்தையைப் போல வெடுக்கெனக் குதித்தது. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தோன்றுவது போலப் பின்னர் விழுதுகள் எல்லாம் அக்குரங்குக்கு பாம்பாகத் தெரிந்தன. அதனால், தலைகால் புரியாமல் தாவிச் சென்ற குரங்கு மர உச்சிக்குச் சென்று திரும்பிப் பார்த்தது. தனது வாலைக்கண்டதும் பதறி, அதுவும் பாம்போ என நினைத்துத் திடுக்கிட்டதாம். இவ்வாறு நகைச்சுவை உணர்வு தோன்றப் பாடியுள்ளவர் யார்?**

**1] பாரதிதாசன்**

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] கவி காளமேகம்

4] அழகிய சொக்கநாதர்

**30] ------------------- என்பவரின், 'மருமக்கள் வழி மான்மியம்' ஒரு நகைச்சுவை களஞ்சியம் என்பர்.**

1] பாரதிதாசன்

**2] நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனார்**

3] கவி காளமேகம்

4] அழகிய சொக்கநாதர்

**31] -------------------- என்பவரின் , 'மருமக்கள்வழி மான்மியம்' . ஒரு நகைச்சுவை களஞ்சியம் என்பர். இக்கதையில் மருமகனாக வருகின்றவன், பள்ளியில் பயில்கின்ற முறை நகைப்பூட்டுகின்றது. படிக்கச்சென்றவன் எவற்றையெல்லாம் பணயம் வைக்கிறான் பாருங்கள்!.. ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்; போளிக் காகப் புத்தகம் பணயம்; சீடைக் காகப் சிலேட்டு பணயம் முறுக்குக் காக மோதிரம் பணயம் காப்பிக் காகக் கடுக்கன் பணயம் கூத்துக் காகக் குடையும் பணயம் -இப்படிப் பணயம் வைத்தால், படித்து எங்கே முன்னேற்றமடையப்போகிறான்? என நடைமுறைச் சமுதாயத்தை எள்ளுகின்றவர் யார்?**

1] பாரதிதாசன்

**2] நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகனார்**

3] கவி காளமேகம்

4] அழகிய சொக்கநாதர்

**32] தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?**

1] 2 2] 4 **3] 5** 4] 8

**குறிப்பு:- 1] எழுத்திலக்கணம், 2] சொல்லிலக்கணம், 3] பொருள் இலக்கணம், 4] யாப்பிலக்கணம், 5] அணியிலக்கணம்**

**33] யாப்பு என்றால் என்ன?**

1] அசைத்தல்

2] மாற்றுதல்

**3] கட்டுதல்**

4] கூறுதல்

**குறிப்பு :- யாப்பு என்றால் கட்டுதல் என்பது பொருள். யாக்கை – யாத்தல் = யாப்பு. எலும்பு, தசை, நரம்பு முதலியவற்றால் உடல் கட்டப்பட்டு இருப்பது போலச் செய்யுளுக்கு உரிய உறுப்புகளைக்கொண்டு பாடலை உருவாக்குதலே யாப்பு எனப்படும்.**

**34] யாப்பின் உறுப்புகள் எத்தனை?**

1] 3 2] 4 3] 5 **4] 6**

**குறிப்பு :- எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் யாப்பின் உறுப்புகளாகும்.**

**35] ஒரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலிப்பது --------------?**

**1] அசை**

2] சீர்

3] தளை

4] அடி

**36] அசை எத்தனை வகைப்படும்?**

1] 1 **2] 2** 3] 3 4] 4

**குறிப்பு :- ஒரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலிப்பது அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.**

**37] அசைகள் பல சேர்ந்து அமைவது, ------------------ எனப்படும்.**

1] அசை

**2] சீர்**

3] தளை

4] அடி

**38] சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்த அமைவது ------------ எனப்படும்.**

1] அசை

2] சீர்

**3] தளை**

4] அடி

**39] இரண்டு அல்லது பல சீர்கள் சேர்ந்து அமைவது ------------- எனப்படும்.**

1] அசை

2] சீர்

3] தளை

**4] அடி**

**40] அடிகள் இரண்டு முதலியவனாகத் தொடர்ந்து அடுக்கிப் பாடுவது, பா எனப்படும். இவ்வண்ணம், செய்யுள் இலக்கணத்தைக் கூறுவது ---------------- எனப்படும். செய்யுள் என்றாலும் பாட்டு என்றாலும் ஒன்று. கவிதை என்றும் தூக்கு என்றும் கூடச் சொல்லலாம்.**

**1] யாப்பிலக்கணம்**

2] அணிஇலக்கணம்

3] பொருள் இலக்கணம்

4] சொல்லிலக்கணம்

**41] கண்இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்; வண்ண மலர்மாலை வாடுதலால் – எண்ணி; நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்; அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு - இந்த பாடல் கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

1] குறள் வெண்பா

**2] நேரிசை வெண்பா**

3] கலிப்பா

4] வஞ்சிப்பா

**42] நாடா கொன்றோ காடா கொன்றோ; அவலா கொன்றோ மிசையா கொன்றோ; எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே - இந்த பாடல் கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

**1] ஆசிரியப்பா**

2] நேரிசை வெண்பா

3] கலிப்பா

4] வஞ்சிப்பா

**43] உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்; மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்; அயர்வறும் அமரர்க ளதிபதி யவனவன்; துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே - இந்த பாடல் கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

1] ஆசிரியப்பா

2] நேரிசை வெண்பா

**3] கலிப்பா**

4] வஞ்சிப்பா

**44] வளையாடு மலர்ச்சுனை நீரினிடை; வளையாடுகை மங்கிய ரன்னமென; விளையாடுவ ரோடுவர் கூடுவர்பின்; விளையாடுவர் பைங்கிளி மேவுறவே - இந்த பாடல் கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது?**

1] ஆசிரியப்பா

2] நேரிசை வெண்பா

3] கலிப்பா

**4] வஞ்சிப்பா**

**45] தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன ----------------- குறித்த தமிழ் நூல்கள்.**

1] அணியிலக்கணம்

2] எழுத்திலக்கணம்

3] பொருள் இலக்கணம்

**4] யாப்பிலக்கணம்**

**46] உவமை, உவமேயம் இவ்விரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு வரப்பாடுவது --------------------- ஆகும்.**

**1] உவமையணி**

2] பிறிது மொழிதல் அணி

3] உருவக அணி

4] தற்குறிப்பேற்ற அணி

குறிப்பு :- உவமையணி :- ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்; பேரறி வாளன் திரு .

ஊர் நடுவே உள்ள குளம் நிரம்பினாற் போன்றதே உலக உயிர்களையெல்லாம் விரும்பி உதவிசெய்யும் பேரறிவு உடையானிடம் சேர்ந்த செல்வம்.

இப்பாடலில், ஊருணி நீர்நிறைதல் என்பது உவமை. உலகவாம் பேரறிவாளன் திரு என்பது உவமேயம், அற்று என்பது உவம உருபு.

இவ்வாறு உவமை, உவமேயம் இவ்விரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு வரப்பாடுவது உவமையணி ஆகும்.

47] புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை; வாய்மையாற் காணப் படும் - என்ற குறளில் பயின்று வந்துள்ள அணி?

1] உவமையணி

2] பிறிது மொழிதல் அணி

**3] எடுத்துக்காட்டு உவமை அணி**

4] தற்குறிப்பேற்ற அணி

**குறிப்பு :- எடுத்துக்காட்டு உவமை அணி :- புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்.**

ஒருவனது உடல் தூய்மை நீரில் குளிப்பதனால் புலப்படும். உண்மையை பேசுவதனால், உள்ளத்தின் தூய்மை புலப்படும். இப்பாடலில், உடம்பின் தூய்மை நீரால் அமையும் என்பது உவமை. உள்ளத்தின் தூய்மை உண்மை பேசுவதனால் உண்டாகும் என்பது உவமேயம். இவ்விரண்டனையும் இணைக்கும் உவம உருபு இல்லை. இப்பாடலில் உவமை, உவமேயம் இரண்டும் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டு இடையில் உவம உருபு மறையுமாறு அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பாடல் எடுத்துக்காட்டு உவமை அணி.

**48] இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர் பைங்கூழ் சிறுகாலைச் செய் - இந்த பாடலில் பயின்று வந்துள்ள அணி?**

1] உருவக அணி

2] பிறிது மொழிதல் அணி

**3] எடுத்துக்காட்டு உவமை அணி**

4] தற்குறிப்பேற்ற அணி

**குறிப்பு :- உருவக அணி :- “இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர் பைங்கூழ் சிறுகாலைச் செய் .”**

**இப்பாடலில் இன்சொல் – விளைநிலம். ஈதல் - விதை. வன்சொல் – களை. வாய்மை – உரம் (எரு). அன்பு – நீர். அறம் – கதிர் என உருவகிக்கப் பெற்றுள்ளதனால், இப்பாடல் உருவக அணியாகும். இவ்வாறு உவமானம் வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில், உவமானத்தின் இயல்புகளை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது உருவக அணியாகும்.**

**மதிமுகம் – மதிபோன்ற முகம் – உவமை**

**முகமதி – முகம் ஆகிய மதி – உருவகம்**

**49] செய்யுள் இயற்றும் இலக்கணத்துக்கு -------------- எனப் பெயர்?**

1] அணி இலக்கணம்

2] சொல் இலக்கணம்

3] பொருள் இலக்கணம்

**4] யாப்பிலக்கணம்**

**50] உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மேல் ஏற்றிக் கூறுவது --------------- அணி.**

**1] உருவக அணி**

2] பிறிது மொழிதல் அணி

3] எடுத்துக்காட்டு உவமை அணி

4] தற்குறிப்பேற்ற அணி

**51] ---------------- என்பது தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகும். இதனைக் குடிமக்கள் காப்பியம் என அறிஞர் போற்றுவர்.**

**1] சிலப்பதிகாரம்**

2] மணிமேகலை

3] வளையாபதி

4] பெரியபுராணம்

**52] சேரநாடு வேழமுடைத்து; பாண்டிநாடு முத்துடைத்து; சோழநாடு சோறுடைத்து; தொண்டைநாடு சான்றோருடைத்து என்பது -------------------- என்பவரின் வாக்கு.**

1] திருவள்ளுவர்

2] மாணிக்கவாசகர்

3] சேக்கிழார்

**4] ஔவை**

**53] பள்ளிக்கு செல்கின்ற தம்பி - நன்கு; பாடங்கள் பயின்றிடு நம்பி; துள்ளி நீ குதித்தாடு தம்பி - இன்பம் துய்க்கின்ற நீ அன்றோ தும்பி - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] அப்துல் ரகுமான்

2] தாரா பாரதி

3] வாணிதாசன்

**4] கோ.அ. அப்துல் லத்தீப் (என் தமிழ்)**

**54] அமிழ்தான பாடல்கள் பாடு - புது; அறிவூட்டும் நூல்களை நாடு; தமிழ்தந்த கலையாவும் தேடு; பகை தனைக்கண்டால் நீயங்குச் சாடு - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] அப்துல் ரகுமான்

2] தாரா பாரதி

3] வாணிதாசன்

**4] கோ.அ. அப்துல் லத்தீப் (என் தமிழ்)**

**55] ஏழைக்கு நீ அன்பு காட்டு; உனை எதிர்த்தாரை நீ பொங்கி ஓட்டு; கோழைக்கு வீரத்தை ஊட்டு; உயர் கொள்கைக்காய் நீ வாழ்ந்து காட்டு - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] அப்துல் ரகுமான்

2] தாரா பாரதி

3] வாணிதாசன்

**4] கோ.அ. அப்துல் லத்தீப் (என் தமிழ்)**

**56] ஒளிமிக்க எதிர்காலம் கண்டு - நீ; உயர்வாய் அந்நம்பிக்கை உண்டு; களி இன்ப நல்வாழ்வு கொண்டு - கன்னித் ; தமிழுக்கு ஆற்றுக தொண்டு - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] அப்துல் ரகுமான்

2] தாரா பாரதி

3] வாணிதாசன்

**4] கோ.அ. அப்துல் லத்தீப் (என் தமிழ்)**

**57] அடிசில், அமலை, அயினி, உண்டி, உணா, ஊண், கூழ், சொன்றி, துற்றி, பதம், பாத்து, பாளிதம், புகா, புழுக்கல், புற்கை, பொம்மல், மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி - ஆகிய பொருள் தருவது?**

1] ஆகாயம்

**2] சோறு**

3] சோலை

4] இரவு

**58] அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட - என்று கூறும் நூல்?**

**1] நாலடியார்**

2] புறநானூறு

3] சீவக சிந்தாமணி

4] மலைபடுகடாம்

**59] கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் - என்று கூறும் நூல்?**

1] நாலடியார்

**2] புறநானூறு**

3] சீவக சிந்தாமணி

4] மலைபடுகடாம்

**60] உப்பிலிப் புழுக்கல் - என்று கூறும் நூல்?**

1] நாலடியார்

2] புறநானூறு

**3] சீவக சிந்தாமணி**

4] மலைபடுகடாம்

**61] இறடிப் பொம்மல் பெறுகுவீர் - என்று கூறும் நூல்?**

1] நாலடியார்

2] புறநானூறு

3] சீவக சிந்தாமணி

**4] மலைபடுகடாம்**

**62] பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர் - என்று கூறும் நூல்?**

1] நாலடியார்

2] புறநானூறு

3] சீவக சிந்தாமணி

**4] பெரும்பாணாற்றுப்படை**

**63] வளைகதிர் வல்சி கொண்டளை மல்க - என்று கூறும் நூல்?**

1] நாலடியார்

**2] புறநானூறு**

3] சீவக சிந்தாமணி

4] மலைபடுகடாம்

**64] கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை - இவற்றுடன் தொடர்புடைய பொருள் எது?**

1] மிகுதி

**2] பேசு**

3] உலகம்

4] சூரியன்

**65] ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன் - இவற்றுடன் தொடர்புடைய பொருள் எது?**

1] மிகுதி

2] பேசு

3] உலகம்

**4] சூரியன்**

**66] சால, தவ, நனி, கூர், கழி - இவற்றுடன் தொடர்புடைய பொருள் எது?**

**1] மிகுதி**

2] பேசு

3] உலகம்

4] சூரியன்

**67] புவி, தரணி, நானிலம், பார், வையம் - இவற்றுடன் தொடர்புடைய பொருள் எது?**

1] மிகுதி

2] பேசு

**3] உலகம்**

4] சூரியன்

**68] பிள்ளை, குழவி, மகவு, சேய் - இவற்றுடன் தொடர்புடைய பொருள் எது?**

1] மிகுதி

2] பேசு

**3] குழந்தை**

4] சூரியன்

**69] தாயைப்போலப் பிள்ளை , நூலைப் போலச் சீலை - என்னும் பழமொழியில் உள்ள பொருள் ?**

1] அறிவுரை

2] நம்பிக்கை

**3] உறவுமுறை**

4] நகைச்சுவை

**70] ஆடிப்பட்டம் தேடி விதை - என்னும் பழமொழியில் உள்ள பொருள் ?**

1] அறிவுரை

2] நம்பிக்கை

**3] உழவு**

4] நகைச்சுவை

**71] மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே - என்னும் பழமொழியில் உள்ள பொருள் ?**

**1] அறிவுரை**

2] நம்பிக்கை

3] உறவுமுறை

4] நகைச்சுவை

**72] தைபிறந்தால் வழி பிறக்கும் - என்னும் பழமொழியில் உள்ள பொருள் ?**

1] அறிவுரை

**2] நம்பிக்கை**

3] உறவுமுறை

4] நகைச்சுவை

**73] பசியாமல் இருக்க வரந்தருவேன், கொஞ்சம் பழையது இருந்தால் போடு - என்னும் பழமொழியில் உள்ள பொருள் ?**

1] அறிவுரை

2] நம்பிக்கை

3] உறவுமுறை

**4] நகைச்சுவை**